மோட்டார்

THE motor
SEPTEMBER, 1968

மலர் 10 கீலக - புரட்டாசி விலை 50 காசு இதழ் 6

ஒவ்வொரு பிரேக்ஹோஸ்
தும் இந்த சீலை பார்த்து
வாங்குங்கள்

சூப்பர் சீல்ஸ் இந்தியா பி. லிமிடெட்.
ரிஜிட். ஆபீஸ்: 21-A. நிஜாமுதீன் வெஸ்ட், புதுடில்லி - 13

GENUINE

INWENTER

PRECISION AUTO PARTS

Clutch Lever Repair Kits

For ALL CARS & TRUCKS





INWENTER

Worm followers

for T. M. B. Trucks and Dodge Kew



Manufactured in Technical Collaboration with

CHATINA LTD. KITCHNER (Ontario) CANADA

INWENTERS

(INDIAN WATCH ENTERPRISES)

AUTOMOBILE DIVISION

11/43, Tamarind Lane Fort, Bombay-1.
Phone: 252174

Works: J. B. Nagar, Andheri-Kurla Road,
Bombay-59. Phone: 572244
Grams: "COLWATCH"

திறமையான இன்ஜினியரிங்
சாதனையும் தொழில் நுட்ப
திறமையும் இணைந்த

ஆட்டோ பிஸ்டன்

டாடா மெர்சிடஸ் பென்ஸ் டிரக்
மற்றும் பஸ்களுக்கு

Ref : No. AP-2026 போர்ஜிங்
அனோடைஸ் செய்யப்பட்டு உங்களுக்கு
அளிப்பவை ○ மிக நேர்த்தியான
வடிவமைப்பு ○ உறுதியானது ○
ஒரே அளவுள்ளது ○ அதிகப்படியான
சூட்டை எதிர்க்கும் சக்தியுள்ளது ○

மேலும் ஆட்டோமோடிவ் & இண்டஸ்டிரியல்
அப்ளிகேஷன்களுக்கான பிஸ்டன்களும்
தயாரிக்கிறோம்.



தயாரிப்பாளர்கள் :

**ஆட்டோ பிஸ்டன் மானுபாக்சரிங்
கம்பெனி பிரைவேட் லிட்.,**
படாலா ரோடு, அமிர்தசரஸ்

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள் :

பிரிட்டிஷ் மோட்டார் கார் கம்பெனி (1934) பிரைவேட் லிட்.,
ஜி. டி. ரோடு, ஜலந்தர் நகரம்.

சென்னை, மைசூர் மற்றும் கேரளாவிற்கான அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் :

தி ஆட்டோ சேல்ஸ் கம்பெனி 42, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2





DVD

டி. வி. டி

ஆட்டோ மோடிவ்.
ப்யூயல் இன்ஜெக்ஷன்
உபகரணங்கள்.




நன்கு பொருந்துகின்றன.
நீடித்து உழைக்கின்றன.
சிக்கனமானவை.

பயினியர் ஆயில் சீல்ஸ்களுக்கு

தென் இந்திய ஏஜெண்டுகள்

நுணுக்கத்திற்கும் நம்பிக்கைக்கும் உரியவை
பல்வேறு வகைகளில் கிடைக்கும்





லாரி, பஸ் சொந்தக்காரர்களே!!!

உங்கள் பியூயல் இன்ஜெக்ஷன் ஆட்டோமைசர்கள் சரியாக இருக்கின்றனவா என்பதைத் தெரிந்துகொள்ள இலவச சோதனைக்கு எம்மிடம் வாருங்கள்.

பெர்கின்ஸ்/பென்ஸ் பியூயல் இன்ஜெக்ஷன் பம்ப், செல்ப் ஸ்டார்டர், டைனமோ ஓவர்ஹால் வேலைகளை நாங்கள் உடனுக்குடன் நவீன இயந்திரங்களைக்கொண்டும், கைதேர்ந்த இன்ஜினியர்களைக் கொண்டும் செய்து தருகிறோம்.

எங்கள் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அழைக்கிறோம்.

தி இந்தியன் இன்ஜினியரிங் அண்டு டிரேடிங் கம்பெனி

15, வாலர்ஸ் ரோடு, சென்னை-2

டெலிபோன்: 88761 தந்தி: FUELPUMP

GP

பி. எஸ்.

சிலிண்டர்
ஸ்லீவ்ஸ்
& லைனர்கள்

B. S.

CYLINDER
SLEEVES
& LINERS



எல்லாவகை
வண்டிகள்
ஆட்டோமொபைல்
அக்ரிகல்சரல் &
இன்டஸ்ட்ரியல்
என்ஜின்களுக்கு
ஏற்றது

FOR
ALL TYPES
OF
AUTOMOBILE
AGRICULTURAL
& INDUSTRIAL
ENGINES



Manufactured by :

BALBIR SINGH & CO.,

SHANKER SHET ROAD, POONA - 9.

தயாரிப்பாளர்கள் :

பல்பிர் சிங் & கோ.,

சங்கர்ஷெத் ரோடு, பூனா-9.

போன்: 24804
24688

தந்தி : SLEEVES.



இந்த சின்னத்தை
பார்க்கவும்

உங்களின்
நம்பிக்கையான
ஆட்டோமோடிவ்
பார்ட்டுகள்

ஒரிஜினல் எக்விப்மெண்ட் குறிப்பீட்டிற்கு ஏற்ப ஒவ்வொரு பார்ட்டும் சிறந்த மூலப்பொருளால் நல்ல வேலைப்பாடுடன் உத்திரவாதமாக தயாரிக்கப்படுகிறது. ஆகவே பிரபல தயாரிப்பாளர்கள் 'GS' பார்ட்டுகளையே விரும்புகின்றனர்.

G.S.

REGD. T.M. No. 165668

GURMUKH SINGH & SONS (REGD.)
LUDHIANA-3. INDIA
PHONE: 2161 • GRAMS: GURMUKH (M)



BRAMEC பிரமக்

பிரேக் லைனிங்குகள் ஆட்டோமொபைல் தொழில் ஆரம்பமுதல் மிகப் புகழ்பெற்றது.

பிரமக் பிரேக் லைனிங்குகள், உலகப் புகழ்பெற்ற, அமெரிக்காவின் பெண்டிக்ஸ் கார்ப்பரேஷனின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படுவதால் ஆட்டோமொபைல் தொழில் ஆரம்பமுதல் சேவை செய்து வருகிறது.

உலக முழுதும் சிறந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள **பிரமக்** பிரேக் லைனிங்குகள், நெடுஞ்சாலை மற்றும் நின்று-கவனித்து போகும் நகரத்திலும் ஓட்டுவதற்கு ஏற்ப அதிகப்படியான உஷ்ணத்தை சமாளித்து, நிறமாருமலும் இருக்க தயாரிக்கப்படுகிறது. இக்காரணங்களினால் சாலைகளில் மிக்க பாதுகாப்பான இயக்கத்திற்கு சிறந்த **பிரமக்** பிரேக் லைனிங்குகளே வாங்குவதற்கு ஏற்றது.

பிரமக் சூரி பிரைவேட் லிமிடெட்,

1655, S. P. முகர்ஜி மார்க், டில்லி-6.

தென்னிந்திய விநியோகஸ்தர்கள்:

மெகராஜ் சேதி & சன்ஸ்,

41-G/H. ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

grsphisads/BS/227



"பாரதத்தின் மிகப் பெரிய தேசீய பாட்டரி தயாரிப்பாளர்கள் எனக்குச் செய்வது என்ன?"

சொல்கிறேம், கண்டக்டர் சார்.
நீங்கள் பிரயாணம் செய்கிறீர்கள்
பஸ்ஸில்
காரில்
டாக்ஸியில்
இரயிலில்
நீங்கள் டெலிபோனில் பேசுகிறீர்கள்.
நீங்கள் தந்தியிலே செய்தி பெறுகிறீர்கள்.
இச் செயல்களுக்கெல்லாம் ஒரு முக்கிய ஆதாரம் எதுவென்று உங்களுக்குத் தெரியுமா?
பாட்டரிகள்—ஆமாம், 'ஸ்டாண்டர்ட்' பாட்டரிகள்.
நவீன போக்குவரத்து, அஞ்சல், பாதுகாப்பு மற்றும் அவசரகால ஒளி அமைப்புகள் ஆகியவற்றின் ஒவ்வொரு துறையிலும், பாரதத்தின் மிகப் பெரிய தேசீய பாட்டரி தயாரிப்பாளர்களான 'ஸ்டாண்டர்ட்' கடந்த 25 ஆண்டுகளாக ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகிறேம்.
அதனுல்தான், தரத்தை மதிக்கும் எவருமே எங்களே அணுகுகிறுர்கள்.



nimas-STB-108R1

ஸ்டாண்டர்ட்



பாட்டரி

ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - கல்கத்தா
புது டில்லி - மதராஸ்
கௌஹாத்தி



பெப்சு இண்டஸ்ட்ரீஸ்

மோட்டார் பார்ட்டுகள் தயாரிப்பாளர்கள்

போன்: 46 ஜி. டி. ரோடு, பக்வாரா (பஞ்சாப்) தந்தி: DRAGLINK.

PEPSU INDUSTRIES

G.T. Road, Phagwara (Pb)

சென்னை, ஆந்திரா, கேரளா, மைசூர் ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்

ஸ்ரீ கே.பி.காலியா, C/o பெப்சு இண்டஸ்ட்ரீஸ்

பக்வாரா, பஞ்சாப்.



the world rides on **UMC** *Springs....*

Famous in India UMC Springs are now equally popular all over the Continents of Asia and Africa. Despite stiff competetion from developed countries more and more customers are placing confidence in UMC Springs. These are manufactured from high quality alloy steel, scientifically heat-treated and tested at every stage.



UMC SPRINGS ARE EQUAL TO THE WORLDS' BEST.

UMC Springs, U Bolts & Axle Studs are BETTER for replacement–BETTER in quality–BETTER in performance and of cource BETTER in price too.

SUPERIOR QUALITY. TEMPERED UMC SPRINGS TESTED GUARANTEED

Agents wanted in unrepresented areas

UNION MANUFACTURING COMPANY,

UMC Building, Chakala Road, Andheri East, BOMBAY-69. (India)
Phone: 571732 City office: 351671 • 353942
Grams : "YOUEMCEE"-Andheri-Bombay. "SUCCESSFUL"-Girgaum-Bombay.

studio creata

OUR

NEXT ISSUE

THE motor

DEEPAVALI GIFT

In the brilliant tradition
of Producing special supplements
with unsurpassed talent & skill

★

announcing

★

PAL

THE PREMIER AUTOMOBILES LIMITED, BOMBAY

Extraordinary Special Supplement

(FIAT - FARGO - DODGE Vehicles)

Prestige
Production of

THE motor

★

RELEASING

★

OCTOBER 1968

- ★ Field day for Publicity
- ★ Great demand for Space
- ★ Rush your advertisements atonce

எமது
அடுத்த இதழ்

மோட்டாரின்
தீபாவளி பரிசு

விசேஷ மலர்களை தயாரித்து
வெளியிடுவதில் நிகரற்ற திறமையை
நிலைநாட்டியிருக்கும் புகழ்வரிசையில்

★

அறிவிக்கிறோம்

★

பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், பம்பாய்

விசேஷ மலர்

(பியட், பார்கோ/டாஜ் வண்டிகள்)

மோட்டாரின்
மகோன்னதமான
படைப்பு

★

வெளிவருகிறது

★

அக்டோபர் 1968

★ விளம்பரம் செய்வதற்கு நல்ல வேட்டை
★ இடத்திற்கு கடும் போட்டி
★ முந்துங்கள். உங்களது விளம்பரங்களை
உடனே அனுப்பிவையுங்கள்



மோட்டார்

அதிகமாக விற்பனையாகும் ஒரே தொழில்துறை மாதப் பத்திரிகை

மலர் 10 கீலக, புரட்டாசி விலை 50 காசு இதழ் 6

THE motor

(TAMIL MONTHLY)

7/9, State Bank Street,
First Lane, Mount Road,
MADRAS-2.

★

The Official Organ of the Tamilnad Motor Parts Dealers Association, Madras Motor Parts Dealers Association, Coimbatore Motor Parts Dealers Association, Trichy Motor Parts Dealers Association, Madras State Bus Owners Association, Contract Carriage (Taxi) Owners Association, Madras.

★★★

வருட சந்தா ரூ. 5

3 ஆண்டுகளுக்கு ரூ. 13

தந்தி: 'MAGMOTOR"

போன் : 86305

தமிழ்நாடு மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம்
25, நாயக்கர் புது தெரு, மதுரை-1. போன் : 3672

சென்னை மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம்,
22, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2. போன்: 81363

கோயம்புத்தூர் மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம்
10/56, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர்.

திருச்சி மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம்
10, இப்ராஹிம் பார்க் தெரு, திருச்சி-8.

சென்னை ராஜ்ய பஸ் உரிமையாளர் சங்கம்
49, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2. போன் : 84794

காண்டிராக்ட் காரேஜ் (டாக்ஸி) ஓனர்கள் சங்கம்
7/4, நாகேசுவரராவ் ரோடு,
தி. நகர், சென்னை-17. போன் : 444191

ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ள வெளியீடு.

இந்த இதழில் ...

		பக்கம்
ஹயர்—பர்சேஸ் சட்டம் —தலையங்கம்	...	11
மோட்டாரின் கதை —திரு. நசீர்	...	13
முக்கிய கோர்ட் தீர்ப்புகள்		27, 28, 67, 68
ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் டிவின் ஸ்லாட் கன்வேயர்	...	30
ஸ்பேர் பார்ட்ஸ் சூப்பர் மார்க்கெட்!	...	36
நஷ்டமின்றி பஸ் சர்வீஸ் நடத்த திரு G. D. நாயுடு வைத்திருக்கும் திட்டம்	...	40
பைமெட்டல் பேரிங்ஸ் மகத்தான சாதனை	...	46
பேசும் டயர்!	...	49
மெக்கானிக்குகளுக்கு குறிப்புகள்	...	56
"வாயாடி"	...	61
தமிழக லாரிகளும் 16000 Kgs. ஏற்றலாம்	...	62
ஹெட் காஸ்கெட்டே தேவையில்லாத புது ரக லேலண்டு இன்ஜின்	...	72

THE motor

INDEX TO ADVERTISERS

	PAGE
A	
Auto Piston Mfg. Co	1
Autolite Mfg. Co	16
Automotive & Allied Indus	17
Automobile Products of India	41
Asiatic Tyres	44
Auto Products & Sales Agencies	61
B	
Balbir Singh & Co	3
Bremec–Suri (P) Ltd	5
Bombay Motor Trdg. Co	26
Bimetal Bearings	47
Bon International	65
British Motor Car Co (ARI)	69
C	
Carburettors Ltd	49
D	
Deleepkumar & Co	67
Diamond Motors	70
G	
Gurmukh Singh & Sons	4
Gulati Auto Indus	9
Gian Singh & Co	13
Glass & Miniature Bulb Indus	23
Guptajee Auto Indus	33
H	
Himco Batteries	31
Hubs & Drums Pvt. Ltd	35
Hejalux	35
Hindustan Motors Ltd	34–a
I	
Inwenters	Cover 11
Indian Engg. & Trdg. Co	2
India Pistons	10
Inchek	21
India Leaf Spring Mfg. Co	24
India Tyre	37
Inderjit Industries	53
India Auto Industries	71
J	
John Wriston Corporation	19
Jai Bharat Auto Indus	37
K	
Kasi & Sethu	12
M	
Motor Industries Co	32
M. M. Rubber Co	43
P	
Pepsu Industries	7
Prabhat Industries	57
R	
Rosy Industries	27
Rukson Automobiles	55
Rawel Industries	59
S	
Super Seals	Cover I
Standard Auto Parts	Cover II
Standard Batteries	6
Sagar & Sons	39
Singson & Co	45
Skyline Industries	51
T	
Tarasingh Harbindersingh	29
T. V. S.	63
U	
Union Mfg. Co	8
V	
Vinyl General Indus	Cover IV
Visram Automotive Service (pp)	14, 15 & 25

For dignified Printing

★

Welcome to

Manikandan Press

7/9, State Bank Street, 1st Lane,
Mount Road, MADRAS-2.

Phone: 86305

- ★ Specialized Service to Auto Part Traders
- ★ Valuable assistance for Preparation of Folders, Colour Pamphlets & other Publicity Materials
- ★ Congenial Personal attention



Today's most versatile precision built...

AGLO Oil Seals are made to original specifications to meet rigid quality standards. They are guaranteed to check the leakage of lubricants. Available in the widest range for all types of vehicles

AGLO OIL SEALS

Sole Distributors

GULATI AUTO INDUSTRIES

202, GURU NANAK AUTO MARKET, KASHMERE GATE, DELHI - 6

Distributors for Southern Zone :

ASIATIC AUTOMOBILES,

41-A, General Patters Road, Madras-2.

&

83-J.C. Road, Bangalore-2.

It pays to stock and sell IP quality products

THE BENEFITS OF THE WIDEST RANGE OF PRODUCTS... TO MATCH A DIVERSE VEHICLE POPULATION



India Pistons manufacture a wide range of piston assemblies, designed and developed to the highest international standards, for all popular types of cars, commercial vehicles, jeeps, tractors, motor cycles, scooters and stationary diesel engines.

Besides Original Equipment, India Pistons produce assemblies to their usual high standards as replacements for a large diversity of current and pre-dated vehicles. The present production range includes 80 types of pistons, 1600 types and sizes of rings and 60 types of cylinder liners.

INDIA PISTONS LTD.
SEMBIAM MADRAS-11

IP-166



மோட்டார்

September, 1968.

ஹயர்-பர்சேஸ் சட்டம்

தவணை முறையில் பணம் கட்டி மோட்டார் வாகனங்களையும், மற்ற பொருள்களையும் வாங்கும் ஹயர்-பர்சேஸ் பேரங்களை ஒழுங்குபடுத்த இந்திய சர்க்கார் கொண்டுவந்திருக்கும் ஹயர்-பர்சேஸ் சட்டத்தின் முக்கிய ஷரத்துகளின் விவரங்களை இந்த இதழின் உள்பக்கங்களில் காணலாம்.

கடன் வாங்குபவர், கடன் தருபவர் இருவரின் நல உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியிருப்பதால், இதை பொதுப்படையாகக் கருத்தில் கொண்டு இச்சட்டம் தொகுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இச்சட்டம் வரவேற்கத்தக்கதே.

சட்டத்திலுள்ள, குறிப்பிட்ட சில ஷரத்துகளை அமல் நடத்துவது கிரியாம்சையில் காரியசாத்தியமற்றதாக இருக்கலாம்; எனினும் செலக்ட் கமிட்டியின் பரிசீலனையில் இதற்கு தக்க பரிகாரங்கள் தேடப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு நடைபெறும் **ஒருசில** நல்ல ஹயர்-பர்சேஸ் நிறுவனங்களைத் தவிர, ரத்தத்தை உறிஞ்சும் வேறு பல பெருச்சாளிகள் இப்பேரங்களில் கொள்ளை லாபமடித்துவருகின்றனர். உதாரணமாக பல “சேட்”டுகளைக் கூறலாம். சேட்டுகளிடம் சிக்கி, கடன்வாங்கி, வண்டி போட்டு திவாலானவர்கள் எத்தனையோ பேர்! வண்டியையே விலைக்கு வாங்கிவிட்டதாக ஒரு தனி வெத்து காகிதத்தில் இவர்கள் கையெழுத்து வாங்கிக்கொள்வது ஊரறிந்த ரகசியம்! ஆகவே ஹயர்-பர்சேஸ் பேரங்களை நடத்துவதற்கு **லைசென்ஸ் முறையை** ஏற்படுத்த வேண்டும். இதற்கான ஷரத்தை செலக்ட் கமிட்டி சேர்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, இவ்வளவுதான் வட்டி வாங்கவேண்டும்; இன்ன விகிதாசாரத்திற்குமேல் வட்டி வசூலிக்கக்கூடாது என்று நிபந்தனை ஏதும் சட்டத்தில் குறிப்பிடாமல் விடப்பட்டிருப்பது ஒரு பெரிய குறை. வட்டி விஷயம்தான் ஆளை விழுங்கிவிடுகிறது! (இதுபற்றி “மோட்டாரின்” 1967 ஆகஸ்ட் இதழின் தலையங்கத்தில் ஏற்கனவே விளக்கமாக சுட்டிக்காட்டியிருக்கிறோம்). இதையும் செலக்ட் கமிட்டி ஆராய்ந்து, வட்டி அளவை திட்டவட்டமாக நிர்ணயித்து விடவேண்டும்.

இச்சட்டத்தின் பலனாக புது வண்டிகள் போடுவதற்கு பிளீட் ஆபரேட்டர்களுக்கு தூண்டுதல் ஏற்படும் என்றால், அது அனைவருக்கும் மகிழ்ச்சியையே தரும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்

நியாய விலைக்கு டயர் வேண்டுமா?

டயர் டீலர்கள் சங்கத்தில் பெயர் பதிவு செய்து கொள்ளுங்கள்

கார், ஸ்கூட்டர், டிராக்டர் டயர்கள் கிடைக்கும்

கார், ஸ்கூட்டர், டிராக்டர் டயர் கிடைக்கவில்லையா? கவலையை விடுங்கள். சென்னை நகர மோட்டார் டயர் டீலர்கள் சங்கத்திற்குச் சென்று உங்களது பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு டயர்கள் கிடைப்பது நிச்சயம்.

சென்னை-செங்கல்பட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமே இந்த வசதி கிடைக்கும். டயர் டீலர்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்திருக்கும் இந்த சங்கத்தின் அலுவலகம் 4-ஏ, ஸ்மித் ரோடு, மவுண்ட்ரோடு, சென்னை-2-ல் இருக்கிறது.

இந்த சங்கம் 1968 ஆகஸ்ட் 29உ நிறுவப்பட்டு, செப்டம்பர் 2உ முதல் வேலை செய்து வருகிறது. திரு P. சந்திரையாதான் இதன் தலைவர். மற்ற நிர்வாகிகள் விவரம் பின்வருமாறு: திருவாளர்கள் எச். பிரகாஷ்சந்த் சோர்டியா-காரியதரிசி-பொக்கிஷதார்; எச். சர்பாச்சந்த் சோர்டியா-கூட்டுக் காரியதரிசி, எல். ஆர். வெங்கட்ராமன், கே. எஸ். ராமையா, சத்பால், காஜாமுகதீன், அமர் பஜாஜ்-கமிட்டி மெம்பர்கள். செப்டம்பர் 9உ வரை மொத்தம் 27 டீலர்கள் இதில் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். சங்கத்தில் அங்கத்தினராகச் சேர சந்தா கட்டணம் ரூ 10. சென்னை, செங்கல்பட்டிலுள்ள டயர் டீலர்கள் மட்டுமே இதில் அங்கத்தினர்களாக சேரலாம்.

என்ன செய்ய வேண்டும்?

கார், ஸ்கூட்டர் அல்லது டிராக்டர் டயர்கள் வேண்டியிருப்பவர்கள், தங்களது வண்டியின் ஆர். ஸி. (ரிஜிஸ்டிரேஷன் சர்டிபிகேட்) புத்தகத்தை கொண்டுவந்து காட்டி, இந்த சங்கத்தில் பெயர் பதிவு செய்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு டயர் தங்களுக்குத் தேவைபடுகிறதோ, டயர் ஒன்றுக்கு ரூ 3 வீதம் பதிவு கட்டணம் செலுத்தி பெயர் பதிவு செய்துக் கொள்ளவேண்டும். முதலில் பதிவு செய்துக் கொண்டவர்களுக்கு முதல் சலுகை என்ற வரிசைக் கிரமத்தில் இவர்களுக்கு டயர்கள் தரப்படும். பதிவு கட்டணம் திருப்பித்தரப்பட மாட்டாது.

ஆளுக்கு குறைந்தது 2 டயர்கள் வீதம் நியாயவிலைக்கு தரப்படும். அதாவது டீலர்களிடம் இருக்கும் ஸ்டாக் நிலைமையைப் பொறுத்து ஒரு டயர், உடனடியாகத் தரப்படும். பிற்பாடு இரண்டாவது டயர் தரப்படும். எந்த டீலரிடம் ஸ்டாக் இருக்கிறதோ, அந்த டீலர் மூலமாக இவை வழங்கப்படும்.

செப்டம்பர் 9உ வரை 800 டயர்கள் கேட்டு மொத்தம் 550 பேர் இச்சங்கத்தில் பெயர் பதிவு செய்துக்கொண்டிருக்கின்றனர். இத் தேதிவரை 200 டயர்கள் தரப்பட்டிருக்கின்றன.

மற்ற விவரங்களை இச் சங்கத்திடமிருந்து கேட்டு தெரிந்துகொள்ளலாம். ★

RAMAN

காசி & சேது

'ராமன் & ராமன்' பில்டிங்ஸ்
கும்பகோணம்.

எல்லாவித கார்களுக்கும், டிரக்குகளுக்கும் தேவையான ஸ்பேர் பார்ட்ஸ்கள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கும் இடம்.

டீலர்ஸ் :—

பெட்போர்டு — அம்பாஸடர்
டிரக்ஸ் கார்கள்

கிளைகள் :
திருச்சி-தஞ்சாவூர்-கடலூர்-N.T.-மதருஸ்.

மோட்டாரின் கதை — **ஸ்கோரிங்** — நசீர்



படத்திலுள்ள பிஸ்டனை பாருங்கள். ஏதோ ஓர் கூர்மையான ஆயுதத்தைக்கொண்டு சுரண்டியதைப்போல் காட்சி அளிக்கிறது. உண்மையில் அது ஆயுதத்தினால் சுரண்டப்பட்ட பிஸ்டன் அல்ல; சரியாக பராமரிக்காத இஞ்சினில், உராயப்பட்ட பிஸ்டன்தான் அது. இத்தகைய நிலை, பிஸ்டனுக்கோ, சிலிண்டருக்கோ ஏற்படகூடாது. இந்த குறைக்கு உராய்தல் அல்லது சுரண்டுதல் (Scoring) என்று பெயர். இந்த குறை, இஞ்சின்களுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக இருப்பதுடன் அது ஓர் சாபகேடாகவும் இருக்கிறது. எத்தகைய இஞ்சின்களாக இருந்தாலும், இந்த குறை தடுக்கப்படவேண்டிய ஒன்றாகும். நல்லமுறையில் ஒழுங்கான விதத்தில் பராமரிக்கப்பட்ட இன்சின்களில் சுரண்டுதல் என்ற குறை ஓர் கற்பனை சம்பவமாகி விடுகிறது! உண்மையில் எல்லா இஞ்சின்களிலுமே இலேசான உராய்வு அல்லது வடுவிழுதல் இருக்கும். ஆனால் அதை தகுந்த சமயத்தில் கவனிப்பதின் மூலம் அந்த குறையினால் பாகங்கள் பாதிக்கப்படுவது தடுத்துவிடலாம். பாகங்களை புதுப்பிப்பதின் மூலமோ, அல்லது புதிய பாகங்களை மாற்றுவதின் மூலமோ, இக்குறைக்கு தீர்வு கண்டுவிடமுடியாது. இவைகள் தற்காலிகமாக செய்யப்பட்ட முதல் உதவியாக அமையுமே தவிர, இந்த குறை அறவே நீங்கிவிடாது.

இந்த குறை ஏற்படுவதின் அடிப்படை காரணத்தை தெரிந்து அதை சீர் செய்யாத வரை அக்குறையை போக்க முடியாது.

இளகிப் பிடித்தல்

(Scuffing)-இந்த குறைதான் படிப்படியாக வளர்ந்து உராய்வு அல்லது சுரண்டல் என்ற குறை ஏற்பட செய்கின்றது. அதாவது இளகிப் பிடித்தல் என்ற குறை நாளடைவில் சுரண்டல் என்ற குறைக்கு கொண்டு சென்று விடும். இளகிப்பிடிக்கும் தன்மையை பிஸ்டன் அடையத் தொடங்கியவுடன், பிஸ்டனின் சிறிய பாகங்கள் அல்லது பிஸ்டன் ரிங்கின் மென்மையான இடங்கள் இளகி மற்றொரு பாகத்துடன் வெல்டு

FOR ALL YOUR SEALING PROBLEMS **GESCO**®

OIL SEAL IS THE RIGHT ANSWER

பலவகைகளில் தயாரிக்கப்படும் கெஸ்கோ ஆயில் சீல்கள் உத்திரவாதமளிப்பதுடன் ஆயில், மற்றும் கிரீஸை தக்கவைத்து பேரிங்குகளை பாதுகாக்கிறது.

எங்களின் மற்ற தயாரிப்புகள் ● வீல் காப்புகள் ● ஹெட்லேட் ரிங்குகள்

தயாரிப்பாளர்கள்.

கியான் சிங் & கம்பெனி,

T-572, லக்கர் மண்டி, மோதியாகான், புது டில்லி-1.

Phone: 261176 Manufactured by: Grams: GESCOSEAL

GIAN SINGH & CO.,

T-572, Lakkar Mandi, Motia Khan, NEW DELHI-1.

படம் 1



ஸ்கப்பிங் (இளகிப் பிடித்தல்) எப்படி நேரிடுகிறது என்பதைக் காட்டும் படம்.

படம் 2



இளகிப் பிடிப்புக்கு இலக்கான பிஸ்டன் ரிங்கின் முன்தோற்றம்

செய்வதைப்போல் ஒன்றோடொன்று இணைந்து கொள்ளும். பிஸ்டன் நகரும் பொழுது இளகிய உலோகப் பகுதி, பிஸ்டன் ரிங்கினால் சுரண்டப் பட்டு சிலிண்டரின் மேல் பகுதியிலும், சிலிண்டரின் கீழ்ப் பகுதியிலும் மேடாக குவிந்து விடும். **(படம் 1 ஐ பாருங்கள்.)** இளகி, உலோகத்தின் பாகம் வெப்ப புள்ளி (Hot spot) என்ற இடத்தில் குவிக்கப்படுகிறது. இப்படித்தான் பிடிப்பு என்ற குறை ஆரம்பமாகின்றது. இந்த இளகிப் பிடிக்கும் தன்மை, அதிகப் பரப்பளவு உள்ள சிலிண்டரின் பாகமும் பிஸ்டனின் பாகமும் பாதிக்கப்படும் வரை தொடர்ந்து நடைபெறு கிறது. இதனால் ஏற்படும் சேதத்திற்குத்தான் சுரண்டல் அல்லது உராய்தல் அல்லது (Scoring) ஸ்கோரிங் என்று குறிப்பிடுவார்கள்.

சிறந்த பரிசோதனையின் மூலம் பிஸ்டன் ரிங்கின் முன் பகுதியில் (Face) உலோகம் ஓர் இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு சுரண்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது நன்றாகத் தெரியும் **(படம் 2)**. இந்த பிடிப்பு என்ற குறை எந்த பகுதியில் ஏற்படுகின்றதோ, அங்குதான் உலோ கத்தின் பாகம் உருகு நிலையில் சுரண்டப்படுகிறது. அதிகப்படியான வெப்பத்தை பிஸ்டன் அல்லது ரிங் அல்லது சிலிண்டரின் சுவர்கள் பெறத் தொடங்கியவுடன் இந்த இரு குறைகளும் தொடங்கி விடுகின்றது.

இந்த குறைக்கு மிக முக்கியமான, அதே சமயத்தில் பல ஆராய்ச்சிமூலம் கிடைத்த, காரணங்கள் பழுதடைந்த குளிர் சாதன ஏற் பாட்டின் அமைப்பாகும். வண்டியின் குளிர் சாதன ஏற்பாட்டின் மூலம் அதிகப்படியான வெப்பம், வெளியே கடத்தப்படாவிடில் இந்த இரண்டு குறைகளும் தனது பயணத்தை ஆரம் பித்து விடுகிறது!

தண்ணீர் ஒழுகுதலை தடுப்பதன் மூலம் இக் குறையை ஓரளவு தடுக்கலாம். தண்ணீர் ஒழுகக்கூடிய இடங்களை, அதாவது ஹோஸ், ஹோஸ் இணைப்புகள், ரேடியேட்டர், கோர் பிளக், வடி கட்டும் குழாய் சிலிண்டர் ஹெட், போன்ற இடங்களை நன்றாக பரிசோதிப்பதின்

ஏகபோக விற்பனையாளர்கள் :
விஸ்ராம் ஆட்டோமோடிவ் சர்வீஸ், தபால் பெட்டி 725, சென்னை-6.

மூலம் தண்ணீர் ஒழுகுதலை கண்டு பிடித்து தடுத்து விடலாம். ஒரு இஞ்சின் அதிகப்படியான தண்ணீரை இழப்பதின்மூலம் எஞ்சி இருக்கும் தண்ணீரைக்கொண்டு வெப்பத்தை வெளியேற்ற இயலாமல் போய்விடும். இத்தகைய இஞ்சின்களில் கவனம் செலுத்தாவிட்டால், இவை அபாயகரமான நிலையில் இயங்கிக்கொண்டு இருக்கும்.

தண்ணீர் கேஸ்ஹெட் வழியாக கம்பரஷன் சேம்பரில் ஒழுகினால், சிலிண்டர் சுவரில் படிந்திருக்கும் லூபிரிகேட்டிங் ஆயிலின் மெல்லிய இழை துண்டிக்கப்பட்டுவிடும். இதனால் பிஸ்டன் நேரடியாக சிலிண்டரின் சுவர்களில் உராய தொடங்கி விடுகின்றது. இதனால் கூட பிடிப்பு என்ற குறை ஆரம்பமாகும்.

ரேடியேட்டர் கோளாறு

அடைப்பட்ட ரேடியேட்டர், அடைப்பட்ட ஹோஸ், பழுதடைந்த அல்லது, நைந்து போன ஹோஸ், ஆகியவற்றினால் கூட இஞ்சினின் வெப்பம் அளவுக்கு மீறி ஏறிவிடுவதுண்டு. சமயங்களில் ரேடியேட்டரின் முகப்பு பகுதி ஏதாவது ஒரு பொருளினால் அடைப்பட்டு இருந்தால் காற்றின் ஓட்டம் தடை செய்யப்பட்டு நீரின் வெப்பத்தை அதிகரிக்க செய்து விடும். ஏதாவது அசுத்தங்கள் அல்லது துருப்பிடித்த இரும்பு துண்டுகள் சிலிண்டர் பிளாக்கில் அடைத்துக்கொண்டு தண்ணீரின் ஓட்டத்தை தடுத்து விடுவதுண்டு. இதனால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வெப்பம் அதிகரித்து விடும். இந்த வெப்பம் மிகுந்த இடத்திற்கு Localized Hot Spot என்று குறிப்பிடுவார்கள். இவைகளினால் கூட பிடிப்பு ஏற்படலாம். **(படம் 3).** நீண்ட மெல்லிய கம்பியை தண்ணீர் செல்லும் துவாரங்களில் விட்டு பார்ப்பதின் மூலம் இந்த அடைப்பை நாம் அறியலாம்.

படம் 3



தண்ணீர் செல்லும் துவாரங்கள் அடைபட்டு போவதால் வெப்ப புள்ளிகள் ஏற்பட்டு, இளகிப் பிடிப்பு மூளுகிறது.

கீழ்க்கண்டவைகளில் அதிக கவனம் செலுத்துவதின் மூலமும் பிடிப்பை தடுக்கலாம்:— தண்ணீர் பம்பையும், அதன் இம்பெல்லர்களையும் பரிசோதிக்கவேண்டும். வெப்பத் திறப்பான், (Thermostat) எப்போதும் மூடிய நிலையிலேயே அதாவது சரியான வெப்ப நிலையில் திறக்காத தன்மையை பெற்று இருக்கின்றதா என்பதை கவனிக்கவேண்டும். இவைகளினால் கூட இஞ்சின் அதிகப்படியான வெப்ப நிலையை அடையலாம். தவிர பழுதடைந்த ரேடியேட்டர் பிரஷர் கவரினாலும் தேய்மானம் அடைந்த அல்லது தளர்ந்துபோன பேன் பெல்ட்டினாலும் இஞ்சின் வெப்பம் அதிகரிக்கலாம். குளிர் சாதன ஏற்பாட்டில் உண்டாகும் குறைகளில்தான்

தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டது



பிஸ்டன் பின்கள்

உள்ளூர் வியாபாரியிடம் கிடைக்கும்

ஏகபோக விற்பனையாளர்கள்:

விஸ்ராம் ஆட்டோமோடிவ் சர்வீஸ், தபால் பெட்டி 725, சென்னை-6.

படம் 4



சிலிண்டர் லூப்ரிகேஷன் எப்படி சரிசமானமாக இருக்கவேண்டும் என்பதை இடது படம் காட்டுகிறது. லூப்ரிகேடிங் ஏற்பாட்டில் பழுது இருந்தால் இளகிப் பிடிப்பு குறைமூண்டுவிடும் என்பதை விளக்குகிறது வலது படம்.

பிடிப்பு, உராய்வு போன்ற குறைகள் பெரும்பாலும் ஏற்படுவதாக கண்டுப்பிடித்திருக்கின்றுர்கள். மற்ற பாகங்களினுல் இக்குறை ஏற்படாது என்று சொல்லி விட முடியாது.

லூப்ரிகேட்டிங் பழுது

இந்த பிரச்னை, சமயங்களில் லூபிரிகேட்டிங் ஏற்பாட்டில் பழுது இருந்தால் கூட ஏற்படுவது உண்டு. பிடிப்பை தவிர்க்க போதுமான அளவு லூபிரிகேட்டிங் ஆயில் பயன்படுத்தவேண்டும். உராய கூடிய இரண்டு பாகங்களுக்கு மத்தியில் படிந்து இருக்கும் எண்ணெய்யின் மெல்லிய இழை, அறுப்பட்டு விட்டால் உராயக்கூடிய உலோகங்கள் நேரடியாக ஒன்றோடொன்று உராய தொடங்கி விடும். இதனுலும் பிடிப்பு ஏற்படலாம். போதுமான அளவு எண்ணெய் இல்லாவிட்டாலும், அதிகப்படியான எண்ணெய் இஞ்சினிலிருந்து விரயமாவதாலும் இக்குறை ஏற்படும். எண்ணெய் பம்ப் பழுதடைந்து இருந்தால், அல்லது தேய்மானமடைந்து இருந்தால், அது எண்ணெய் பாதையில் செல்ல தேவைப்படும் அழுத்தத்தை உற்பத்தி செய்யமுடியாமல் போய் விடுவதுண்டு. இதனுல் இஞ்சினின் பாகங்கள் போதிய அளவு லூப்பிரிகேட் செய்யப்படாமல் போய்விடுவது உண்டு. தவிர இஞ்சினின் ஒரு பகுதியில் அதிக அளவு எண்ணெய் செலுத்தப்படுவதினுல், இஞ்சினின் மற்ற பாகத்திற்கு குறைந்த அழுத்தத்துடன் எண்ணெய் அனுப்பப்படும். இதனுல் இன்சினின் பாகங்கள் சரியான அளவு எண்ணெய்யை பெறுவது கிடையாது. Oil Pressure Relief Valve பழுதடைந்திருந்தால் இத்தகைய குறை ஏற்படும். மேலும் மெயின் பேரிங்குகள் தேய்மானம் அடைந்து இருப்பதினுல் எண்ணெய் எடுத்து வீசப்படுவது குறைக்கப்படுகிறது. இதனுல் சிலிண்டரின் சுவர்கள் அதிகப்படியான எண்ணெய் பெறுவது தடுக்கப்படுகிறது **(படம் 4).**

ஆயிலுடன் ஜலம் சேர்க்கை

லூப்பிரிகேட்டிங் ஆயில் தன்னுடைய வழுவழுப்புத்தன்மையை இழந்து விடுவதினுல் பிடிப்பு ஏற்படலாம். பெரும்பாலும் எண்ணெய் வழவழப்பு தன்மையை இழப்பது, தண்ணீர் இதனுடன் சேர்வதினுல்தான். சமயங்களில் Blow-By-Gas, எண்ணெயில் கலப்பதினுலும் கூட எண்ணெய் வழவழப்புத்தன்மையை இழந்து விடுவது உண்டு.

சரியான முறையில் அட்ஜஸ்ட் செய்யப்படாத, கார்புரேட்டர் இஞ்சினியில் பொருத்தப்பட்டாலும் கூட பிடிப்பு என்ற குறை ஏற்படும். கார்புரேட்டரில் Automatic Choke பழுது

படம் 5

வெடித்து எரிதல் (DETONATION) குறையால் பிஸ்டனின் மேல்பகுதி தீய்ந்துபோயிருப்பதைப் பாருங்கள்.

அடைந்து இருந்தால் சிலிண்டருக்குள் பெட்ரோல் அதிகப்படியாகச் செல்லும். இதில் ஓரளவு பெட்ரோல் எரிக்கப்படாமல் மிஞ்சி விடுவது உண்டு. இப்படி மிஞ்சிய பெட்ரோல் சிலிண்டர் சுவர்களில் படிந்திருக்கும், எண்ணெயை துடைத்து விடும். இதனுல் பிஸ்டனும், சிலிண்டரும் நேரடியாக உராய தொடங்கி பிடிப்பு என்ற குறைக்கு வழி செய்து விடுகின்றது.

சமயங்களில் Detonation ஏற்படக்கூடிய இஞ்சினில் கூட பிடிப்பு ஏற்பட்டு இருப்பதாக ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. (படம் 5-ஐ பாருங்கள்). இதிலுள்ள பிஸ்டன் மோசமான பிடிப்புக்கு உட்பட்டு இருக்கின்றது. பிஸ்டனின் மேல் பகுதி Detonation ஏற்பட்டதிற்கு சான்று கூறுகின்றன. இதனுல் ஏற்படக்கூடிய அதிகப்படியான அழுத்தமும் வெப்பமும் லூப்பிரிகேட்டிங் ஆயிலினுலும், தண்ணீரினுலும்கூட. குறைக்கமுடியாது. இதைப்போலவே இதே காரணங்களில் முன்எரிதல் (Pre-Ignition) உள்ள வண்டியில் கூட இந்த பிடிப்பு ஏற்படும். வெடித்து எரிதல் (Detonation), முன்எரிதல் போன்ற குறை வண்டியில் இருப்பதாக தெரிந்தால், உடனே அதன் காரணத்தை கண்டு பிடித்து நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும்.

ஓவரால் செய்யப்பட்ட இஞ்சின் அல்லது புதிய ரிங்குகள் மாட்டப்பட்ட இஞ்சின், சமயங்களில் பிடிப்பு என்ற குறைக்கு உள்ளாக நேரிடும். ஏனெனில் லூப்பிரிகேட்டிங் ஆயில் இஞ்சினுடைய பாகங்களுக்கு சரியான முறையில் செல்லாமல் தடைப்படுவதில் கூட இந்த பிடிப்பு ஏற்படலாம். இந்த குறையை லூப்பிரிகேட்டிங் ஏற்பாட்டில் அதிக அழுத்தத்தோடு எண்ணெயை வினியோகச் செய்வதின்மூலம் தவிர்த்து விடலாம்.

உராய்வு, பிடிப்பு என்ற குறைகளுக்கு இன்னும் பல காரணங்கள் கண்டுபிடிக்காமலேயே இருக்கின்றன. நூற்றுக்கு எண்பது சதவிகிதம் இஞ்சினை சரியான முறையில் பராமரிப்பதின் மூலம் இதை தடுத்துக்கொள்ளலாம். (தொடரும்)

இண்டஸ்ட்ரோ

தரமான தயாரிப்புகள்

வாகன தயாரிப்பாளர்களாலும், ராஜ்ய டிரான்ஸ்போர்ட் நிறுவனங்களாலும் அங்கீகரித்து உபயோகித்து வருகின்றனர்



தயாரிப்பாளர்கள் :

தி ஆட்டோமோடிவ் & அலைடு இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிட்.,

4, வெஸ்ட்காட் ரோடு, மதருாஸ்-14

தலைமை ஆபீஸ் : பம்பாய்-4

தொழிற்சாலை : லோனவ்லா

வட இந்தியாவிற்கு விநியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ் : P. ஷரன் & கோ.,

தபால் பெட்டி எண் : 1145, காஷ்மீரிகேட், டில்லி-6.

ஸ்தாபகர் : D. S. கல்யாண்பூர்

★ புதிய ஹயர் - பர்சேஸ்

ஹயரருக்கு விசேஷ பாதுகாப்புகள்

★

ரிபேட் கணக்கிட விதி முறை நிர்ணயம்

தவணை முறையில் பணம் கட்டி மோட்டார் வாகனங்கள், மற்ற சமான்களை வாங்கும் "ஹயர்-பர்சேஸ்" பேரங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இந்திய சர்க்கார் கொண்டுவந்திருக்கும் தனி சட்டத்தின் முக்கிய ஷரத்துகளை ''மோட்டார்'' வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக இங்கே பிரசுரிக்கிறோம். இம் மசோதா ஒரு தனிக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது. இக்கமிட்டி சமர்ப்பிக்கும் அறிக்கையை தழுவி சர்க்கார் சில திருத்தங்கள் செய்வதும் சாத்தியமே. இதன்பிறகு சட்டமாக நிறைவேறிய பிறகே இது அமுலுக்கு வரும். (ஆ-ர்)

''1968 ஹயர்-பர்சேஸ்'' சட்டம் (Bill No. XIX of 1968) என்று இந்த சட்டம் அழைக்கப்படும். தவணை முறையில் சாமான்களை வாங்க வகைசெய்யும் இந்த ஒப்பந்தமானது, நீண்டகால தவணைகளில் பல சாமான்களை வாங்கிக்கொள்ள பொது மக்களுக்கு உதவுவதால், சமூகப்-பொருளாதார முக்கியத்வம் கொண்டது இது. தவணை முறையில் வாங்கும் இந்த ஒப்பந்தமானது, பிறகு விரும்பினால் நடுவில் பாக்கியுள்ள பூரா பணத்தையும் மொத்தமாகவும் செலுத்தி சொத்தை உரிமையாக்கிக்கொள்ளமுடியும்.

''இந்தியாவில் தற்சமயம் ஹயர்-பர்சேஸ் பேரங்களுக்கு தனிசட்டம் எதுவும் இருக்கவில்லை. 1872 இந்திய காண்டிராக்ட் சட்டம், 1930 பண்டங்கள் விற்பனை சட்டம் ஆகிய இந்த இரு பொது சட்டங்களுக்கு உட்பட்டு, ஹயர்-பர்சேஸ் பேரங்கள் முழுக்க முழுக்க பண்டங்களை விற்பவர்—வாங்குபவர் இடையே செய்துக் கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி நடத்தி வரப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் தில்லுமல்லுகளும், கெடுதிகளும் இதில் புகுந்து, வாங்குவோரின் நலனை பாதிக்கிறது. ஹயர்-பர்சேஸில் பொருளை வாங்குவோர்தான், பலஹீனமானவராக எப்போதும் இருக்கிறார். இதை தடுக்கும் நோக்கத்துடன்தான் சட்டக் கமிஷன், அது சமர்ப்பித்த 20-வது அறிக்கையில் ஒரு தனி ஹயர்-பர்சேஸ் சட்டம் இயற்றுவதற்கு விரிவான சிபாரிசுகளைச் செய்திருந்தது. இந்த சிபாரிசுகளை அமல் நடத்துவதற்கே சர்க்கார் இப்போது ஒரு தனி ஹயர்-பர்சேஸ் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது.

விசேஷ பாதுகாப்பு

ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தம் செய்துக் கொள்ளும் இருதரப்பாரின் உரிமைகள், பொறுப்புகள் என்ன என்ன என்பதை இச் சட்டம் தெளிவாக வரையறுத்துக் கூறியிருக்கிறது. ஹயரருக்கு (பொருளை வாங்குவோருக்கு) விசேஷ பாதுகாப்பு அளிக்கிறது. இதில் அடியிற் கண்டவை முக்கியமானதாகும்:—

(1) ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தின் தன்மையையும், விளைவுகளையும் ஹயரருக்கு தெளிவாகப் புரியவைக்கவேண்டும். அவ்வப்போது கணக்கு புள்ளி விவரங்களை கேட்டு வாங்க ஹயரருக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. (3, 4, 32-வது ஷரத்துக்கள்).

(2) ஒவ்வொரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்திலும் சில குறிப்பிட்ட நிபந்தனைகளையும், உத்திரவாதங்களையும் ஹயரருக்கு சாதகமாக சேர்க்க வேண்டும் என்பது மற்றொரு முக்கியமான அம்சமாகும் (6-வது ஷரத்து).

(3) பொருளை மொத்த விலை கொடுத்து வாங்கவும், ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவும், ஹயாருக்கு முழு அதிகாரம் அளிக்கப்படுகிறது. (8, 9, 10-வது ஷரத்துகள்).

(4) பொருளை கைப்பற்றுவதற்குள்ள (''சீஸ் செய்வதற்குள்ள) உரிமையை ஓனர் பிரயோகித்ததன் மூலம், ''நியாயமற்ற'' லாபம் ஏதாவது அடைந்திருந்தால், அதை ஹயரருக்கு ஓனர் கொடுத்துவிடவேண்டும் (16-வது ஷரத்து).

(5) ஒரு கோர்ட் உத்திரவைப்பெற்றுதான் பொருளை ஓனர் பறிமுதல் செய்ய முடியும்.

சட்டம் கூறுவது என்ன? ★

"சீஸ்" செய்வதற்கு ஓனருக்கு கட்டுப்பாடுகள்

★

"மீட்சி" பணம்பெற வசதி

ஹயர்-பர்சேஸ் தொகையில் ஒரு பகுதி கட்டியான பிறகுதான் இதைச் செய்யமுடியும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. (19வது ஷரத்து).

இதர முக்கிய அம்சங்கள்

இந்த ஹயர்-பர்சேஸ் சட்டத்தின் நோக்கம் என்ன என்பதை மேலே சுருக்கமாக கண்டோம். இனி இந்த சட்டத்திலுள்ள இதர முக்கிய அம்சங்களை ஆராய்வோம் :—

ஒரு ஹயரர், ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தின் கீழ் எடுத்துக்கொள்ளும் ஒரு பொருளை, வாங்க விரும்பினால், அதை விற்க ஓனர் கடமைபட்டிருக்கிறார். ஆனால் அதை வாங்குவதா, வேண்டாமா என்று முடிவு செய்யும் உரிமை, ஹயரரின் இஷ்டத்துக்கு விடப்படுகிறது.

இந்த சட்டத்தில் காணப்படும் "உத்திரவாத காண்டிராக்ட்" "ஹயர்-பர்சேஸ் விலை" 'ஹயரர்", "ஓனர்" என்ற சொற்கள், 1965 பிரிட்டிஷ் ஹயர்-பர்சேஸ் சட்டத்திலுள்ள சொல் விளக்கத்தை தழுவி பின்பற்றப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தமும் எழுத்துமூலம் இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அனைவரும் இதில் கையொப்பமிட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் ஒப்பந்தம் செல்லாது. உத்திரவாத காண்டிராக்ட் இருக்கும்பட்சத்தில், ஜாமீன் கொடுப்பவரும் கையெழுத்து போட வேண்டும்.

ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தில் எதை யெல்லாம் குறிப்பிடவேண்டும் என்ற விவரம் 4-வது ஷரத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதன் படி குறிப்பிடாவிடில், ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரி ஹயரர், கோர்ட்டில் வழக்கு போடலாம். அதை கோர்ட் ரத்துச் செய்தோ அல்லது அந்தந்த வழக்கின்தன்மையைப் பொறுத்து வேறு உசிதமான உத்திரவையோ பிறப்பிக்கலாம்.

2 தனி தனி ஒப்பந்தம் முடியாது

சட்டத்தை மீறுவதற்காக தனித்தனியாக இரண்டு ஒப்பந்தங்கள் செய்துக்கொள்வதை 5-வது ஷரத்து தடை செய்கிறது. "ஹயருக்கு" என்று ஒரு ஒப்பந்தமும், விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு வகை செய்யும் மற்றொரு ஒப்பந்தமும் ஆக இரண்டு ஒப்பந்தங்கள் வைத்துக்கொள்வதை இந்த ஷரத்து தடை செய்கிறது. இவை யாவும் ஒரே ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தமாகத்தான் கருதப்படும்.

6-வது ஷரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் உத்திரவாதம், மற்ற நிபந்தனைகள், பிரிட்டிஷ் சட்டத்தின் 17, 18, 19வது பிரிவுகளைத் தழுவி



தொகுக்கப்பட்டிருக்கின்றன. 6-வது ஷரத்தின் உப-ஷரத்து (1) கூறுவதாவது:—

(அ) பொருளை சுயபோகமாக அனுபவிக்க ஹயரருக்கு பூர்ண உத்திரவாதம்.

(ஆ) பொருள் கைமாறும்போது, மூன்றாவது நபருக்கு உரிமை தரும் வில்லங்கங்கள் எதுவும் இல்லாதிருப்பதற்கு உத்திரவாதம்

(2) (3) (4) உப-ஷரத்துகள், ஒவ்வொரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்திலும் சேர்க்க வேண்டிய நிபந்தனைகளை வரையறுத்து கூறுகின்றன. பொருளின் உபயோகத்தன்மை முதலியவை பற்றியதாகும் இவை.

(2) (b) உப-ஷரத்து, பொருளின் தரம் பற்றிய நிபந்தனைகளை விளக்குகிறது. அதாவது,

(அ) ஒப்பந்தம் செய்துகொண்ட தருணத்தில் ஓனருக்கு தெரிய நியாயமில்லாத குறைபாடுகள்;

(ஆ) ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று பார்க்க பொருளையோ அல்லது இதன் ஒரு சாம்பிளையோ, ஹயரர், சோதித்து பார்த்திருந்து, இந்த சோதனை மூலம் கோளாறுகள் தெரியவந்திருந்தால் ;

சென்னை மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கத்தில் சுதந்திர தின விழாவன்று தலைவர் திரு B. I. சந்தோக் கொடி ஏற்றும் காட்சி.

(இ) பொருள் பழைய செகண்ட்-ஹாண்டு பொருளாக இருந்து. இவ்விஷயம் ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தால்,

இந்த நிபந்தனைகள் பொருந்தாது.

எந்த ஒரு குறிப்பிட்ட உபயோகத்திற்காக பொருள் தேவைபடுகிறது என்பதை ஹயரர் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அதற்கு தகுந்ததாக அப்பொருளை ஓனர் தரவேண்டியது (3)-வது உப-ஷரத்துப்படி ஒரு முக்கிய நிபந்தனையாக்கப்பட்டிருக்கிறது. (4)-வது உப-ஷரத்தின் கீழ் இந்த நிபந்தனையை மாற்றலாம் அல்லது அடியோடு அகற்றலாம். ஆனால் ஒப்பந்தமாவதற்கு முன், இதை ஹயரருக்கு தெளிவாக்க வேண்டியது ஓனரின் கடமையாகும். ஒப்பந்தத்திலுள்ள விதிவிலக்கு ஷரத்துகளை நன்றாக புரிந்துகொள்ளாமல் ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் ஹயரர்களுக்கு பாதுகாப்பளிக்கவே இந்த ஷரத்து.

ஒரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தில், வேறு சட்டத்தின் கீழ் சேர்க்கக்கூடிய நிபந்தனைகளை இந்த ஹயர்-பர்சேஸ் சட்டம் தடைசெய்யாது உப-ஷரத்து (5).

மொத்தமாக வாங்க உரிமை

ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தகாலத்தில் எந்த சமயத்தில் விரும்பினாலும் பொருளை மொத்தமாக விலை கொடுத்து வாங்கிக்கொள்ள 8-வது ஷரத்து வசதி அளிக்கிறது. அதாவது தவணைகள் (''டியூ'') பூராவாக முடிவடைவதற்கு முன்னதாகவே, பாக்கியுள்ள பூரா பணத்தையும் கட்டி ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ள வசதியும், விருப்பமும் உள்ளவர்களுக்கு இப்படிச் செய்ய இந்த ஏற்பாடு வசதியளிக்கிறது. 1960 நியூசவுத் வேல்ஸ் ஹயர்-பர்சேஸ் சட்டத்தின் 11-வது பிரிவைத் தழுவி, இந்த ஷரத்து தொகுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்து கூறுவதாவது:—

''ஒரு ஹயரர், 14 தினங்களுக்கு குறையாமல எழுத்து மூலம் நோட்டீஸ் கொடுத்து, ஹயர்-பர்சேஸ் விலையை மொத்தமாகக்கட்டி பொருளை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். ஏற்கெனவே எவ்வளவு தவணைகள் கட்டியிருக்கிறாரோ, அது போக, பாக்கியுள்ள பணத்தை மொத்தமாக கட்டி வாங்கிக்கொள்ளலாம் இம்மாதிரி மொத்தமாக பணம் கட்டும்போது, ரிபேட் பெறவும் ஹயரருக்கு உரிமை அளிக்கப்படுகிறது. இந்த ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் இந்த ரிபேட்டை கணக்கிடவேண்டும்.

ரிபேட்டை எப்படி கணக்கிடுவது?

ஹயர்-பர்சேஸ் விலையை அடிப்படையாகக கொண்டு இந்த ரிபேட்டை கணக்கிடவேண்டும். அதாவது தவணை முறையில் வாங்கினால் இருக்கும் விலைக்கும், மொத்தமாக ரொக்கமாக



அதிக உழைப்புக்கும் அமித லாபத்துக்கும் இன்செக்

இன்செக்

கச்சாப பொருள்களின் தேர்வு, ஆராய்ச்சி, கவனிப்போடு கூடிய உற்பத்தி முறை எல்லாம் சேர்ந்து இன்செக் டயர்களை அதிக நாள் உழைப்பதற்கான உறுதியும், வலுவும் உடையதாகச் செய்துள்ளன. இந்திய ரஸ்தாக்களையும், சீதோஷ்ண நிலைகளையும் நன்கு பரிசீலித்து, தற்கால சர்வதேச தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இன்செக் டயர்கள் நீண்டகாலம் தொடர்ந்து உழைக்கும் ஆற்றல் பெற்றுள்ளன.

IT/G/182TAM

அவை உறுதியும், வலுவும் உடையவை - அவைதான் இன்செக்

கொடுத்து வாங்கினால் இருக்கும் விலைக்கும் இடையே உள்ள விலை வித்தியாசத்தை அடிப்படையாகக்கொண்டு ரிபேட்டை கணக்கிட வேண்டும். இதற்கு கீழே ஒரு உதாரணம் தரப்படுகிறது :—

ஹயர்-பர்சேஸ் விலை	...	ரூ. 6,000
ரொக்க விலை	...	ரூ. 5,000
தவணைகள்	...	12 மாதம்
தவணை தொகை	...	ரூ. 500

6 தவணைகள் (ரூ. 3000) கட்டப்பட்டு விட்டதாக வைத்துக்கொள்வோம். ஹயர்-பர்சேஸ் விலையில் இன்னும் கட்ட பாக்கியுள்ள தொகை $6 \times 500 =$ ரூ. 3000. அதாவது ஹயர்-பர்சேஸ் விலையில் பாதி தொகையாகும்.

ஹயர்-பர்சேஸ் விலை ரூ. 6,000 மாகவும் ரொக்க விலை ரூ. 5,000 மாகவும் இருப்பதால் இவ்விரண்டுக்கும் இடையே உள்ள விலை வித்தியாசம் இதில் ரூ. 1,000. இதில் பாதி தொகை என்பது ரூ. 500. ஆகவே இந்த விஷயத்தில் ரிபேட்டானது இத்தொகையில் மூன்றில் இரண்டு பாகமாக இருக்கும். $2/3 \times 500$ அல்லது ரூ. 333.

இந்த ஷரத்தின்படி ரிபேட்டை கணக்கிடுவதற்கு அடியிற்கண்ட எளிதான முறையை பின்பற்றலாம் :—

$$\text{ரிபேட்} = 2/3 \left\{ \frac{\text{ரொக்க விலை ஹயர்-பர்சேஸ் விலை வித்தியாசம்} \times \text{பாக்கியுள்ள தவணைகள்}}{\text{மொத்த தவணைகள்}} \right.$$

உதாரணம் :

$$\text{ரிபேட்} = 2/3 \times \frac{1000 \times 6}{12}$$

$$= 333\tfrac{1}{3}$$

இந்த (ரிபேட்) ஷரத்தை விலக்கி ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது. ஆனால் இதை விட உயர்ந்த விகிதத்தில் ரிபேட் தர ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால், இந்த ஏற்பாட்டை இந்த ஷரத்து எவ்வகையிலும் பாதிக்காது [உப-ஷரத்து (3)].

டெர்மினேஷன் கட்டணம்

ஒப்பந்தப்படி இறுதி பணம் செலுத்துவதற்கு முன்னதாக எச்சமயத்திலும் வேண்டுமானாலும் ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ள 9-வது ஷரத்தானது, ஹயரருக்கு உரிமை வழங்குகிறது. இந்த ஷரத்து பிரிட்டிஷ் சட்டத்தின் 27-வது பிரிவைத் தழுவி தயாரிக்கப் பட்டிருக்கிறது.

9-வது ஷரத்தின் உப-ஷரத்து (2) கூறுவதாவது :—ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையை (டெர்மினேஷன்) கட்டணமாக ஹயரர் தர வேண்டும் என்றுள்ள நிபந்தனையிலிருந்து ஹயரருக்கு நிவாரணம் அளிக்கும் உப-ஷரத்து இது. அதாவது, இம்மாதிரி கட்டணம் தர வேண்டும் என்று ஒப்பந்தமாகியிருக்கும் சந்தர்ப்பங்களில், ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முன்னதாக ஹயரர் கட்டியுள்ள தவணைகள் ஹயர்-பர்சேஸ் விலையில் பாதிக்குமேல் அதிகமாக இருப்பின் எவ்வித கட்டணமும் தரத்தேவையில்லை. பாதிக்குமேல் செலுத்தப்படாமல் இருப்பின், மேற்படி மொத்த தொகைக்கும், பாதிதொகைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையோ அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தையோ, எது குறைவாக இருக்கிறதோ அதை ஹயரர் தர வேண்டும். நடைமுறையில் இந்த உப-ஷரத்தை எப்படி அமல் நடத்தவேண்டும் என்பதற்கு கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன :—

உதாரணம் (1)

ஹயர்-பர்சேஸ் விலை	ரூ. 6,000
மொத்த தவணைகள் (தலா ரூ 500 வீதம்)	12
ஒப்பந்தத்தை முடிவுக்குக்கொண்டு வரும்போது (டெர்மினேஷனில்) தர குறிப்பிட்டுள்ள தொகை	ரூ. 600

இந்த விஷயத்தில் 7 தவணைகள் கட்டியான பிறகு ஒப்பந்தம் ''டெர்மினேட்'' செய்யப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். $7 \times 500 =$ ரூ. 3,500; இது ஹயர்-பர்சேஸ் விலையைக் காட்டிலும் பாதிக்குமேல் அதிகமாகும். ஆகவே ''டெர்மினேஷன்'' கட்டணத்தைத் தரவேண்டியதில்லை.

(2) 5 தவணைகளை கட்டியிருந்தால் $5 \times 500 =$ ரூ. 2500; இது ஹயர்-பர்சேஸ் பாதி விலையைக் காட்டிலும் ரூ. 500 குறைவு. ''டெர்மினேஷன்'' கட்டணமான ரூ. 600-ஐ விட இது குறைவாதலால், ஹயரர் ரூ. 500 கொடுத்தால் போதும்.

(3) இரண்டு தவணைகளை கட்டிவிட்டு ஒப்பந்தம் ''டெர்மினேட்'' செய்யப்பட்டால் $2 \times 500 =$ ரூ. 1000. இது ஹயர்-பர்சேஸ் பாதி விலையைக்காட்டிலும் ரூ. 2,000 குறைவு. இந்த விஷயத்தில் டெர்மினேஷன்'' கட்டணமான ரூ. 600 முழுவதையும் ஹயரர் கொடுத்தாக வேண்டும்.

(4) ஆறு தவணைகள் கட்டியிருந்தால் $6 \times 500 =$ ரூ 3,000. இது ஹயர்-பர்சேஸ் விலையில் சரியாக பாதி தொகையாக இருக்கும். இதிலும் ''டெர்மினேஷன்'' கட்டணத்தை தரவேண்டியதில்லை.

இந்த ஷரத்தின் கீழ் ஹயரருக்கு உள்ள உரிமைகளை விலக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாதென உப-ஷரத்து (4) உறுதி செய்கிறது.

இரண்டு அல்லது அதற்கு அதிகமான ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தங்கள் இருக்கும் பட்சத்தில் இவற்றுக்கு ஒன்றாக சேர்த்து பணம் கட்ட ஹயரருக்கு 10-வது ஷரத்து உரிமை அளிக்கிறது.

பனக் கஷ்டம் ஏற்பட்டால்...

பணக் கஷ்டம் போன்ற காரணங்களால் ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியாமல் போகும் ஹயரருக்கு, 11-வது ஷரத்தின் கீழ் சில நிவாரணம் தரப் பட்டிருக்கிறது. ஒப்பந்தத்திற்கு எந்த வகையிலும் வில்லங்கமின்றி ஒரு ஹயரர், தனது நல உரிமைகளை, ஓனரின் சம்மதத்துடன், வேறொருவருக்கு மாற்றித்தரலாம். இதற்கு சம்மதம் அளிக்க ஓனர், நியாயமற்ற முறையில் மறுத்தால், சம்பந்தப்பட்ட ஹயரர் ஒரு கோர்ட்டுக்குச் சென்று, இந்த சம்மதம், நியாயமற்ற முறையில் வேண்டுமென்றே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு உத்திரவைப் பெறலாம். 1960 நியூ சவுத் வேல்ஸ் ஹயர்-பர்சேஸ் சட்டத்தின் 9-வது ஷரத்தைத் தழுவி இந்த ஷரத்து தொகுக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப்படி நடத்தல், பொருளை பராமரிக்க மேற்கொள்ளவேண்டிய ஜாக்கிரதை, உபயோகிக்கவேண்டிய முறை ஆகியவை விஷயத்தில் ஹயரருக்குள்ள பொறுப்புகளை 12 முதல் 15 வரையுள்ள ஷரத்துகள் விளக்குகின்றன.

தகவல் மறுத்தால் தண்டனை

பொருளின் இருப்பிடம் பற்றி ஹயரர் தகவல் கொடுக்க 15-வது ஷரத்து கட்டுப் படுத்துகிறது. ஒப்பந்தத்தில் இப்படி குறிப்பிட்டிருந்தால்தான் இந்த ஷரத்து பொருந்தும். நியாயமான காரணமின்றி இத் தகவல் தெரிவிக்க ஹயரர் தவறினால் ரூ. 200 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

‘‘சீஸ் செய்தல்’’

பொருளை ஓனர் பறிமுதல் (‘‘சீஸ்’’) செய்வது பற்றியதாகும் 16-வது ஷரத்து. வரம்புமீறிய லாபம் எதையும் இதன் மூலம் ஓனர் அடையாமல் இருக்க வகை செய்கிறது இந்த ஷரத்து. ஒரு ஹயர்-பர்சேஸ்


பாதுகாப்பான டிரைவிங்
நீடித்த உழைப்பு
பிரகாசமான
வெளிச்சத்திற்கு
ஸன் - பீம்
மினியேச்சர் &
ஆட்டோ பல்புகள்
SUN-BEAM
MINIATURE & AUTO LAMPS
GLASS & MINATURE BULB INDUSTRIES, KANPUR.

தென்னிந்திய விநியோகஸ்தர்கள் :
வி. ஸி. ராமலிங்கம் & சன்ஸ், 2/422, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

நீண்ட உழைப்பு சிக்கனம் நம்பிக்கையானது
ஸ்பிரிங்குகளில்
முதல் தரம்
லேலண்டு வண்டிகளுக்கு
ஒரிஜினல் ஸ்பிரிங்காக
மாட்டப்படுகிறது
இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த
எஃகினால் தயாரிக்கப்படுகிறது
ISCO
மேன்மேலும் வாகன உரிமையாளர்கள்
இஸ்கோ ஸ்பிரிங்குகளையே
தேர்ந்து எடுக்கிறார்கள்
ISI
இந்தியா லீப் ஸ்பிரிங்
மானுபாக்சரிங் கம்பெனி (பி) லிட்.,
62, மகாத்மா காந்தி ரோடு.
சேகந்திராபாத்

ஒப்பந்தத்தின் கீழ் தரப்பட்ட பொருளை ஓனர் ''சீஸ்'' செய்தால்,

(1) ''சீஸ்'' ஆன தேதி வரை ஹயர்-பர்சேஸ் விலையில் கட்டியுள்ள தொகைகளையும்,

(2) ''சீஸ்'' ஆன தேதியில் பொருளுக்கிருந்த மதிப்பையும் சேர்த்து கணக்கிட்டு ஓனரிடமிருந்து வித்தியாச தொகையை ஹயரர் திரும்பப் பெறலாம்.

பொருளின் மதிப்பை எப்படி கணக்கிடுவது என்பதை உப-ஷரத்து (2) விளக்கியிருக்கிறது. இதற்கு கீழே ஒரு உதாரணம் தரப்படு கிறது :—

ஹயர்-பர்சேஸ் விலை	ரூ 20,000
"சீஸ்" ஆன தேதி வரை கட்டப்பட்டிருக்கும் தொகை	ரூ 10,000
"சீஸ்" ஆனதேதியில் பொருளின் மதிப்பு	ரூ 15,000

என்று வைத்துக்கொள்வோம். கட்டிய தொகை (ரூ 10,000) பொருளின் மதிப்பு (ரூ 15,000) இரண்டும் சேர்த்து ரூ 25,000 ஆகிறது. ஹயர்-பர்சேஸ் விலை (ரூ 20,000), இந்த (ரூ 25,000) தொகையைக் காட்டிலும் ரூ 5000 கம்மி. ஆகவே இந்த 5000 ரூபாயை ஓனரிட மிருந்து ஹயரர் திரும்பப் பெறலாம். இதை தரும்படி கேட்டு நோட்டீஸ் தந்த தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் இதை வழங்காவிடில், 16-வது ஷரத்தின் உப-ஷரத்து (3)-ன் படி, ஆண்டொன்றுக்கு 6 சதவிகிதம் வீதம் இதற்கு ஓனர் வட்டி சேர்த்து கொடுக்கவேண்டும். மேற்படி 60 நாள் கெடு தேதி காலாவதியாகும் தினத்திலிருந்து இது போல் வட்டி சேர்த்து தரவேண்டும்.

16-வது ஷரத்து, ஒரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தை ''டெர்மினேட்'' செய்ய ஓனருக்கு உரிமை அளிக்கிறது.

18-வது ஷரத்து, ஒரு ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தம் ''டெர்மினேட்'' செய்யப்பட்டபின் ஓனருக்குள்ள உரிமைகளை விளக்குகிறது.

இருப்பிடத்திற்குள் பிரவேசிக்கும் உரிமை

ஹயரரின் இருப்பிடத்திற்குள் பிரவேசித்து பொருளை ''சீஸ்'' செய்வதற்கு ஓனருக்குள்ள உரிமையை உப-ஷரத்து (1) தெளிவுபடுத்து கிறது. அதாவது, 19-வது ஷரத்தில் வரையறுக் கப்பட்டிருக்கும் சட்டப்பூர்வமான விகிதாசார தொகை ஹயரரால் செலுத்தப்பட்டிருந்தோ அல்லது ஹயரரின் சார்பாக தரப்பட்டிருந்தோ அல்லது ஜாமீன்கொடுக்கப்பட்டிருந்தோ இருந் தால் ''சீஸ்'' செய்யும் உரிமையை ஓனர் பிரயோகிக்கமுடியாது. (16-வது ஷரத்தின்கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்கவும்).

19-வது ஷரத்து கூறுவதாவது: ''உப-ஷரத்து (1)-ல் விளக்கம் செய்திருப்பது போல சட்டப் பூர்வமான விகிதாசாரம் செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில், ஹயரரிடமிருந்து பொருளை ஓனர் பறி முதல் செய்யக்கூடாது. அப்படிச் செய்வதாயிருந் தால் ஒரு கோர்ட்டில் மனு தந்து வழக்குதான் போடலாம்.

மோட்டார் வாகனங்களுக்கும், மற்ற பொருள்களுக்கும் சட்டபூர்வமான விகிதா சார தொகை எது என்பதை உப-ஷரத்து (1)க்குள்ள விளக்கம் வியாக்கியானம் செய் கிறது.

இந்த ஷரத்துகளை மீறுவோருக்கு விதிக்கக் கூடிய தண்டனைகளை உப-ஷரத்து (2) விளக்கு கிறது.

நகல்களை தருவது ஓனரின் பொறுப்பு

ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தின் நகல்களை தருவது, கட்டிய பணம் ஆகிய விவரங்களை தருவது பற்றி விளக்குகிறது 22-வது ஷரத்து. இந்த நகல்களையும், தகவல்களையும் ஓனர் தரத்தவறினால், ஹயரருக்கு எதிராக ஒப்பந்தத்தை ஓனரால் அமல் நடத்த முடியாது. உத்திர வாத கானடிராக்ட் ஏதாவது இருந்தால் அதையும் அமல் நடத்த முடியாது. ஹயரரிட

தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டது

வால்வ் ராக்கர் ஆர்ம் ஷாப்ட்டுகள்

உள்ளூர் வியாபாரியிடம் கிடைக்கும்

ஏகபோக விற்பனையாளர்கள்:

விஸ்ராம் ஆட்டோமோடிவ் சர்வீஸ், தபால் பெட்டி 725, சென்னை-6.

மிருந்து பொருளை திரும்பப்பெற உரிமையை யும் பிரயோகிக்கமுடியாது. ஜாமீன் ஏதாவது கொடுக்கப்பட்டிருந்தாலும், அதை யும் அமல் நடத்த முடியாது. 2 மாதம் அல்லது இதற்கு அதிகமாக இத் தவறை ஓனர் தொடர்ந்து இழைக்கும் பட்சத்தில் ரூ. 200 வரை ஓனருக்கு அபராத தண்டனை விதிக்கலாம்.

ஓனருக்கு எதிராகவோ அல்லது ஹயரருக்கு எதிராகவோ மூன்றாம் நபர்கள், பொருள்மீது அவர்களுக்குள்ள (வில்லங்கமுள்ள) உரிமை களைப் பாதுகாக்க உப-ஷரத்து (4), ஒரு விசேஷ ஷரத்தாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

இன்சால்வெண்ட் ஆனால்......

சொத்து பாத்தியதை உரிமையின் தத்துவப் படி, இன்சால்வெண்ட் ஆகும் ஒருவரின் பாத்தி யதையில் இருக்கும் எல்லா பொருட்களும் கோர்ட்டார் நியமிக்கும் Official Receiver அதி காரியின் பொறுப்புக்கு மாறிவிடுகின்றன. ஆகவே, ஒரு ஹயரர், இன்சால்வெண்ட்டாகி விடும் பட்சத்தில், ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தின் கீழுள்ள பொருளானது, கோர்ட் அதிகாரியின் பொறுப்புக்கு வந்து விடுகிறது. பொருளின் ஓனருக்கு இது சொல்லொணா சிரமங்களை விளை விக்கிறது. இந்த சிரமங்களைப் போக்குகிறது 24-வது ஷரத்து. அதாவது ஒரு ஹயரர் இன்சால் வெண்ட் ஆகும் பட்சத்தில், ஹயரருக்கு என்ன உரிமைகளும், பொறுப்புகளும் உண்டோ அவை மட்டும்தான் இந்த கோர்ட் அதிகாரிக்கும் இருக்கும். இன்சால்வெண்ஸி கோர்ட்டின் அனுமதியுடன், ஹயரரின் உரிமையை வேறொரு வருக்கு இந்த கோர்ட் அதிகாரி வழங்கலாம். இம்மாதிரி மாற்றிக்கொடுப்பதை ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தத்தில் தடை செய்யப்பட்டிருந்தால்கூட, இப்படிச் செய்யலாம். ஒரு ஹயரர், ஒரு கம்பெனியாக இருந்து, இக்கம்பெனி திவாலாகி மூடப்பட்டால், இதற்கும் இந்த ஷரத்து பொருந்தும்.

ஒன்றுக்கு அதிகமான ஒப்பந்தங்கள் இருந்தால்......

25-வது ஷரத்து, ஒன்றுக்கு அதிகமான ஒப்பந்தங்கள் பற்றியது. அதாவது ஒரு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு ஹயரர், சட்டப்பூர்வமான விகிதாசாரத் தொகையை கட்டியானபிறகு, அதே ஓனரிடமிருந்து மேற்கொண்டு பொருள்களை வாங்க விரும்பலாம். முதல் ஒப்பந்தத்தின் கீழ் தந்த பொருட்களுக்கும், பிறகு வாங்கிய பொருட் களுக்குமாக சேர்த்து, ஒருங்கிணைத்த ஒப்பந்த மொன்றை செய்துகொள்ளலாம். முதல் ஒப்பந்தத்தின் கீழ் ஹயரருக்குள்ள உரிமைகள் இதனால் பாதிக்காது. அதாவது முதல் ஒப்பந்தம் விஷயத்தில் சட்டப்பூர்வமான விகிதாசார தொகையை ஹயரர் கட்டியிருந்தால், முதல் ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள பொருட்களை ஓனர் ''சீஸ்'' செய்ய முடியாது.

இந்த சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னதாக செய்துகொள்ளப்பட்டிருக்கும் ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தங்களுக்கு இச் சட்டம் பொருந்தாது.

எவ்விடத்திற்கும்
எவ் வாகனத்திற்கும்
ஏற்றது
BM ஸ்பிரிங்குகள்

BM Springs

பம்பாய் மோட்டார் டிரேடிங் கம்பெனி

டெலிபோன்: 46 & 127 கபுர்தலா தந்தி :AUTOSPRING

ஜெயராம் மோட்டார் சர்வீஸ் ரிட் வழக்கு வெற்றி

ராஜபாளையம், ஜெயராம் மோட்டார் சர்வீஸ் தாக்கல் செய்திருந்த ஒரு ரிட் மனுவை, சென்னை ஹைக்கோர்ட் நீதிபதி திரு P. ராமகிருஷ்ணன் அனுமதித்திருக்கிறார். திருநெல்வேலி லயன் ஆட்டோமொபைல் சர்வீசுக்கு சென்னை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அப்பீல் டிரிபூனல் (STAT), ரூட் எக்ஸ்டென்ஷன் கொடுத்து, 16-10-1965-ல் பிறப்பித்த உத்திரவு, ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கின் விவரமாவது: கோவில் பட்டியிலிருந்து சிவகிரிக்கு, திருநெல்வேலி லயன் ஆட்டோமொபைல்ஸ் இரண்டு பஸ் ரூட் பெர்மிட்டுகளை வைத்திருந்தது. சிவகிரியிலிருந்து, தளவாய்புரத்துக்கு ரூட்டை நீடித்துக்கொடுக்க (எக்ஸ்டென்ஷன்) கேட்டு, நெல்லை ஆர். டி. ஏ.-க்கு லயன் ஆட்டோமொபைல்ஸ் மனுச் செய்தது. இதை ஆர். டி. ஏ நிராகரித்தார். STAT-க்கு லயன் ஆட்டோமொபைல்ஸ் அப்பீல் செய்தது. இதன்பேரில் ஆர். டி. ஏ. வின் முடிவை STAT ரத்துச்செய்து, இந்த எக்ஸ்டென்ஷனை வழங்கியது. இதை ஆட்சேபித்தே ஜெயராம் மோட்டார் சர்வீஸ், சென்னை ஹைக் கோர்ட்டில் ரிட் வழக்கு போட்டது.

இந்த (எக்ஸ்டென்ஷன்) விஷயம் ஆர். டி. ஏ. கூட்டத்தில் பரிசீலனைக்கு வந்தபோதே, ஒரு பூர்வாங்க ஆட்சேபணையை கிளப்பி அதை ஜெயராம் மோட்டார் சர்வீஸ் எதிர்த்தது. STAT பிறப்பித்த உத்திரவு, அதன் அதிகார வரம்பை மீறியதாகும். ஏனென்றால் ரூட் மாறுதலுக்கு மனு கொடுக்கப்பட்ட தேதியன்று, மோட்டார் வாகன சட்டத்தின் கீழ், இதற்கு அப்பீல் செய்யும் உரிமை இருக்கவில்லை 64-ஏ பிரிவின் கீழ் ரிவிஷன் கேட்கும் உரிமை மட்டும்தான் இருந்தது. மோட்டார் வாகன விதிகளின் 147-வது விதிக்கு இது சம்பந்தமாக செய்யப்பட்ட (அப்பீல் உரிமை அளிக்கும்) திருத்தமானது, 1965 ஜூன் 2-ந்தேதியன்றுதான் கெஜெட்டில் பிரசுரமாகியது என்று ஜெயராம் மோட்டார் சர்வீஸ் சார்பில் வாதாடப்பட்டது.

ஆர். டி. ஏ. வின் உத்திரவு, தனக்கு 26-5-1965 அன்று தெரியப்படுத்தப்பட்டது என்றும், இந்த தேதியிலிருந்து அப்பீல் தாக்கல் செய்ய தனக்கு 30 நாள் அவகாசம் இருந்தது என்றும், இந்த இடைக்காலத்தில், அப்பீல் செய்வதற்கான உரிமை (1965 ஜூன் 2உ) வழங்கப்பட்டுவிட்டது என்றும் ஆகவே தனது அப்பீல் செல்லத்தக்கதே என்றும் லயன் ஆட்டோமொபைல் சர்வீஸ் சார்பில் எதிர்வாதம் விடப்பட்டது. ஹைக்கோர்ட் நீதிபதி, தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பதாவது: ''இந்த விஷயம் STAT முன் எழுப்பப்படவில்லை என்றாலும், இந்த ஆட்சேபணையானது ஜீவாதாரமானதாக உள்ளதால், ஒரு ரிட் மனு வாயிலாக ஹைக்கோர்ட்டின் கவனத்துக்கு கொண்டுவரமுடியும். ஆகவே இந்த ஜீவாதாரமான ஆட்சேபத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். பிரதிவாதியின் வாதத்தை நிராகரிக்கிறேன். ஒரு அப்பீல் செய்ய சட்டப்பூர்வமாக அளிக்கப்படும் உரிமையை, முன் தேதியிட்டு அமல் நடத்த (இத்தகைய வசதி சட்டத்திலேயே வழங்கப்பட்டிருந்தாலொழிய) கோரமுடியாது இந்த ரீதியில் பார்க்கும்போது, பிரஸ்தாப தேதியன்று, பிரதிவாதிக்கு இருந்த ஒரே வழி, ரிவிஷன்தான்; அப்பீல் உரிமை அல்ல. ஆகவே அதிகார வரம்புக்கு உட்படாததால், இந்த ரிட் மனுவை அனுமதிக்கத்தான் வேண்டும்.

''ஆனால், சட்டப்படி உரிய அதிகாரியிடம் சமர்ப்பித்து பைசலுக்கு வழி தேடிக்கொள்வதற்கு இந்த அப்பீலை பிரதிவாதிக்கு STAT விரும்பினால் திருப்பித்தரலாம்."

GENUINE
ROSY
(REGD)
ROSY INDUSTRIES (Regd)
Manufacturers of
Service Parts
MOTOR & AUTO ELECTRICAL PARTS
450, Central Motor Market, Punja Sharif,
Kashmere Gate, DELHI-6.

டிஸ்மிஸ்ஆன ஊழியருக்கு போனஸ் தரமுடியுமா?

கோடைகானல் பஸ் கம்பெனி வழக்கில் ஹைக்கோர்ட் முடிவு

திரு. ஏ. நல்லதம்பி, கோடைகானல் மோட்டார் யூனியன் (பிரைவேட்) லிமிடெட்டில் ஒரு கண்டக்டராக வேலை பார்த்து வந்தார். ஒரு பஸ்ஸின் பிரேக் டியூப்பை தில்லுமல்லு செய்து கெடுத்துவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டு 21-11-1961 அன்று இவர், வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார் பிரேக் டியூபை இவர் கெடுத்ததால், ஒரு பெரிய விபத்து ஏற்பட்டு, கம்பெனி ரூ 3000 நஷ்டமடைந்ததாக கூறப் பட்டது.

1960-61-க்கு இக்கம்பெனி அதன் தொழிலாளர்களுக்கு அளித்த போனஸ் தொகையைத் தானும் பெற உரிமை உண்டென திரு நல்லதம்பி ''கிளெய்ம்'' போட்டார். தான் டிஸ்மிஸ் செய்யப் பட்டிருந்தாலும், இந்த போனஸைப் பெற தகுதியுண்டு என்று வாதாடினர். இது தவிர ஜாமீன் தொகையாக தான் கொடுத்திருந்த 50 ரூபாய் வேறு கம்பெனியிடம் இருப்பதாயும், இதையும் தனக்கு திருப்பித்தரவேண்டும் என்றும் திரு நல்லதம்பி கேட்டிருந்தார். தொழில் தகராறு சட்டத்தின் 33-C (2) பிரிவின் கீழ் தொடுக்கப் பட்டிருந்த இந்த "கிளெய்ம்" மனுவை விசாரித்த, மதுரை லேபர் கோர்ட், திரு நல்ல தம்பியின் வாதத்தை ஏற்றுக்கொண்டு டி இரு கோரிக்கைகளையும் அனுமதித்து, சாதகமாக உத்திரவு பிறப்பித்தது.

லேபர் கோர்ட்டின் இந்த முடிவை ஆட்சேபித்து டி பஸ் கம்பெனி, சென்னை ஹைக்கோர்ட்டில் ரிட் வழக்கு போட்டது. ஒரு டிரிபூனல் மூலமாக பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்பபோ அல்லது தொழிலாளிக்கும்—நிர்வாகிகளுக்கும் இடையே ஒரு சமரஸ ஒப்பந்தமோ எதுவும் இல்லாதிருக்கும் வரை, போனஸ் கேட்டு 33-C (2) பிரிவின் கீழ் ஒரு தொழிலாளி "கிளெய்ம்" போடமுடியாது என கம்பெனி சார்ப்பில் வாதாடப்பட்டது.

ஹைக்கோர்ட் நீதிபதி திரு P. ராமகிருஷ்ணன் பின்கண்ட தீர்ப்பை அளித்தார்:—''போனஸை பெறுவதற்கு ஒரு தொழிலாளிக்கு உரிமை இருந்தால், இந்த உரிமையை கோர்ட் மறுக்க முடியாது. டிரிபூனல் தீர்ப்போ அல்லது ஒரு சமரஸ ஒப்பந்தமோ இல்லாவிடினும், போனஸ் மீது உள்ள உரிமைக்கு எதிராக லேபர் கோர்ட் தீர்ப்பளிக்கமுடியாது. அதாவது இதை கவனிப்பதற்குள்ள அதிகாரத்தை லேபர் கோர்ட் இழந்து விடாது. ஆனல் எந்த சந்தர்ப்பத்தில் போனஸ்மீது உரிமை கொண்டாடப்படுகிறது; அதை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கு தகுதி உண்டா இல்லையா என்ற விஷயத்தையே பிரதானமாக கவனிக்கவேண்டும்.

''கெட்ட நடத்தைக்காக டிஸ்மிஸ் ஆன ஒரு ஊழியர், போனஸ் பெறமுடியாதென கூறுவது தொழிலாளி-நிர்வாகி சுமுக உறவை வளர்ப் பதற்கு உகந்ததாக இருக்காது என்றாலும், நிர்வாகிகளுக்கு சேதமோ நஷ்டமோ விளைவித்ததற்காக டிஸ்மிஸ் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் இதற்கு ஒரு விதிவிலக்கு அவசியமே. சேதமோ, நஷ்டமோ விளைவித்ததாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டால், போனஸை பெறுவதற்கு அந்த ஊழியருக்குத் தகுதி கிடையாது. இதற்கு மாறான ஒரு பழக்கம் கம்பெனியில் இருந்து வந்தால் அதை நிருபிக்கும் பொறுப்பு தொழிலாளியுடையதே.

கெட்ட நடத்தைக்காக டிஸ்மிஸ் செய்யப் பட்ட ஊழியர்களுக்கு 1960-61க்கு முன்னதாக எந்த வருஷமும் போனஸ் தரவில்லை என்பதை நிரூபிக்க கம்பெனி ஆதாரம் காட்டவில்லை என்று லேபர் கோர்ட் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆதாரத்தை நிரூபிக்கும் பொறுப்பு தவருன கட்சிக்காரர்மீது சுமத்துவதாகும் இந்த முடிவு. ஆகையால் இந்த தொழிலாளி போனஸ் பெற உரிமை உண்டு என்று லேபர் கோர்ட் செய்த முடிவு சட்ட நியதிக்கு புறப்பானது. எனவே லேபர் கோர்ட்டின் முடிவை ரத்துச் செய் கிறேன்.

''ஜாமின் டெபாஸிட் பணம் பொறுத்தவரை, இப்பணம் தொழிலாளியினுடையதே. சாதாரணமாக இதை திருப்பிப்பெற இவருக்கு உரிமை உண்டு. நஷ்டம் விளைவித்ததற்கு இப் பணத்தைப் பிடித்துவைத்துக்கொள்வதாயிருந் தால், இதற்கான ஆதரத்தை கம்பெனி நிர்வாகிகள் நிரூபிக்கவேண்டும். இந்த வழக்கில் இது மாதரி ஏதும் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே டெபாஸிட் பணத்தை தொழிலாளிக்குத் திருப்பித் தர உத்திரவிடுகிறேன்.''

ஏன் S·N·S பிராண்டுகள்

HALL MARK OF QUALITY

யூனிவர்சல் ஜாயிண்ட் ரிப்பேர் கிட்டுகள் யாவராலும் உபயோகித்து நன்மதிப்பை அடைந்துள்ளது.



அமெரிக்க இன்ஜினியர்களின் உதவியால் S·N·S யூனிவர்சல் ஜாயிண்ட் கிராஸ்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பரிசோதிக்கப்பட்டு அமெரிக்கன் பிளாண்டில் தயாரிக்கப்படுகிறது. தயாரிப்பில் தரக்குறைவு இருப்பின் அவைகளை இலவச ரீபிளேஸ்மெண்ட் செய்து தரப்படும். எல்லாவகை டிரக், பஸ், கார்களுக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்படுகிறது.

தயாரிப்பாளர்கள்:
தாராஸிங் ஹர்பீந்தர்ஸிங்
190, பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2

போன்:
315156
கிராம்ஸ்:
ORGANDIES

Mfrs:
TARASINGH HARBINDER SINGH
190, PRINCESS ST., BOMBAY-2
Factory: Near CHECKNAKA DAHISAR (EAST)
BOMBAY-68

Phone: 315156



டிவின் ஸ்லாட் கன்வேயரின் ஒரு தோற்றம். முன்பக்கம், ரியர் & பிரண்ட் பிக்சர் தூண்களையும், பின்னல் உயர தூக்கி வேலை செய்யும் தளத்தையும் காணலாம்.

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸில் உள்ள டிவின் ஸ்லாட் கன்வேயர்

கார் பாகங்களைப்பூட்ட நவீன வசதி

ஒரு மோட்டார் வாகனத்தை தயாரிப்பதற்கு "நகரும் அசெம்பிளி லைன்" யுக்தியை முதல் முதலில் போர்டுதான் கண்டுபிடித்தார். அது முதல் மோட்டார் கார்களை ஏராளமான அளவில் தயாரிப்பதற்கு இந்த யுக்திதான் அடிப்படையாக இருந்து வந்திருக்கிறது.

இந்தியாவில் ஹிந்துஸ்தான் டிரக்குகளையும், அம்பாஸிடர் கார்களையும் தயாரிக்கும் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் (கல்கத்தா) 1948–49-ல் அவர்களது அசெம்பிளி நடவடிக்கைகளைத் துவங்கினர். இதே யுகதியைத்தான் அவர்களது தொழிற்சாலையில் இவர்கள் கண்டிப்பாக பின்பற்றுகின்றனர். பாடிகட்டுதல், பெயிண்ட் அடித்தல், பாடிக்கு மெருகு ஏற்றுதல், இறுதி வேலைப்பாடுகள் யாவும் இந்த நகரும் "கன்வேயர்"கள் மீதே நடை பெறுகின்றன.

உள்நாட்டு மூலப் பொருள்களையே அதிகளவில் உபயோகிக்கும் பரந்த லட்சியத்தைக் கொண்ட ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ், அவர்களது தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டபோது, சவாலை ஏற்று **சொந்தத்தில்** இந்த கன்வேயர்களை தயாரித்தனர். ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் இளம் இன்ஜினீர்களே இந்த கன்வேயர்களை சொந்தமாக டிசைன் செய்து, முழுக்க முழுக்க உள்நாட்டு மூலப் பொருட்களைக்கொண்டே இவைகளைத் தயாரித்திருக்கின்றனர். இவைகளில் ''டிவின் ஸ்லாட் கன்வேயர்'' என்று அழைக்கப்படும், கார் அசெம்பிளியில் இருக்கும் புதிய கன்வேயர், மிகப் பிரமாதமானது.

வேலையை எளிதாக்குகிறது

ஒரு மோட்டார் வாகனத்தைபூட்டும் வேலை மிகவும் நாசூக்கானது: திறமையும், நுணுக்கமும் மிகுந்திருக்கவேண்டும். அதிலும் ரியர்–பிரண்ட் சஸ்பென்ஷன்கள், டார்ஸியன் பார்கள், புரொபல்லர் ஷாப்ட்டுகள், டை பார்கள், ஷாக் அப்சார்பர்கள், பவர் யூனிட்டுகள் முதலியனவற்றை மாட்டுவதற்கு, காருக்கு அடியில் கீழே நின்று வேலை செய்யவேண்டியிருக்கிறது. பின் பக்க பம்பர்கள், பெட்ரோல் டாங்கி முதலியனவற்றை பின்பக்கத்திலும், ரேடியேட்டர், கிரில் பிரேம், முன பக்க பம்பர், ஹெட் லைட்டுகள் முதலியனவற்றை முன்பக்கத்திலும் பொருத்தவேண்டியிருக்கிறது. சக்கிரங்களை பக்க வாட்டத்திலிருந்து மாட்டவேண்டியிருக்கிறது. இந்த எல்லா வேலைகளும் துரிதமாக நடைபெற வேண்டும் என்ருல், சௌகர்யமான இடத்தில், இடைஞ்சல் இன்றி நின்று, வேலை செய்ய வசதி இருக்கவேண்டும்.

பழைய முறையில் ஒரு பள்ளம் தோண்டி அதனுள் நின்றுக்கொண்டுதான் இவ்வேலைகள்



பாடி தூக்கி பொருத்தப்படுகிறது. ரியர் ஆக்ஸில் பூட்டப்படுகிறது.

நடந்தன. வண்டியை முன்னும் பின்னும் கையால் தள்ளி வேலை செய்தனர். வேலை செய்வது இதனால் கஷ்டமாக இருந்தது. புதிய அபிவிருத்திகள் செய்வதற்கு அவசியமேற்பட்டது.

ஒரே சமயத்தில் 30 கார்கள்

இதை அடுத்து சிருஷ்டிக்கப்பட்டதுதான் இந்த கன்வேயர். இது தானாக நகர்ந்து செல்கிறது. ஒரே சமயத்தில் 30 கார்களை இதன் மீது ஏற்றி வேலை செய்யலாம். கார்களுக்கு கொஞ்சம் கூட அலுங்கல் குலுங்கல் ஏற்படுத்தாமல் மேலும் கீழும் ஏறி இறங்குகிறது.

இந்த டிவின் ஸ்லாட் கன்வேயரின் நீளம் 530 அடி. 1,20,000 ராத்தல் எடையைத் தாங்கும் 4 பட்டை சங்கிலியைக் கொண்டு சுழலுகிறது 3,180 பலகைகளைக் கொண்ட இதன் அடிதளத்தைத் தாங்க 60 உறுதியான தூண்கள் இருக்கின்றன. 4½ அடி உயரம், 80 அடி நீளத்திலிருந்து துவங்கி, பிறகு 160 அடிக்கு, 7 அடி உயரம் வரை எழும்புகிறது. பிறகு மறுபடி தரை மட்டத்துக்கு இறங்குகிறது. இந்த இரண்டு (டிவின்) ஸ்லாட் கன்வேயர்களுக்கும் மத்தியில் உள்ள இடைவெளி 4 அடி 6 அங்குலம். இரண்டும் ஒரே வேகத்தில் சமமாக 7 குதிரை சக்தி மோட்டாரில் நகருகின்றன. விருப்பம்போல சௌகர்யமாக வேண்டிய அகலத்துக்கு நீட்டவும், குறுக்கவும் வசதியாக தூண்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

160டன் உருக்கு!

இந்த கன்வேயரை உருவாக்க 160டன் உருக்கு செலவிடப்பட்டிருக்கிறது. பாடியை தூக்கி பொருத்தவும், இன்ஜினை தூக்கி பொருத்துவதற்கும், மேலே எங்கு வேண்டுமானாலும் நகர்ந்து செல்லும் இரண்டு கிரேன்கள் உள்ளன. இந்த கிரேன்களும் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின சொந்த தயாரிப்பாகும்.

ஜோடிக்கும் அழகு

அடுத்தபடியாக இந்த டிவின் ஸ்லாட் கன்வேயரில், பல்வேறு வேலைகள் எந்த மாதிரி அழகாக நடைபெறுகின்றன என்பதை பார்ப்போம். விசேஷமாக உருவாக்கப்பட்ட குதிரைகள் மீது ரியர் ஆக்ஸில் உட்கார்ந்திருக்கிறது. கிரேன் உதவியால் பாடி, இதன் மீது தூக்கி பொருத்தப்படுகிறது. வேலையாட்கள் இருபக்கத்திலும் தரையில் நின்று கொண்டு பாடியில் ரியர் ஆக்ஸிலைப்

MICO STANDS FOR QUALITY

To suit all automotive vehicles, tractors and stationary engines, MICO manufactures a full range of Fuel Injection Equipment and different types of Spark Plugs, under licence from BOSCH, Germany, the pioneers in the manufacture of Spark Plugs and Fuel Injection Equipment. MICO, the leading factory of its kind in India, has established a nation-wide net-work of over 150 authorised Sales and Service Stations to render adequate service to its customers.

MICO **LICENCE BOSCH**

MOTOR INDUSTRIES CO. LTD., BANGALORE



உயர் மட்டத்திலிருந்து தரை மட்டத்திற்கு கார்கள் நகர்ந்து வருவதைப் பார்க்கிறீர்கள்.

★

பூட்டுகின்றனர். பிறகு பாடியுடன் சேர்ந்து கன்வேயர் சிறிது மேலே உயருகிறது. இப்போது பிரண்ட் சஸ்பென்ஷன், டார்ஸியன் பார், புரொபல்லர் ஷாப்ட், பவர் யூனிட் முதலியவை மாட்டப்படுகின்றன. தரையில் செய்யவேண்டிய வேலைகளையும், பாடிமீது செய்யவேண்டிய வேலைகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொனறு இடைஞ்சலின்றி செய்து முடிக்க தகுதியான உயரத்தில் கன்வேயர் எழும்பி நிற்கிறது.

அடுத்த கட்டம் சோதனை. எல்லா பிட்டிங்குகளும் சோதிக்கப்படுகின்றன. தரை மட்டத்திற்கு கன்வேயர் இறங்குகிறது. ரேடியேட்டர், பாட்டரி, கிரில், பம்பர்கள், டயர்கள் ஆகியவை மாட்டப்படுகின்றன.

இப்போது கார் வெளியே வர தயார். ஆனால் கன்வேயரின் இறுகுப்பிடியிலிருந்து அதை விடுவித்தாகவேண்டுமே! இது மிக எளிய முறையில் ஆட்டோமாடிக்காக நடந்து விடுகிறது.

கல்யாண ஊர்வலம்!

இந்த பூராவேலைகளும் ஒரு உற்சாகமான கல்யாண ஊர்வலம்போல காட்சியளிக்கிறது. கையாளப்படும் பல்வேறு விசை ஆயுதங்கள் வாத்திய சங்கீதம்போல முழங்குகின்றன. வேலைக்கு வேண்டிய பெரிய-சிறிய சாமான்கள் யாவும் மிகச் சிறந்த முறையில் கையில் எடுத்து உபயோகிப்பதற்கு லாவகமாக அந்தந்தஇடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது மற்றொரு சிறப்

வேலைப்பாடு முடிந்த கார்கள் கன்வேயரிலிருந்து விடுபட்டு வெளி வரும் காட்சி.

பாகும்.

அபிவிருத்திகள் செய்வதற்கு முடிவே கிடையாது என்பதை நன்கு உணர்ந்திருக்கும் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் இன்ஜினீர்கள், தரத்தையும், எண்ணிக்கையையும் மேன்மேலும் உயர்த்த புதுப்புது இயந்திர யுக்திகளைக் கண்டு பிடிப்பதில் அயராது உழைத்து வருகின்றனர்.

(ஆதாரம்: "H. M. டாபிக்ஸ்.")

இலங்கைக்கு "ஹிந்துஸ்தான்"

இலங்கைக்கு 69 ஹிந்துஸ்தான் டிரக்குகளை, கல்கத்தா ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் சப்ளை செய்கிறது. இவற்றில் 34 டிரக்குகள் 167" வீல் பேஸ் சாஸிகளாகும். 15 வண்டிகள், டிப்பர்கள் (120" வீல் பேஸ் சாஸிகள்). பாக்கி 20, பார்வர்டு கண்டிரோல் 120" வீல் பேஸ் லைட் கமர்ஷியல் சாஸிகளாகும். இந்த ஆர்டரின் மொத்த மதிப்பு ரூ 16 லக்ஷம்.

இவைகளில் ஒரு டிரக், கல்கத்தா துறைமுகத்தில் "பாருன்" என்ற கப்பலில் ஏற்றப்படும் காட்சி.

REPLACE YOUR OLD TRUCK WITH A NEW HINDUSTAN J6 FOR ONLY RS. 10,000

– initial deposit

The balance may be paid in easy instalments of about Rs. 1,500 over 29 months.

Contact Hindustan Motor Corporation Ltd. through your nearest Hindustan truck dealer.

A grand opportunity for operators! By replacing your old truck with the powerful Hindustan J6 7½ tonner truck, you not only cut down your maintenance, repair and fuel costs—you actually earn more money because of the faultless performance and bigger pay-load of the J6. Right from the beginning, you pay as you earn—without strain and worry!



ASP/HM-13/68

EXTRA PAYLOAD
EXTRA PROFITS
LOWEST PRICED TRUCK IN ITS RANGE

- Powerful new Bedford Diesel engine 5420 c.c. (330 cu. in.) which develops 112 H.P. (SAE)
- Heavier front axle 3728 kg (8200 lbs) and rear axle 8182 kg (18000 lbs)
- Safer servo-assisted air pressure brakes
- G.V.W. 11000 kg (24250 lbs); W.B. 3.94 m (155"), 4.24 m (167") and 4.55 m (179")

Full Forward Control Models also available

**Sales Representatievs and Service Engineers in all States*

HM

HINDUSTAN MOTORS LIMITED, CALCUTTA

இளம் பெண்களைக் கண்டு அஞ்சும் டிரைவர்கள் !

''கிழக்கு ஜெர்மனியில் எல்லா நகரங்களிலும் இளம் பெண்கள் டிராபிக்கை கண்டிரோல் செய்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். எனது காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்த டிரைவர், இம் மாதரி நின்று கொண்டிருந்த ஒரு யுவதியை சுட்டிக்காட்டி, ''இந்த ஈர்குச்சியைப் பாருங்கள்; பூ என்று ஊதினால் கீழே வீழ்ந்து விடுவாள்! அப்படியிருந்தும் இங்கு நின்றுகொண்டு டிராபிக்கை கண்டிரோல் செய்யப்பார்க்கிறாள்'' என்று வெறுத்துக் கொண்டார்.

''பின் எதற்காக அவளது சிக்னல்களை மதிக்கிறீர்கள் ?'' என்று நான் கேட்டேன்.

அந்த டிரைவா சிரித்துக்கொண்டு, ''மதிக்காமல் போனால், இந்த இடத்திலேயே அவள் எனக்கு அபராதம் விதித்து தண்டித்து விடுவாள்; என் டிரைவிங் லைசென்ஸைக் கூட அவள் ரத்துச் செய்ய முடியும்'' என்றார். பெண்களுக்கு இந்த அளவுக்கு கிழக்கு ஜெர்மனியில் மதிப்பிருப்பதைப் பார்த்து நான் பெருமை அடைந்தேன்."

— கிழக்கு ஜெர்மன் சுற்றுப் பிரயாணம் பற்றி சென்னையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் திரு மோகன் குமாரமங்கலத்தின் மனைவியார் திருமதி கல்யாணி குமாரமங்கலம் குறிப்பிட்டது. புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஜெர்மன் ஜனநாயக குடியரசின் சஞ்சிகையான ''டெமோகிராடிக் ஜெர்மனி"யிலிருந்து.

ஆஸ்திரியாவில் பெர்கின்ஸ் சக்கைபோடு !

கம்யூனிஸட் நாடான ஆஸ்திரியாவில் பிரிட்டிஷ் பெர்கின்ஸ் டீஸல் இன்ஜின்களின் விற்பனை, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 102 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

கிளாஸ்–பைபர் பாடியுடன் Pax V 15 டன் டிரக்

பிரிட்டனிலுள்ள டென்னிஸ் பிரதர்ஸ் லிமிடெட், முழுக்க முழுக்க கிளாஸ் பைபர் பாடியுடன் கூடிய புதிய ரக **Pax V 15** டன் டிரக்குகளை தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். 6–354 பெர்க்கின்ஸ் இன்ஜினைக்கொண்டது இது.

"சூப்பர் குஷன்"

குட் இயரின் புது ஷாக் அப்சார்பர்

''சூப்பர் குஷன்'' என்ற பெயரில் ஒரு புது ஷாக் அப்சார்பரை, குட் இயர் இந்தியா, வெளியிட்டிருக்கிறது. இந்திய மார்க்கெட்டில் எல்லா ஆட்டோ கடைகளிலும் இது விற்பனைக்குக் கிடைக்கும்.

நீண்ட காலம் உழைப்பதற்கு விசேஷ பிஸ்டனும், ரிங்குகளும் கொண்டு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கார் 20,000 மைல் ஓடியான பிறகு ஷாக் அப்சார்பர்களைப் புதுப்பித்து போட வேண்டும் என்று குட் இயரைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினார்.

2-வது பிரமாண்ட டயர் ஆலை

ஐரோப்பாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய டயர் ஆலை ஆட்ரோகொவைஸ் (செகோஸ்லாவேகியா) என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இத்தாலி–ரஷியா–மேற்கு ஜெர்மனி–செகோஸ்லாவேகியா ஆகிய வற்றைக் சேர்ந்த தலைசிறந்த நிபுணர்களின் மேற்பார்வையில் அமைக்கப்படும் இந்த டயர் தொழிற்சாலை இன்ஜினீரிங் தொழில் நுணுக்கத்தில் நவநாகரீகமானதாக திகழும்.

ஆளே இல்லாமல் உழும் டிராக்டர் !

ஓட்டுவதற்கு ஆளே இல்லாமல் எலக்டிரானிக் விசைக் கருவி மூலம் தானாக வயல்களை உழுது தள்ளும் டிராக்டர்களை பிரிட்டிஷ் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கேந்திரம் தயாரித்து தருகிறது.

கார்களை சுமக்க 7 அடுக்கு கப்பல் !

ஒரே சமயத்தில் 2,700 கார்களை சுமந்து செல்லும் ஏழு அடுக்குகளைக்கொண்ட ஒரு கப்பலை ஹாம்பர்க் (மேற்கு ஜெர்மனி) துறை முகத்தில் உருவாக்கி வருகிறார்கள். கார்களை நேராக கப்பலுக்குள் ஓட்டிவந்து நிறுத்து மளவுக்கு வசதியாக இக்கப்பலின் பக்கவாட்டில் கதவுகள் அமைக்கப்படுகின்றன.



ஹைஜாலைக்ஸ்

நீடித்து உழைப்பதற்காக
சிறந்த மூலப் பொருட்களைக்
கொண்டு தற்போது இந்தியாவிலேயே
தயாரிக்கப்படுகிறது.
எல்லோராலும் விரும்பப்படும்
நம்பகமான பல்புகள்.



விநியோகஸ்த்தர்கள் :

வி. டி. ஸி.

ஆட்டோமொபைல்ஸ்

41, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை-2

2,50,000
BRAKE DRUMS IN SERVICE

H&D

We have completed 2,50,000 Brake Drums in our Foundry from 1st August. Our New Foundry will go into Production of "Cogrey Cast" Automotive Grey Iron Casting for Heavy Duty Brake Drums, Clutch Housing, Fly-wheel Housing & Gear Box Housing.

Thanks to Copper Development Association of America, who has given us all the Technical Information on copper as Alloy in Automotive Grey Iron Casting with "Cogrey-Cast". We will be Manufacturing Brake Drums & other Components up to 22 Metric Tones Tensile strength or 35.5 kg. MM2. Excellent Wear Resistance, Thermal Stability, Strength and Machinability.

HUBS & DRUMS PRIVATE LTD.,

Pioneer in Automobile Ancillary Industries since 1952.

MANUFACTURERS OF :

"COGREYCAST" AUTOMOTIVE GREY IRON CASTING, HUBS, BRAKE DRUMS, FLYWHEEL, CLUTCH, GEAR BOX HOUSING, ENGINE PARTS, WATER PUMP AND CHASSIS & OTHER AUTOMOTIVE COMPONENTS.

Administrative Office :
Akashdeep, 3rd Floor,
French Bridge,
Bombay-7.
Phone : 351800

Registered Office :
Modi Chambers,
French Bridge,
Bombay-4.
Phone : 351265

Works :
Mangal Wadi, Varachha Road, SURAT.
Phone : 5337

ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்டுகள் சூப்பர் மார்கெட்

முக்கிய நகரங்களில் திறக்க பிரமாண்ட திட்டம்

மோட்டார் வாகனங்களை ஒரு ஷோக்குப் பொருளாக கருதிய காலம் மலையேறிவிட்டது நமது ஒவ்வொரு நடவடிக்கைக்கும், முன்னேற்றத்துக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் மோட்டார் வாகனங்கள் மிகமிக அத்தியாவசிய மானதாக இப்போது விளங்குகின்றன. கடந்த 20 ஆண்டுகளில் இந்திய ஆட்டோமொபைல் தொழில் அடைந்துள்ள முன்னேற்றம் மகத்தானது. இதைத் தழுவி ஏராளமான சார்பு (ஆன்ஸிலரி) தொழில்கள் நடந்துவருகின்றன. தரமான நல்ல பார்ட்டுகளை இவை தயாரித்து கொடுக்கின்றன. இவை மேலும் வளர்ந்து விஸ்தரிப்படையும்.

ஆனல் போலி தயாரிப்புகள் பல, மாா்க்கெட்டில் வந்து குவிவதால், நல்ல பார்ட்டுகள் விற்பனைக்கு பெரிய சாபக்கேடாக இருந்து வருகிறது. சீக்கிரத்தில் இவை உடைந்துபோவதால் பெரிய விபத்துகள் மூளுகின்றன. ஆகவே இந்தப் பிரச்னைக்கு அவசியம் ஒரு பரிகாரம் தேடியாகவேண்டும்.

பல ஆன்ஸிலரி தொழில்கள், இத்தீமையிலிருந்து விடுபட, ஒன்றும் செயய முடியாமல் தவிக்கின்றன. மோட்டாரிஸ்ட்டுகளுக்கு எது உண்மையான நல்ல (ஜினுவின்) சரக்கு, எது போலி சரக்கு என்பதை உணர்த்திச்சொல்வதன் மூலமே இத்தொல்லைக்கு ஒரு பைசல் தேட முடியும். நியாயமான விலைககு நல்ல சரக்குகளை கிடைக்கச் செய்யவேண்டும்.

நோக்கம்

இதை நோக்கமாகக்கொண்டுதான் ஆட்டோமொபைல் பார்ட்டுகளின் நிரந்தர கண்காட்சியுடன் கூடிய ஒரு **சூப்பர் மார்க்கெட்டை** நிறுவ தீர்மானிக்கப்பட்டது. இந்திய ஆட்டோமொபைல் இன்ஜினீர்கள் கழகத்தின் தென்மேற்கு மண்டல நிலையத்தின் ஆதரவின்கீழ் இந்த சூப்பர் மார்க்கெட் ஏற்படுத்தப்படுகிறது. இதில் முதலாவது எர்ணுகுளத்தில் (கேரளம்) ஆரம்பிக்கப்படுகிறது. பிறகு பம்பாய், சென்னை, டில்லி, கல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் போன்ற இடங்களிலும் விரைவில் ஆரம்பிக்கப்படும். இங்கெல்லாம் ஏற்கெனவே கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன.

இந்த சூப்பர்மார்க்கெட்டில் எல்லா ரக ஆட்டோமொமைல் பார்ட்டுகளும், கராஜ் கருவிகளும், ஒர்க்ஷாப் டூல்களும் வைக்கப்பட்டிருக்கும். இது பிரமாண்டமானதாக இருக்கும்.

ஒர்க்ஷாப்புகள்கூட

அங்கீகாரம்பெற்ற 5000 மோட்டார் கராஜுகளை திறக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. வேலையில்லாதிருக்கும் இன்ஜினீர்களுக்கும், டெக்னிஷியன்களுக்கும் இதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும். மொத்த மூலதனத்தில் 10 முதல் 20% சிறிய முதல் போடக்கூடிய தேர்ச்சிபெற்ற வேலையில்லாத இன்ஜினீர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, குறுகியகால பயிற்சி அளிக்கப்படுவார்கள். தவணைமுறையில் தளவாடங்களைக் கொடுத்து, பண உதவியும் தந்து சொந்த ஒர்க்ஷாப்புகளை ஆரம்பிக்க இவர்களுக்கு வசதி அளிக்கப்படும். இலவச நுணுக்க உதவியும் அளிக்கப்படும். முழு நம்பிககையுடன் இவர்களிடம் தங்களது வாகனங்களை மோட்டாரிஸ்ட்டுகள் நம்பி தர கடுமையான தரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். நீண்டதூரம் போவோருக்கு ஓய்வு விடுதிகளும் இருக்குமாதலால், இவை ''மோட்டல்கள்''போல விளங்கி டூரிஸ்ட் போக்குவரத்தை நம் நாட்டில் பெருக்க துணை செய்யும்.

நிர்வாகம்

இந்த பூரா திட்டமும் ஒரு பொது லிமிடெட் கம்பெனியால் நிர்வகிக்கப்படும் **''தி இண்டஸ்ரியல் எக்ஸிபிட்டர்ஸ் & டிரேடர்ஸ் லிமிடெட்''** என்று இக்கம்பெனிக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதன் ஆரம்ப மூலதனம் ரூ 25 லக்ஷம். சக்திவாய்ந்த செல்வாக்கு படைத்த டைரக்டர்களைக்கொண்டது. பங்குகளைத் தருவதில் மோட்டார் ஓனர்களுக்கு சலுகை காட்டப்படும். கிட்டத்தட்ட மோட்டாரிஸ்ட்டுகளின் ஒரு கூட்டுறவு முயற்சி போல இது இருக்கும். பங்கு ஒன்றுக்கு ரூ 100 வீதம் முதலீடு செய்யும் ஒவ்வொரு மோட்டாரிஸ்ட்டுக்கும், வருஷா வருஷம் இதற்கு இரட்டிப்பு மடங்காச, பார்ட்டுகள் வாங்குவதில் போனஸ், பராமரிப்பு செலவில் மிச்சம், நம்பிக்கையான சர்வீஸ் முதலிய நன்மைகள் கிடைக்கும்.

தரத்தை கண்டிப்பாக கடைபிடிக்க பல்வேறு தொழில் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நுணுக்க ஆலோசனை போர்டு இருக்கும். இதனுடன் கலந்துதான் எல்லா முடிவுகளும் எடுக்கப்படும். ★



Manufacturers :

JAI BHARAT AUTO INDUSTRIES

H. O. :-Choura Bazar, KARNAL
Phone : 205

B. O. :- 605, Hamilton Rd. DELHI-6
Phone 224500 , 222653

QUALITY & JABCO GO TOGETHER

JABCO

AUTO-PARTS & ACCESSORIES

Distributors for South India :

NATIONAL DISTRIBUTORS, 15, State Bank St, Madras-2. Phone : 84292

ஹெவி ட்யூடி வேலைகளுக்கெனவே உருவாக்கப்பட்டது

IT-7723-A-TAM

இந்தியா டயர் அண்ட ரப்பர் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

★

பம்பாய் வி. பி. ரோட்டில் குப்தா மோட்டார் மார்கெட்டில் இருக்கும் சாகர் & சன்ஸ் ஷோரூமின் முகப்புத் தோற்றம்.

★

சாகர் & சன்ஸ் தரும் உத்திரவாதம்

பம்பாயிலுள்ள சாகர் & சன்ஸ், பென்ஸ், பெர்கின்ஸ், அம்பாஸிடர், ஸ்டாண்டர்டு கார்களுக்கு, பிரீ-சேம்பர் வால்வ்கள், ராக்கர் ஆர்ம் ஷாப்ட்டுகள். கிங்பின், கிளட்சு பெடல் டியூப் ஷாப்ட்டுகள், பிஸ்டன் பின், வால்வ் ரிடெய்னர்கள், ரியர் ஆக்ஸில், ரியர் ஹப் டிரம்கள், ஹெரால்டு ஆக்ஸில்கள் முதலிய பார்ட்டுகளை நல்ல முறையில் தயாரித்துகொடுக்கின்றனர். இவர்களது தொழிற்சாலை பம்பாயில் பைகுலாவில் இருக்கிறது. பம்பாய்-4, வி. பி. ரோட்டிலுள்ள குப்தா மோட்டார் மார்கெட்டில் அண்மையில் ஒரு புதிய விற்பனை நிலையத்தை திறந்திருக்கின்றனர்.

இந்த ஸ்தாபனத்தின் பார்ட்னரான திரு சுபாஷ் சாகர், பிரபல சினிமா படத்தயாரிப்பாளரான திரு ராமானந்த சாகரின் புதல்வராவார். திரு. சுபாஷ் சாகர். தேர்ச்சி பெற்ற ஒரு ஆட்டோமொபைல் இன்ஜினீர். ஒரு அப்ரண்டிஸ் ஆக இருந்து கடும் உழைப்பால் புகழேணியில் உயர்ந்தவர். அவருக்கு இவரது இளைய சகோதரர் திரு சாந்தி சாகர், உறுதுணையாக கூட இருந்து உதவி புரிகிறார். சாகர் தொழிற்சாலை வேகமாக விஸ்தரிப்படைந்து வருகிறது.

உத்திரவாத திட்டம்

சாகர் & சன்ஸ் விற்கும் பார்ட்டுகளுக்கு ஒரு

★

நிற்பவர் (இடமிருந்து): திருவாளர்கள் ஓம்பிரகாஷ், சுபாஷ் ஆனந்த், ஸர்தார் ராஜிந்தர் சிங், சுபாஷ் சாகர். (உட்கார்ந்திருப்பவர் இடமிருந்து) : ஸர்தார் பர்மிந்தர் சிங், ஸர்தார் இந்தர்ஜித் சிங்.

★

★

இடமிருந்து : திருவாளர்கள் உபாத்யா, சுபாஷ் சாகர், ஸர்தார் சோகன் சிங், சத்யபூஷண் ஆனந்த்.

★

உத்திரவாத திட்டத்தை இவர்கள் புகுதித்யிருக்கின்றனர். அதாவது. ஏதாவது குறைபாடு இருந்தால் இலவசமாக பார்ட்டுகளை மாற்றித் தர உத்திரவாதம் அளிக்கின்றனர். ஆட்டோமொபைல் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா, ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் (API மூலமாக), காமினி மெட்டல்ஸ் & அலாய்ஸ், அப்பர் இந்தியா டிரேடிங் கம்பெனி ஆகிய ஸ்தாபனங்கள், சாகர் பார்ட்டுகளை ஒரிஜினல் எக்யுப்மெண்டாக உபயோகிக்கின்றனர்.

ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுப்பதற்காக திரு சுபாஷ் சாகர், மத்திய கிழக்கிலும், ஐரோப்பாவிலும் விஸ்தாரமாக சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு வந்திருக்கிறார். ★

அறிவிப்பு

எங்களின் விற்பனை அலுவலகத்தை குப்தா மோட்டார் மார்கெட், வல்லபாய் படேல் ரேடு, பம்பாய் 4-ல் துவக்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

Sagar சாகர் & சன்ஸ்

தயாரிப்பாளர்கள் :

டி.எம்.பி-க்கு—பிரிசேம்பர் வால்வு, ராக்கர் ஆர்ம் ஷாப்ட், பி. ஆக்சில்பேசர், ஹப் போல்ட்டு, கிளட்ச் பெடல் ஷாப்ட், வால்வ் ரீடெய்னர், U. J. கிராஸ் பிளேஞ் & டம்பர் ஹப் முதலியன.

பெர்கின்சிற்கு—ராக்கர் ஆர்ம் ஷாப்ட்டுகள.

அம்பாசடர்—ஹெரால்டிற்கு ராக்கர் ஷாப்ட், ஆக்சில் & டிரம்ஸ் முதலியன.

எமது தயாரிப்புகள் 6 மாதம் உத்திரவாதமுள்ளது.

ஒர்க்ஷாப் :
C/o இந்தியா போல்ட் & ரிவிட்
பி. லிட்., 74/74A ஸ்டேஷன் ரோடு
பைகுலா, பம்பாய்–11
போன் C/o 372406
தந்தி : LILASAGAR

ஆபீஸ் :
24C பாட்டியா பில்டிங்,
L.H. ரோடு,
மாஹிம், பம்பாய்-16
போன் : 445833
வீடு : 453793 & 454715

விற்பனை ஆபீஸ் :
குப்தா மோட்டார் மார்கெட்,
342,48 V.P. ரோடு,
பம்பாய்-4 BR
போன் : 355439

பிராந்திய வினியோகஸ்தர்கள் விண்ணப்பிக்கவும்.

நஷ்டமின்றி பஸ் சர்வீஸ் நடத்த திரு G. D. நாயுடு வைத்திருக்கும் திட்டம்

MVAIA-னின் 42-வது ஆண்டு விழாவில் அறிவிப்பு

சென்னை. மோட்டார் வெஹிகிள்ஸ் & அலைடு இண்டஸ்ட்ரீஸ் (MVAIA) சங்கத்தின் 42-வது ஆண்டு விழா 4-9-68 அன்று நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடைபெற்றது. விசேஷ முறையில் திரு G. D. நாயுடுவும் வந்திருந்தார். கூட்டத்திற்கு திரு ஆர். என். பிள்ளை (சவுத் இந்தியா ஆட்டோமோடிவ் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட். டைரக்டர்) தலைமை வகித்தார்.

காலஞ்சென்ற ராமன் & ராமன் நிர்வாக டைரக்டர திரு P. S. நாராயண அய்யரின் ஞாபகார்த்தமாக அனைவரும் ஒரு நிமிஷம் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

காரியதரிசி திரு எஸ். கோவிந்தசாமி, இக் கூட்டம் பற்றிய நிகழ்ச்சி நிரலைப்படித்தார்.

அனைவரையும் வரவேற்று திரு ஆர். என். பிள்ளை பேசுகையில், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் தற்போது நிலவும் சூழ்நிலைகளை அலசி விட்டு, தமிழகத்தில் புதிய சர்க்கார் நல்லபடியாக நடந்து வருவதைக் கண்டு ஆறுதலடைவதாகக் கூறினர். செடி எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க தினமும் வேரைப் பிடுங்கி பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது என்றும், வேர் ஊன்றுவதற்கு போதிய அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினர். மோட்டார் வாகனங்கள் மூலம் சர்க்காருக்கு கிடைத்து வரும் ஏராளமான வரி வருமானம் பற்றி திரு ஆர். என். பிள்ளை குறிப்பிடுகையில், இதற்கு தகுந்த விகிதாசாரத்தில் ரஸ்தா போக்குவரத்தின் வளர்ச்சிக்கு முக்யத்வம் அளிக்கப் படாதிருப்பதை கண்டித்தார்.

டீலர்களுக்கு கொடுக்க கொண்டு வரும் புதிய வண்டிகளுக்கு (சாஸிகளுக்கு) ஆந்திர சர்க்கார் வரி விதிப்பது பற்றி குறிப்பிட்டு, இது பற்றி சர்க்காருக்கு ஏற்கெனவே தெரிவித்திருப்பதாயும், இது சம்பந்தமாக தானே நேரில் அதிகாரிகளை சந்தித்துப் பேசியிருப்பதாயும், சீக்கிரத்தில் இதை கவனிப்பதாக வாக்களிக்கப்பட்டிருப்பதாயும் திரு பிள்ளை கூறினர்.

எரிபொருள்மீது ஒரு முனை வரி போதுமே

எரி பொருள்மீது ஒரு முனைவரி ஒன்றை மட்டும் விதித்தாலேபோதும். மத்திய-ராஜ்ய சர்க்கார்களுக்கு ஏராளமான வருமானத்தை இது ஒன்றே அள்ளித்தரும். ஏனென்றல் இந்த வரியைக்கொடுக்காமல் யாரும் தப்பமுடியாது. தவுரவும் நாடு முழுவதும் இந்த வரி ஒன்று போலானதாக இருக்கும் என்று திரு பிள்ளை எடுத்துக் காட்டினர். தேசியமய திட்டம் வேகமாக பரவி வருவது பற்றி அவர் குறிப்பிட்டு, ரஸ்தா போக்குவரத்துக்கும், ஆட்டோமொபைல் தொழிலுக்கும் நியாயம் வழங்கக்கூடிய ஏதாவது உருப்படியானதைச் செய்யவேண்டும் என்றர். கடந்த ஆண்டில் பல்வேறு பிரச்னைகள் சம்பந்தமாக இந்த சங்கம் மேற்கொண்ட முயற்சிகளையும் திரு பிள்ளை விவரித்தார்.

ஆண்டறிக்கையும், வரவு-செலவு கணக்கும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து 1968-69க்கு புதிய நிர்வாகிகள் தேர்தல் நடந்தது.

புது நிர்வாகிகள்

அடியிற்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

திரு ஆர். என். பிள்ளை, சங்கத்தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு T. K. சேஷாத்திரி (சுந்தரம் மோட்டார்ஸ்) துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் : திருவாளர்கள் T. S. சந்தானம் (மதருஸ் ஆட்டோ சர்வீஸ்), கே. வி. ஸ்ரீனிவாசன் (ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ்), கே. ஹரிஹரன் (ஜார்ஜ் ஒக்ஸ்), ஜி. எஸ். கிருஷ்ண (டன்லப்), கே. ஏ. வி. ஈஸ்வரன் (ஸ்ரீ ராமவிலாஸ சர்வீஸ்), ஜே. வர்கீஸ் (பர்மா ஷெல்), எம். சூர்யநாராயண (பெஜவாடா

மோட்டார் ஸ்டோர்ஸ்), எல். ஜி. பாலகிருஷ்ணன் (எல். ஜி பாலகிருஷ்ணன் & பிரதர்ஸ்), ஹபீப் மரைக்காயர் (மரைக்காயர் மோட்டார்ஸ்), என். காசிராமன் (ராமன் & ராமன்)

திரு G. D. நாயுடு யோசனை

திரு G. D. நாயுடு பேசுகையில் பஸ்களை சர்க்கார்—தனியார் இருதரப்பினருக்கும் நஷ்டமின்றி நடத்துவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தும்படி யோசனை கூறினார்.

இதற்கு திரு T. S. சந்தானம் பதிலளிக்கையில், சென்னையில் நடந்த பஸ் உரிமையாளர்களின் இரு மகாநாடுகள் பற்றியும், இதைத் தழுவி ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி பற்றியும் விளக்கினார்.

திரு G. D. நாயுடு மறுபடி எழுந்து தனது யோசனையை வற்புறுத்திப் பேசுகையில் யாருக்கும் நஷ்டமின்றி தேசியமயப்படுத்த 1939-லேயே தான் ஒரு திட்டம் கொடுத்ததாயு பிறகு மீண்டும் 1946-ல் இத்திட்டத்தைக கொடுத்ததாயும், அண்மையில் முதலமைச்சர் திரு அண்ணதுரையைக்கூட, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியதாயும், ஒன்றும் நடைபெறவில்லை என்றும், திரு சந்தானம் குறிப்பிட்ட ஆலோசனைக் கமிட்டியின் கதியும் இதேபோல தான் ஆகும் என்றும் கூறினார். "எனது திட்டத்தை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன். அதைப்பார்த்து அவசியமானல் வேண்டிய மாறுதல்களைச் செய்து அரசுக்கு அனுப்பி வையுங்கள்" என்று திரு G. D. நாயடு கூறினார்.

திரு T. K. சேஷாத்திரி வந்தனோபசாரம் கூறினார்.

பிரிட்டனில் போக்குவரத்து முன்னேற்றம் பற்றியும், ரப்பர் ரஸ்தா பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்க தகவல் நிலயத்தாரின் சினிமா படங்களும் திரையிடப்பட்டன. ★

உங்களுக்குப் பத்திரமான
பாது காப்பு
தரும் சாதனங்கள்
பிரேக்குகள் மற்றும்
பிரேக் லைனிங்குகள்
✻ முற்றிலும் நம்பகமானவை
க்ளட்சுகள்
✻ சுலபமாக இயங்கக்கூடியவை
பத்திரமான பாதுகாப்பு
சாதனங்களுக்கு API
ஆட்டோமோபைல் ப்ராடக்ட்ஸ்
ஆப் இந்தியா லிட்.
API
API-114-TM

ஸ்டெப்னி இல்லையேல்
ஸ்பேர் டயர்

★

ஏஷியாடிக் டயர்ஸ் அளிக்கும் விசேஷ சேவை

தவிக்கும் இடத்திற்கே
ஓடி வந்து உதவி

★

புதிய டயர் சர்வீஸ் நிலையம் திறப்பு

வெளியூர்காரார் தங்க
ஓய்வு விடுதி

★

8 மணி நேரத்தில் டயரை ரிடிரெட் செய்து பெறலாம்

நடுரோட்டில் டயர் கெட்டுவிட்டதா? ஸ்டெப்பினி இல்லையா? உங்களுக்கு ஒரு ஸ்பேர் டயர் வேண்டுமா? இருந்த இடத்திலிருந்து **ஏஷியாடிக் டயர்ஸுக்கு** டெலிபோன் செய்யுங்கள். ஸ்பேர் டயரை எடுத்துக்கொண்டு அவர்கள் ஓடோடிவருவார்கள். டயர் மாற்றி கொடுப்பார்கள். கெட்டுப்போன உங்களது டயரை 8 மணி நேரத்திற்குள் ரிடிரெட் செய்து தந்து விடுவார்கள்.

இந்த விசேஷ சேவைகளை அளிக்க புதிய டயர் சர்வீஸ் நிலையமொன்றை ஏஷியாடிக் டயர்ஸ் ஆரம்பித்திருக்கிறது.

டயர்களை ரிடிரெட் செய்து தரும் பிரபல ஸ்தாபனமான ஏஷியாடிக் டயர்ஸ், சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில் ஆனந்த் தியேட்டருக்கு அருகாமையில் (மக்கி தோட்டத்தில்) 6B/147 இலக்கமிட்ட கட்டிடத்தில் இயங்கி வருகிறது. வாடிக்கைக்காரர்களுக்கு விசேஷ சேவை அளிப்பதற்காக விஸ்தாரமாக கட்டியுள்ள ஒரு புதிய கட்டிடத்தில் இந்த டயர் சர்வீஸ் நிலையத்தை ஆரம்பித்திருக்கின்றனர். துரிதமாக டயர்களை ரிடிரெட் செய்ய லோடி பாண்ட்ரிக்ஸ் இயந்திரத்தை விசேஷமாக பொருத்தியிருக்கின்றனர். வெளியூரிலிருந்து வரும் வாடிக்கைக்



★

ஏஷியாடிக் டயர்ஸின் புதிய டயர் சர்வீஸ் நிலையத்தை மான்ஸ்பீல்டு டயர் கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட் திரு **R. P.** பெயிண்டர், திறந்து வைக்கும் காட்சி. இடது கோடியில் நிற்பவர் திரு **P. M.** இத்தூப்— ஏஷியாடிக் டயர்ஸின் உரிமையாளர்.

★

டயர் அழகன்

திரு மாமன் மாப்பிள்ளையின் சிருஷ்டி

உடற்கட்டு நிறைந்த ஒரு ஆனழகன், இரு கரங்களாலும் ஒரு டயரை தூக்கிப் பிடித்துக்கொண்டு நிற்கும் (மஸில்மேன்) விளம்பரப் படத்தை யாரும் பார்க்காமல் இருந்திருக்க மாட்டார்கள். சென்னை திருவொற்றியூரிலிருக்கும் மதரூஸ் ரப்பர் பாக்டரி தயாரிக்கும் மான்ஸ்பில்டு டயர்களுக்கு இந்த ''மஸில்மேன்'' விளம்பரத்தை யார் கண்டுபிடித்தது தெரியுமா?

மதரூஸ் ரப்பர் பாக்டரியின் நிர்வாக டைரக்டர் திரு கே.எம். மாமன் மாப்பிள்ளை அவர்கள்தான்.

அமெரிக்க மான்ஸ்பீல்டு டயர் & ரப்பர் கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட் திரு R. P. பெயிண்டர், ஏஷியாடிக் டயர்ஸின் புதிய சர்வீஸ் நிலைய திறப்பு விழாவில், இத்தகவலை வெளியிட்டு, திரு மாப்பிள்ளையை வெகுவாகப் பாராட்டினர்.

காரர்கள் தங்குவதற்கு எல்லா சௌகர்யங்களுடன் கூடிய ஒரு ஓய்வு விடுதியையும் இக்கட்டிடத்திலேயே அமைத்திருக்கின்றனர். தற்காலிக உபயோகத்திற்கு சர்வீஸ் டயர்களைத் தருகின்றனர். நடுத்தெருவில் தவிக்கும் வாடிக்கைக்காரர்களுக்கு அந்த இடத்திலேயே சர்விஸ் வசதியளிக்கின்றனர். எல்லா ரக புதிய டயர்களையும் விற்கின்றனர்.

புதிய சர்வீஸ் நிலைய திறப்பு விழா 2-9-68 அன்று நடைபெற்றது. அமெரிக்காவிலிருந்து விசேஷமாக வந்திருந்த மான்ஸ்பீல்டு டயர் & ரப்பர் கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட் திரு R. P. பெயிண்டர், இதை திறந்து வைத்தார். பிரபல தொழிலதிபர்களும், திரளாக வந்திருந்தனர்.

திரு இத்தூப் வரவேற்புரை

ஏஷியாடிக் டயர்ஸின் உரிமையாளர் P. M. இத்தூப். அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் லோடி இயந்திரம் மூலம் ரிடிரெட் செய்யும் புதிய முறையை விவரித்தார். இதில் ரிடிரெட் ஆன டயர்களை மதரூஸ் ரப்பர் பாக்டரியின் நிர்வாக டைரக்டர் திரு மாமன பிள்ளையும், அவரது சகோதரரும் அவர்களது சொந்த கார்களிலேயே போட்டுப் பார்த்து பாராட்டியிருப்பதாகக் கூறினர். இன்றுள்ள வேறு பல ரிடிரெட்டர்கள் அனைவருமே ஏஷியாடிக் டயர்ஸிலிருந்து உதித்தவர்கள்தான் என்று திரு இத்தூப் கூறினர்.

திரு விசுவநாதன் பாராட்டு

மதரூஸ் ரப்பர் பாக்டரியின் சேல்ஸ் மானேஜர் திரு வி. ஸி. விசுவநாதன் பேசுகையில், திரு இத்தூப்பின் திறமைகளையும், தீர்க்க திருஷ்டியையும் வெகுவாகப் பாராட்டினர். அடுத்த 10 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரமானது புரட்சிகரமாக மாறும். இந்த புதிய டயர் சர்விஸ் நிலையமானது ஒரு டயர் ஆஸ்பத்திரி போல விளங்குகிறது. வாடிக்கைக்காரர்களுக்கு இத்தகைய விசேஷ வசதிகளை அளிக்க முன் வந்திருக்கும் ஏஷியாடிக் டயர்ஸைப் பாராட்டுகிறேன்" என்று திரு விசுவநாதன் கூறினர்.

திரு மாமன் மாப்பிள்ளை புகழுரை

அடுத்து MRF-ன் நிர்வாக டைரக்டர் திரு கே. எம். மாமன் மாப்பிள்ளை பேசுகையில், இந்தியாவி

mm FOAM
mattresses and pillows
of exclusive quality
M. M. RUBBER COMPANY PRIVATE LIMITED
Showroom: 1st Floor Dhun Bldgs. 876/1 Mount Rd. Madras 2. Phone: 83559
ajanta MM/65

'MM FOAM' *is also available at :*
INDIA SILK HOUSE, Mount Road, SHOBHA DEPARTMENTAL STORES, Rattan Bazar, POPPAT JAMAL & SONS, Mount Road, AMSON & CO., General Patters Road, RAM & RAO CO., Armenian Street, P. V. AGENCIES, N. S. C. Bose Road, NALLI CHINNA SWAMY CHETTY, Panagal Park, KAMSY, Mount Road.

லேயே, இந்த டயர் சர்வீஸ் நிலையம்தான் முதலாவது என்று புகழ்ந்தார். ஏஷியாடிக் டயர்ஸ் அளிக்கும் விசேஷ வசதிகள் மூலம் வாடிக்கைக் காரர்களின் நன்மதிப்பை நிறைய சம்பாதித்துக் கொள்வார்கள் என்று பாராட்டினார். பிரிட்டன், ஜெர்மனி போன்ற இடங்களில் எல்லாம் இந்த சர்வீஸ் இருப்பதை நான் பார்த்தேன். டயர் சர்வீஸ் வசதி இல்லாமல், டயர் விற்கும் டீலர்கள் யாரையும் அங்கெல்லாம் பார்க்கவே முடியாது. டயர் பராமரிப்புக்கு அவ்வளவு முக்கியத்வம் அளிக்கின்றனர். பணக்கார நாடுகளிலேயே இப்படி என்றால், ஏழை நாடான நம்நாட்டில் இத்தகைய சர்வீஸ் எவ்வளவு அவசியம் என்பதைக் கூறத் தேவையில்லை. **ஒரு டயரின் எடையில் ஒரு அவுன்ஸ் அளவு கூட அதிகப்படி எடை ஏற்றினால்** நிலை தடுமாறும்; 60 மைல் வேக ஓட்டத்தில் ஒரு பெரிய செம்மட்டியால் அடிப்பதுபோன்ற சேதம் உண்டாகும் என்று திரு மாமன் மாப்பிள்ளை சுட்டிக் காட்டினார். "நீ ஒரு தலைவனாக இருக்க விரும்பினால், முதலில் நீ ஒரு சேவகனாக இருக்க வேண்டும்" என்று யேசுநாதர் கூறியிருப்பது போல, கிருஸ்துவரான திரு இத்தூப்பும் ஒரு சேவகனாக இந்த சேவையைச் செய்ய முன்வந்திருக்கிறார் என்று திரு மாமன் மாப்பிள்ளை மெச்சினார்.

தயாரிப்பில் கோளாறு ஏதாவது இருந்தால் புது டயரை மாற்றிக்கொடுக்க வேண்டும் என்பது சர்வதேச சட்டமாக பழக்கத்தில் இருப்பதை திரு மாமன் மாப்பிள்ளை எடுத்துக்காட்டி, டயர்களைத் தயாரிப்பதில் எவ்வளவு ஜாக்கிரதை அனுஷ்டிக்கப்படுகிறது என்பதை விவரித்தார்.

திரு பெயிண்டர் வாழ்த்து

திரு பெயிண்டர் பேசுகையில், புதுபுது யோசனைகளை வளர்க்கவேண்டும் என்றும், இந்த புது யோசனைகள் யாவும், மக்களுக்கு சேவை செய்ய பயன்படக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் கூறினார். ஏஷியாடிக் டயர்ஸை மனமார வாழ்த்தினார்.

பேபி அவந்தி, ரவியின் (ஆந்திர கேசரி பிரகாசத்தின் பேரக்குழந்தைகள்) நாட்டியமும் நடைபெற்றது. திருமதி ராமசாமி இக்குழந்தைகளை அறிமுகப்படுத்தி வைத்தார். ★

ஏஷியாடிக் டயர்ஸ்

வாடிக்கைகாரர்களுக்கு அளிக்கும்
புதிய சர்வீஸ்கள்

திரு R. P. பெயிண்டர்
அமெரிக்காவின் மான்ஸ்பீல்டு டயர்சின்
வைஸ் பிரசிடெண்ட் அவர்களால்
செப்டம்பர் 2, 1968 அன்று மாலை 6 மணிக்கு
துவக்கப்பட்டுள்ளது

தலைமை தாங்கியவர்
திரு K. M. மாமன் மாப்பிள்ளை
(மதராஸ் ரப்பர் பாக்டரி)

எமது வாடிக்கையாளர் பெறும் சர்வீஸ்கள்: ★ வெளியூர் வாடிக்கைகாரர்களுக்கு ஓய்வு விடுதி ★ தற்காலிக உபயோகத்திற்கென சர்வீஸ் டயர்கள் ★ நடுரோடில் தவிக்கும் வாடிக்கைக்காரர்களுக்கு அந்த இடத்திலேயே சர்வீஸ் ★ எல்லா ரக புதிய டயர் விற்பனை

புகழ்பெற்ற லோடி பாண்டிரிக்ஸ் பிராஸஸ் மூலம் 8 மணி நேரத்தில்
டயர்களை ரீடிரெட் செய்கிறோம்.

ஆபீஸ்: 71, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 போன்: 85261
பாக்டரி: மக்கேஸ் கார்டன், சென்னை-6 போன்: 83488

E.M.C. OIL SEAL
TRADE MARK
REGD.
WHEREVER SHAFTS MOVE

EMC OIL SEALS

இ.எம்.ஸி
ஆயில் சீல்கள்

எல்லா வண்டிகளுக்கும்
ஏற்ப தயாரிக்கப்படுகிறது.
தோந்தரவற்ற நீண்ட சேவை

ஷாமா
பிஸ்டன்
ரிங்குகள்





ஷாமா பிஸ்டன்கள் Karl Schmidt GMBH.
Neckarsulm Wurtt மேற்கு ஜெர்மனி
அவர்களின் ஒத்துழைப்புடனும், ஷாமா
ரிங்குகள் S.I.M.SA. சுவிட்சர்லாந்து
அவர்களின் ஒத்துழைப்புடனும்
இப்பொழுது இந்தியாவில் மிக நவீன
தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது.
மேன்மேலும் வாகன உரிமையாளர்கள்
ஷாமா பிஸ்டன்/ரிங்குகளையே
விரும்பி உபயோகிக்கிறார்கள்.

தென்னிந்திய வினியோகஸ்தர்கள்:

ஸிங்சன் & கோ (இந்தியா)
1/2. ஸ்டேட் பாங்கு தெரு சென்னை-2

போன்:
85011
87419

எங்களிடம் எல்லா டிரக், பஸ்களுக்குத் தேவையான சகல பார்ட்டுகளும்,
பாட்டரிகளும் எப்பொழுதும் சகாயமான விலையில் கிடைக்கும்.

★

பைமெட்டல் பேரிங்ஸின் மகத்தான சாதனை

★



உருக்குத் தகடுமீது பைமெட்டல் (செப்பு—ஈய கலவை) பவுடரை பதியவைக்கும் இயந்திரமும், பதனிடும் நவீன மின்சார உலேயும். இயந்திரத்திற்குள் உருக்கு தகடு நுழைந்துபோவதை படத்தின் இடது கோடியில் காணலாம்.

நவீன ஸ்டிரிப் மில் ஆரம்பம் பேரிங்குகள் தயாரிப்பில் சுயநிறைவு

தின்வால் பேரிங்குகளேயும், புஷ்களேயும், திரஸ்ட் வாஷர்களேயும் தயாரிக்கும் சென்னே, செம்பியத்திலுள்ள **பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்,** சிகடபு உலோகத் தகடுகளேத் தயாரிப்பதற்கு சொந்தத்தில் ஒரு நவீன ஸ்டிரிப் மில்லே அண்மையில் நிர்மாணித்திருக்கின்றனர். இது உலகிலேயே ஐந்தாவதாகும். சிம்ஸன் க்ரூப் கம்பெனிகளின் ஒரு துணே நிறுவனமான இந்த பைமெட்டல் பேரிங்ஸின் தொழிற்சாலே செம்பியத்தில் ஹுசூர் தோட்டத்தில் இருக்கிறது. ஸ்டிரிப் மில் இருக்கும் இடத்தின் நிலப் பரப்பு மட்டும் 27,000 சதுர அடி.

அமெரிக்காவைச் சேர்ந்த கிளீவ்லாந்தி லுள்ள கிளீவைட் கார்ப்பரேஷனுடனும், ஆஸ்தி ரேலியாவைச் சேர்ந்த ரெப்கோ லிமிடெட்டுடனும் கூட்டு சேர்ந்து ஆரம்பித்து நடைபெறும் ஸ்தாபனமாகும் இது. ஆட்டோமொபைல் ஆன்ஸிலரி தொழில்களுக்கு தேவையான மூல பொருளே இந்த ஸ்டிரிப் மில் சப்ளே செய்வதால், இது ஒரு முக்கியத்வம் வாய்ந்த சாதனேயாகும்.

இதன் மூலம் இனி பைமெட்டல் தகடுகளே இறக்குமதி செய்யவேண்டியதில்லே. இரும்பு கலப்படமற்ற உலோக பவுடரை மட்டும்தான் இறக்குமதி செய்யவேண்டியிருக்கும். இனி எந்த ரக இன்ஜினுக்கு வேண்டுமானுலும் இவர்களால் பேரிங்குகளேத் தயாரித்துத் தரமுடியும். ஏற்றுமதி செய்யவும் நிறைய வாய்ப்பு ஏற்படும். சிக்கனத்தைக் கடைபிடித்து, உற்பத்தி செலவைக் குறைக்க முடியுமாதலால், இதற்கேற்ப விலேயை யும் குறைக்க முடியும்.

எப்படி இயங்குகிறது ?

பைமெட்டல் தகடுகள் எப்படி தயாரிக்கப் படுகின்றன என்பதைப் பார்ப்போம். சுருள் சுருளாக இருக்கும் உருக்கு தகடுமீது செப்பும்—ஈயமும் கலந்த உலோகப் பொடி தூவப்படுகிறது. வேண்டிய கனம், ரசாயண சேர்க்கை விகிதாசாரத்துக்கு இந்த ப்வுடர் கலந்து வைத்துக்கொள்ளப்படுகிறது. இதற்குத் தேவையான உருக்கு தகடு நம் நாட்டிலேயே கிடைக்கிறது. உருக்குத் தகடுமீது பைமெட்டல் உலோகப் பவுடரை பதியவைக்கும் பூராவேலே யும் விஞ்ஞானமுறையில் நவீன இயந்திரங்கள் மூலம் வெகு ஜாக்கிரதையாக பதனிடப்பட்டு பக்குவமாக நடைபெறுகிறது. உயர்ந்த விதத்தில் தரத்தைக் கடைபிடிக்க மிகச் சிறந்த ஆராய்ச்சி சாலேயும் இருக்கிறது. இங்கு கடுமையான சோதனேகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வேலேகள் பூராவும் தானுக (ஆட்டோ மாடிக்) நடைபெறுகின்றன. ஆண்டொன்றுக்கு

பைமெடல் பேரிங்ஸ் லிட். இல் அமைக்கப்பட்டுள்ள ஸ்டிரிப் மில் மேலும் சின்டரிங் வசதி மூலம் நீங்கள் அடையும் பயன் என்ன?



உங்களுக்குத்
தேவையான
க்ளிவைட் CLEVITE
தின்வால் பேரிங்குகள்,
புஷ்ஷிங்குகள்,
திரஸ்ட் வாஷர்கள்
மிகத்துரிதமாகக்
கிடைக்கின்றன.

உன்னதமான எண்ணங்கள் மட்டும் பயன்படா. அவைகளை நடைமுறையிலும் கொண்டு வர வேண்டும். இவையிரண்டிலும் எங்களை மிஞ்ச யாருமில்லை.

ஓர் உதாரணம்: உலகிலேயே மிக நவீனமான ஸ்டிரிப் மில்:
சமீபத்தில் புகுத்திய சின்டரிங் வசதி. விளைவு! உங்களுக்குத் தேவையான க்ளிவைட் CLEVITE பொருள்கள் மிகச் சீக்கிரத்தில் கிடைககின்றன.

பதினைந்து மில்லியன்களுக்கு மேலான க்ளிவைட் CLEVITE பொருள்கள் ஒரிஜனல் எ.:.க்விப்மெண்டாகவும் மற்றும் மாற்றுப் பொருள்களாகவும் உபயோகத்தில் இருக்கின்றன. கார்கள், விவசாய டிராக்டர்கள். இண்டஸ்ட்ரியல் என்ஜின்கள், கமர்ஷியல் வண்டிகள் முதலியவைகளில் உபயோகப் படுத்தப்படுகின்றன.

CLEVITE க்ளிவைட் தரத்தில் தலைவன். மேலை நாடுகளில்
BIMITE பைமைட் என்ற பெயரில் வெற்றிக்கொடி நாட்டுகிறது.

BIMETAL BEARINGS LIMITED
In technical collaboration with Clevite Corporation, Cleveland, Ohio, U.S.A.
SEMBIAM, MADSAS-11

BB-143,

இது போல் 15 லக்ஷம் அடி தகட்டை இந்த மில் தயாரிக்கமுடியும். 18 மாதங்களுக்குள் இந்த மில் துரிதமாக கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக பைமெட்டல் பேரிங்ஸ் செல விட்டுள்ள அதிகப்படி மூலதனம் கிட்டத்தட்ட ரூ 60 லக்ஷமாகும். இதில் அந்நியச் செலாவணி தொகை 35 சதவிகிதம்தான். இதிலும் மூன்றில் ஒரு பகுதி, முன்னதாகவே பேரிங்குகளை ஏற்றுமதி செய்ததின் மூலம் சம்பாதிக்கப்பட்டு விட்டது.

அடுத்த கட்டமாக பிளாஞ்சுகளும், வெள்ளை உலோக தகடுகளையும் தயாரிப்பதற்கு தொழிற் சாலையை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

மெச்சத்தக்க வளர்ச்சி

பைமெட்டல் பேரிங்ஸ் தொழிற்சாலையில் பேரிங்குகள், புஷ்களின் உற்பத்தி 1963–ல் ஆரம்பமாகியது. முதல் சில ஆண்டுகளில் உற்பத்தி 17 லக்ஷத்திலிருந்து 42 லக்ஷமாக அதிக ரித்திருக்கிறது. பிரபல ஆட்டோமொபைல் இன்ஜின்களின் தயாரிப்பாளர்களுக்கும், மற்ற வகை இண்டஸ்ட்ரியல் இன்ஜின்களை தயாரிப்ப வர்களுக்கும் இந்த பேரிங்குகளும், புஷ்களும் ஒரிஜினல் எக்யுப்மெண்டாக சப்ளை செய்யப் படுகின்றன. விசேஷமாக அசோக் லேலண்டு, டெல்க்கோ தயாரிக்கும் ஹெவிடூடி இன்ஜின் களுக்கு பைமெட்டல் பேரிங்குகளையே பிரத்யேக மாக பயன்படுத்துகின்றனர்.

இந்த ஐந்தாண்டு காலத்தில் பைமெட்டல் பேரிங்ஸ் பல அரிய சாதனைகளைப் புரிந்திருக் கிறது. பேரிங்குகள், புஷ்கள், திரஸ்ட் வாஷர் கள் 150 லக்ஷத்திற்கும் அதிகமாகத் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. தற்சமயம் உற்பத்தியாவது ஆண்டொன்றுக்கு 50 லக்ஷத்திற்கும் அதிகம். 400க்கும் அதிகமான விதவித ரகங்களில் இவை தயாரிக்கப்படுகின்றன. 100க்கு அதிகமான பல்வேறு ரக இன்ஜின்களுக்கு இவை பயன் படுத்தப்படுகின்றன.

ஊழியர் சம்பளம்

அமால்கமேஷன்ஸ் க்ரூப் நிலைநாட்டியுள்ள பரம்பரைப் புகழைத்தழுவி, இக்கம்பெனியின் ஊழியர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்படு கின்றன. 1967–68–ல் சராசரி இதில் 300 ஊழியர்கள் இருந்தனர். ஒரு ஊழியரின் மாதச் சம்பளம் ரூ 350 ஆக இருந்தது. இப்பகுதியில் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சம்பளங்களில் மிக உயர்ந்த தொகையாகும் இது.

ரூபாய் மதிப்பு குறைப்பு போன்றவைகளால் அதிகளவு பாதகம் ஏற்பட்டு இருந்தும் கூட விலைகளை இக் கம்பெனி உயர்த்தாமல் ஸ்திர மாக வைத்திருந்தது.

ஏற்றுமதி

கம்பெனி ஆரம்பித்து நான்காவது ஆண்டிலேயே இதன் தயாரிப்புகள் ஏற்றுமதி ஆயின. கடந்த ஆண்டில் கிடைத்த ஏற்றுமதி ஆர்டரின் மதிப்பு மட்டும் ரூ 12 லக்ஷம். உள்



வேண்டிய அளவுக்கு பேரிங்குகளை அளந்து வெட்டும் நாட்சிங் பிரஸ். இதுபோல் தானுக இயங்கும் பல நவீன இயந்திரங்கள் பைமெட்டல் பேரிங்ஸில் உள்ளன.

நாட்டில் **கிளிவைட்** என்ற பெயரிலும், வெளி நாடுகளில் **பைமைட்** என்ற பெயரிலும் இதன் தயாரிப்புகள் விற்கப்படுகின்றன. இலங்கை, எகிப்து, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு குடியரசு, யுகோஸ்லாவியா, ஐரோப்பாவிலுள்ள வேறு சில நாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

திரு கணபதி விளக்கம்

பைமெட்டல் பேரிங்ஸ் இதுவரை அடைந் துள்ள முன்னேற்றத்தை இக் கம்பெனியின் டைரக்டரும், ஜெனரல் மானேஜருமான திரு கே. எஸ். கணபதி, 5–9–68 அன்று பத்திரிகை நிருபர்களுக்கு விளக்கினர். அமெரிக்காவில் கூட இந்த மாதரி கட்டிட அமைப்பு, ஸ்டிரிப் மில்லுக்கு இருக்கவில்லை என்று அமெரிக்க கூட்டாளிகளே வந்து பார்த்து மெச்சியிருப்பதாக திரு கணபதி கூறினர். பைமெட்டல் பேரிங்ஸின் சாம்பிளை வாங்கிப் பார்த்த முன்றே மாதத்திற்குள் இதை டெல்க்கோ ஏற்றுக்கொண்டது என்று பெருமிதத்துடன் திரு கணபதி தெரிவித்தார். ★

பேசும் டயர்!

தேய்வை எச்சரிக்கும்

டயர்கள் அளவுக்குமீறி தேய்ந்துவிட்டால், மாற்றிப்போட வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை இனி டயரே எச்சரிக்கை செய்து சொல்லும்! இதற்கு புது டயர்களை டன்லப் தயாரித்து வருகிறது.

கார்களில் டயர்கள் தேய்ந்திருப்பதை சாதாரணமாக நாம் பார்க்கிறோம். ஆனால் எந்த அளவுக்கு தேய்ந்திருக்கிறது; எப்போது மாற்ற வேண்டும் என்பதை சுலபமாக எல்லோராலும் கூற முடியாது. மாற்றிப் போட வேண்டியதை உணராமல், அப்படியே கார்களை ஓட்டிச்செல்வதால் பெரிய விபத்துகள் நேரிட்டு விடுகின்றன.

இந்த ஆபத்தை தடுப்பதற்குத் தான், டயர்கள் எந்த அளவுக்கு தேயலாமோ, அந்த அளவு தேய்ந்த பிறகு—இனி அதை அப்படியே உபயோகிப்பது ஆபத்து என்ற நிலை வரும்போது, இதை காட்டும் வகையில் புதுவகை டயர்களை டன்லப் தயாரிக்கிறார்கள்.

ஆபத்து நிலை வரும்போது டயர்களின் குறுக்கே ஆறு இடங்களில் அரை அங்குல பட்டை ஒன்றை எச்சரிக்கை கோடாக அமைத்து டயர்கள் தயாராகின்றன. சுமார் ஒரு மில்லிமீட்டர் கனம்வரை தேய்ந்துவிட்டால், அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள எச்சரிக்கைப் பட்டைகள், ஓட்டுபவருக்கு **"என்னை மாற்றி விடு"** என்று எச்சரிக்கை செய்து விடும்!

தொடர்ந்த, தலைசிறந்த சேவைக்கு

S.E.V

கேர்பாக்

உறுப்புகளை உபயோகியுங்கள்



எந்த வண்டியிலும் எரிபொருள் (Fuel) பம்பை அவ்வப்போது ஒழுங்காகக் கவனித்துக் கொண்டால் தொல்லையற்ற சவாரி செய்யலாம்.

எதாவது பகுதி தேய்ந்து விட்டால் எரிபொருள் (Fuel) பம்ப்சீராக இயங்காது. வண்டிகளின் நல்ல ஓட்டம் நீடிக்க தேய்ந்த பகுதிகளை புதுப்பிக்கவும்-அதற்கெனவே அசல் S.E.V உபரிகள் 'கேர்பாக்' (CAREPAC) செட்டாகக் கிடைக்கின்றன. S.E.V கேர்பாக் உள்ளே இருப்பவை அசல் S.E.V பகுதிகள்-கடுமையான தரக்கட்டுப்பாட்டுடன், நுணுக்கமான வேலைப்பாட்டுச் சிறப்புடன் தயாரானவை. S.E.V எரிபொருள் பம்ப் ஸ்டாண்டர்ட் ஹெரால்ட், பியட், அம்பாஸடர் கார்கள், ஸ்டாண்டர்ட் 20 டிரக்குகள் ஜீப்புகள் இவற்றில் மூல உருப்பாகவே பொருத்தப்பட்டு வருகின்றன.

'கேர்பாக்' S.E.V சேவையின் ஓர் அம்சம்

கார்புரேட்டர்ஸ் லிமிடெட் 29, மவுண்ட் ரோட், சென்னை-2.

விநியோகஸ்தர்கள்:

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிட்.,

29, மவுண்ட் ரோடு, சென்னை-2.

கம்பெனி செய்திகள்

டன்லப்புக்கு வெள்ளி கேடயம்

1966-க்கு டன்லப் இந்தியா லிமிடெட் சமர்பித்த ஆண்டறிக்கையையும், கணக்குகளையும், புதுடில்லியிலுள்ள இந்திய சார்டர்டு அக்கவுண்டெண்ட்ஸ் கழகம் 1966-67-ன் மிகச் சிறந்த தயாரிப்பாக தீர்பளித்திருக்கிறது. செப்டம்பர் மாதம் புது டில்லியில் நடைபெறவிருக்கும் ஒரு விசேஷ விழாவில் இக் கழகத்தின் வெள்ளி கேடயம் டன்லப்புக்கு பரிசளிக்கப்படும். இப்பரிசை டன்லப் வெற்றிப் பெறுவது இது இரண்டாம் முறை. 1964க்கு ஏற்கெனவே ஒரு செப்பு தட்டு அதற்கு பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

பெண் ஊழியர்கள் நன்கொடை

சஹாகஞ்சிலுள்ள (கல்கத்தா) டன்லப் இந்தியா தொழிற்சாலையின் மஹிளா (மாதர்) சங்கத்தின் சார்பில் ஜெனரல் ஓர்க்ஸ் மானேஜரின் மனைவியார் திருமதி ஜி. ரோஜர்ஸ், கவர்னர் திரு தர்மவீராவிடம், வெள்ள நிதிக்காக ஆயிர ரூபாயும், 1000 துணிகளையும் வழங்கினர்.

குட் இயர் புது நியமனங்கள்

அமெரிக்க குட் இயர் டயர் & ரப்பர் கம்பெனியின் வைஸ்-பிரஸிடெண்ட்டும், ஜெனரல் கான்சலுமான திரு ஆர்டன் இ. பயர்ஸ்டோன், கம்பெனியின் டைரக்டர்கள் போர்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

குட் இயர்-இந்தியாவின் டயர் இலாகா மானேஜராக திரு எஸ். சக்ரவர்த்தி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவரை உதவி சேல்ஸ் மானேஜராக இருந்து வந்தவர் இவர்.

திரு ஏ. எம். ராய், அலைடு பிராடக்ட்ஸ் இலாகாவின் மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பிரிவுக்கு இவரும் இதுவரை உதவி சேல்ஸ் மானேஜராக இருந்தவர்.

எங்குவேண்டுமானாலும் போகும் வண்டி

இல்லினுயிஸிலுள்ள (அமெரிக்கா) ஒரு கம்பெனி தயாரித்துள்ள நெல்சன் ரப் டெர்ரேயின் சர்வீஸ் வெஹிகிள் என்று அழைக்கப்படும் எங்குவேண்டுமானாலும் போகும் வண்டிக்கு பெல்ட்டுகளையும், விசேஷ டயர்களையும் குட் இயர் தயாரித்து கொடுத்திருக்கிறது. 8 டயர்களுடனும், 4 பெல்ட்டுகளுடனும் இந்த வண்டி ஓடுகிறது.

போலிகிளாஸ் டயர்

போலிஸ்டர் பிளைகளும், பைபர் கிளாஸ் பெல்ட்டுகளும் டிரெட்டுக்குக் கீழ் பொருத்தி குட் இயர் தயாரிக்கும் புதுவகை டயர்கள் மிகவும் பிரபலமடைந்திருக்கின்றன. முதல் 10 லக்ஷம் டயர்கள் ஐந்தே மாதங்களிலும், இரண்டாவது 10 லக்ஷம் டயர்கள் மூன்றே மாதங்களிலும் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டிருப்பதாக குட் இயர் சேர்மன் திரு ரஸ்ஸல் டியங் அறிவித்தார். வேறு எந்த டயருக்கும் இந்த மாதரி கிராக்கி இருந்ததில்லை என்றார்.

இந்த போலிகிளாஸ் டயர் இப்போதைக்கு இந்தியாவில் தயாரிக்கப்படவில்லை. கூடிய சீக்கிரத்தில் இது இந்தியாவிலும் கிடைக்கலாம்.

மோட்டாரிஸ்ட்டுகளுக்கு வழிகாட்டி

"மோட்டாரிஸ்ட்டுகளுக்கு வழி காட்டி" என்ற வரிசையில் மூன்றாவது புத்தகத்தை குட் இயர் இந்தியா வெளியிட்டிருக்கிறது. கலர் புத்தகமான இதில் மேற்கு தொடர்ச்சிமலையில் பார்க்கவேண்டிய பூனு, நாசிக், மகாபலேசுவர், தௌலதாபாத், அவுரங்காபாத், அஜெந்தா, எல்லோரா, கானேரி, கர்ளா குகைகள் ஆகிய முக்கிய இடங்கள் பற்றி தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மோட்டாரிஸ்ட்டுகளுக்கு ஒரு 'ரூட் மேப்பும்" இருக்கிறது. எங்கெங்கே, உணவும், தங்கும் விடுதிகளும் இருக்கின்றன என்பது பற்றிய விவரங்களும் தரப்பட்டிருக்கின்றன. புத்தகம் வேண்டுவோர் பின் கண்ட விலாசத்திலிருந்து இதைப் பெற்றுக்கொள்ளலாம்:—குட் இயர் P. R. இலாகா, 225-C, ஆசார்யா ஜகதீஷ் போஸ் ரோடு, கல்கத்தா-20; அல்லது கிராண்ட் அட்வர்டைஸிங் இண்டர்நேஷனல், Inc., ஷேக்ஸ்பியர் சரணி, கல்கத்தா-16.

ஹிந்துஸ்தான் J6 விற்பனை அதிகரிப்பு

ஹிந்துஸ்தான்-J6 ஹெவி டூடி வண்டிகளின் விற்பனை இந்தியா முழுவதும் அதிகரித்து வருகிறது. பலவித ரஸ்தாக்களில், பலவித சீதோஷ்ண நிலைகளில், பலவித லோடுகளை ஏற்றி ஓட்டிப் பார்த்து பூர்ண திருப்தியடைந்திருப்பதாக பிளீட் ஓனர்கள் பாராட்டி ஹிந்துஸ்தான் மோட்டார்சுக்கு கடிதம் எழுதியிருப்பதாக அக்கம்பெனி ஒரு அறிக்கையில் தெரிவிக்கிறது. மதுரையைச் சேர்ந்த கோடைகானல் மோட்டார் யூனியன் (பிரைவேட்) லிமிடெட், மதுரை-கோடைகானல் இடையே ''காட் செக்ஷனில்'' ஒரு ஹிந்துஸ்தான்-J6 பஸ்ஸை ஓட்டி வருகிறது. தினம் 150 மைல் ஓடுகிறது. ஏப்ரல் முதல் தேதி முதல் இது ஓடுகிறது. "ஒரு புகாரும் இல்லை; ஒரு பிரக்டவுன்கூட கிடையாது'' என்று இந்த பஸ் கம்பெனி பாராட்டி எழுதியிருப்பதாயும், மேலும் 6 J6 சாஸிகளை இவர்கள் வாங்கியிருப்பதாயும், மேற்கொண்டு 15-ஐ வாங்க தீர்மானித்திருப்பதாயும் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் அறிக்கை கூறுகிறது.

திரு லின்ட்மென் திரும்பினர்

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் மெர்செண்டைசிங் மானேஜர் திரு எச். ஏ. லின்ட்மென், ஸ்விடர்ஜர்லாந்திலிருந்து திரும்பியிருக்கிறார். ஜெர்மனி, பெல்ஜியம், இத்தாலிக்கும் அவர் விஜயம் செய்தார். லூடனிலுள்ள வாக்சால் மோட்டார்ஸையும், பிரிட்டனில் லாங்பிரிட்ஜிலுள்ள பிரிட்டிஷ் மோட்டார் லேலண்டு கார்ப்பரேஷனையும் இவர் பார்வையிட்டுவிட்டு வந்திருக்கிறார்.

பயர்ஸ்டோன் ஏற்றுமதி

1968 ஆகஸ்ட் முன் பகுதியில் 6627 டயர்களையும், 5996 டியூப்களையும் பயர் ஸ்டோன் இந்தியா ஏற்றுமதி செய்திருக்கிறது. அண்மையில் இதன் டயர்-டியூப்புகள் ஏற்றுமதியான நாடுகளில் மலேசியா, யுகோஸ்லாவியா, இலங்கை, கிழக்காப்பிரிக்கா சிலவாகும்.

இந்திய ஆஸ்பத்திரிக்கு ஆம்புலன்ஸ் வண்டி

பிரிட்டனில் எடின்பரோவிலுள்ள மாணவர்கள் ஒன்று சேர்ந்து கலை நிகழ்ச்சி நடத்தி நிதி திரட்டி மருத்துவக் கருவிகள் அத்தனையும் கொண்ட ஒரு ஆம்புலன்ஸ் வண்டியை வாங்கி, பூனா நகரில் உள்ள 'வாடியா ஆஸ்பத்திரிக்கு' நன்கொடையாக கொடுக்க முன்வந்துள்ளனர். தரைமார்க்கமாக இதை 18 ஆயிரம் மைல்கள் ஓட்டிகொண்டு வருகின்றனர். ★

மேலும் மேலும் பலப்பல திருப்திபெற்ற வாடிக்கைக்காரர்கள்

ஆடோ-ஜென் ஆர்மேச்சர்கள் & டைனமோக்களை நம்புகிறார்கள்.

மேலும், திருப்திபெற்ற வாடிக்கைக்காரர்கள் மறுபடியும் வாங்குவார்கள். அதனால் கூடுதலான வியாபாரம். அதிகமான லாபம்!

ஆடோ-ஜென் ஆர்மெச்சர்கள் மற்றும் டைனமோக்கள் • நுணுக்கத்துடன் தயாரிக்கப்பட்டவை. • அநேகமாக எல்லாவிதமான கார்களுக்கும் டிரக்குகளுக்கும் கிடைக்கின்றன • பல வருடங்களாக சோதித்து நிரூபிக்கப் பட்டவை.

எப்பொழுதும் உயர் தரத்திற்கும், சிறந்த சேவைக்கும் நீங்கள் ஆடோ-ஜென்னை நம்பலாம்.



தயாரிப்பவர்கள் :

ஸ்கைலைன் இண்டஸ்டிரீஸ், போபால்.

விநியோகஸ்தர்கள் :

மேற்குப் பிராந்தியம் :

மெஸர்ஸ் மெக்ராஜ் சேதி & சன்ஸ்

கென்னடி பிரிட்ஜ், பம்பாய்-4 BR.

தென் பிராந்தியம் :

மெஸர்ஸ் மெக்ராஜ் சேதி & சன்ஸ்

41, G & H, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

புதிய ஹயர்-பர்சேஸ் சட்டம் வரவேற்கத்தக்கதே

சென்னை மவுன்ட் ரோட்டில், ஸ்பென்சர் கட்டிடத்திற்கு எதிரில் உள்ள பட்டுல்லோஸ் தெருவில் இருக்கும் **கமர்ஷியல் கிரடிட் கார்பரேஷனின்** டைரக்டர் திரு யு. பிரபாகர ராவ். மோட்டார் வாகனங்கள் மீது ஹயர்-பர்சேஸ் முறையில் பணம் கடன் தர, முறைப்படி கம்பெனியை ரிஜிஸ்டர் செய்து, ஒழுங்கான முறையில் நடந்துவரும் ஒரு சில புராதன நிறுவனங்களில் இது ஒன்றாகும். புதிய ஹயர்-பர்சேஸ் சட்டம் பற்றி "மோட்டார்" நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியில் திரு பிரபாகர ராவ் வெளியிட்ட கருத்துக்களை இங்கே மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கின்றோம். (ஆ-ர்)

BY
MR. U. PRABHAKAR RAO,
Director, Commercial Credit Corporation, Madras.

"முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு நடைபெறும் எங்களுடையது போன்ற ஹயர்-பர்சேஸ் ஸ்தாபனங்களுக்கு இந்த புதிய சட்டத்தால் நன்மையே. பணம் கடன் வாங்கும் ஹயரருக்கு தான் இந்த சட்டம் நிறைய சலுகைகளும், பாதுகாப்புகளும் அளிக்கிறது என்றாலும், இந்த சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

"சட்டத்திலுள்ள ஒரு சில ஷரத்துக்கள் விஷயத்தில் மறுபரிசீலனை தேவை. இவைகளை அமல் நடத்துவது நடைமுறையில் சாத்தியமாக இருக்காது. உதாரணமாக இவ்வித சில ஷரத்துக்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

19-வது ஷரத்து

19-வது ஷரத்தை எடுத்துக்கொண்டால், ஒன்றுக்கு அதிகமான ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தங்களை ஒருவரே செய்துக்கொண்டிருக்கும் விஷயங்களில் ஓனருக்கு சிரமங்களை உண்டுபண்ணும். அதாவது, ஒருவரே 4 வண்டிகளை 4 ஹயர்-பர்சேஸ் ஒப்பந்தங்களில் வாங்கியிருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்த நான்குக்கும் ஹயரர், டியூக்களை சேர்த்துகட்டி வரவேண்டும். ஒரு ஒப்பந்தத்தின் விஷயத்தில் மட்டும், சட்டப்பூர்வமான விகிதாசாரத்தை அவர் செலுத்திவிட்டு, மற்றவை விஷயததில் டியூ பாக்கிகள் நின்றுபோனால், ஓனரால் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. நின்றுபோன பாக்கிகளை வசூலிக்க வண்டிகளை "சீஸ்" செய்யமுடியாது. இது ஓனர்களுக்கு கெடுதலானது ஆகவே ஏதாவது டியூ பாக்கியிருந்தால், முதலில் அதை செலுத்தி சரி கட்டவேண்டும். இதற்குத் தகுந்தபடி இந்த ஷரத்தை மாற்றி அமைக்கவேண்டும்.

ரிபேட் விஷயம்

ரிபேட்டை கணக்கிடும் முறை பற்றிய ஷரத்து நல்லதே. எங்களுடையது (கமர்ஷியல் கிரடிட் கார்பரேஷன்) போன்ற கம்பெனிகள் இந்த ஷரத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாசாரத்தைக் காட்டிலும் தற்சமயம் அதிகளவு ரிபேட் கொடுத்து வருகின்றன.

16-வது ஷரத்து

16-வது ஷரத்து பொறுத்தவரை, இது தெளிவாக இல்லை. அதாவது "சீஸ்" செய்யும் வண்டிகளை விற்பதன்மூலம் சம்பாதிக்கும் வரம்பு மீறிய லாப தொகையை ஓனரிடமிருந்து ஹயரர் திரும்பப்பெறுவதற்கு உரிமை அளிக்கிறது இந்த ஷரத்து. இதை கேட்டு ஹயரர் நோட்டீஸ் தரும் தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் இத்தொகையை ஓனர் திருப்பித்தராவிடில், 60 நாள் கெடு தேதி காலாவதி ஆகும் தினத்திலிருந்து 6% வீதம் ஓனர் வட்டி சேர்த்து தரவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது.

"சீஸ்" செய்த வண்டி, உடனே விற்றுவிட்டால் சரி. இல்லாவிடில் இந்த 60 நாள் கெடு என்பதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? சில சமயங்களில் ஒரு வண்டியை விற்க மாதக் கணக்கில், ஏன்—வருஷக்கணக்கில்கூட காலம் பிடிக்கலாம். வண்டி விற்ற பிறகு தானே பணம் தரமுடியும்! ஆகவே இதுபோல கெடு நிர்ணயிப்பது சரியல்ல. "வண்டியை விற்ற தேதியிலிருந்து" என்று இதை தெளிவாக மாற்றி அமைக்கவேண்டும்.

மற்றபடி வண்டியின் இருப்பிடம் பற்றி ஓனருக்கு ஹயரர் தகவல் தெரிவிக்கவேண்டும்

என்பது பற்றிய 15-வது ஷரத்து வரவேற்கத் தக்கதே. தற்போது இத்தகவல் தெரியாமல் ஓனர்கள் சிரமப்படுகின்றனர். ஓனர்களுக்கு அனுகூலமாக இருக்கும் ஷரத்துகளில் இது முக்கிய ஷரத்தாகும்.

ஹயரர், இன்சால்வெண்ட் ஆனல், வண்டி, கோர்ட் அதிகாரியின் பொறுப்புக்கு வந்து விடும் என்பது சரியில்லை. அதுவும் ரெகுலர் சர்வீஸில் ஓடும் ஒரு வண்டியாக இருந்தால், அதை கோர்ட் அதிகாரி எடுத்துக்கொண்டு என்ன செய்வார்? ஆகவே ஒருவர் இன்சால்வெண்ட் ஆகும் பட்சத்தில் வண்டி, உடனடியாக ஹயர்–பர்சேஸ் கம்பெனியின் பொறுப்புக்கு வந்து விட வேண்டும்.

கண்டிரோல் உத்திரவின் கீழ் இருக்கும் வண்டிகள் பொறுத்தவரை, இவை ''சீஸ்'' செய்யப்பட்டால், ஹயர்–பர்சேஸ் கம்பெனி இவ் வண்டிகளை விற்பதற்கு ஓனர்ஷிப் உரிமையை கண்டிரோலர் தானுக மாற்றிக் கொடுக்க வேண்டும். ஆர். டி. ஓவின் அனுமதியைபெற்று உசிதம்போல விற்க ஓனருக்கு வசதி அளிக்க வேண்டும். அனாவசியமாக மாதக் கணககில் காத்திருக்கச் செய்யக்கூடாது.

இது போன்ற ஒரு சில குறைபாடுகள் தவிர மற்றபடி மொத்தத்தில் புதிய ஹயர்–பர்சேஸ் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.''

தென்னிந்திய ஹயர்-பர்சேஸ் சங்கம்

''தென்னிந்திய ஹயர்–பர்சேஸ் சங்கம்'' என்ற பெயரில் ஒரு சங்கம் சென்னையில் (37, மவுண்ட் ரோடு, சென்னை–6) அமைக்கப் பட்டிருக்கிறது. புதிய ஹயர்–பர்சேஸ் சட்டம் பற்றி இச் சங்கம் அதன் கருத்துக்களை சீக்கிரத் தில் வெளியிடும்.

(சட்டத்தின் முக்கிய ஷரத்துகள் விவரம் 18–ம் பக்கம் பார்க்கவும்)

விளம்பரங்களுக்கு பதில் எழுது கையில் அதை ''மோட்டாரில்'' பார்த்ததாக குறிப்பிடுங்கள்.

சங்கச் செய்திகள்

காலஞ்சென்ற திரு P. N. மலையப்ப அய்யர்

MMPDA துக்கம்

சென்னை பாரத் மோட்டார்ஸின் டைரக்டர் திரு N. மலையப்ப அய்யர், (67 வயது) 6-9-1968 அன்று காலமான செய்தியை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். சென்னை மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம் (MMPDA) 11-9-68 அன்று ஒரு இரங்கற் கூட்டம் நடத்தி துக்கம் அனுசரித்தது.

லேட் திருமதி T. ராஜகோபால், திரு வெங்கடகிருஷ்ண ரெட்டியார்

TMPDA துக்கம்

திருமதி T. ராஜகோபால் (திருச்சி, பாபுலர் ஆட்டோமொபைல்ஸ் (பி) லிட்.,) திரு வெங்கட கிருஷ்ண ரெட்டியார் (திருச்சி, ராம் & கோ.) ஆகியோர் காலமானதற்கு துக்கம் அனுசரிக்க திருச்சி மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம் (TMPDA) 31-8-68 அனறு, திருச்சி, யுனைடெட் இந்தியா பில்டிங்ஸிலுள்ள காசி & சேது கட்டிடத்தில் ஒரு இரங்கற்கூட்டத்தை நடத்தியது. திரு ராமமூர்த்தி அய்யர் (ஸ்ரீ கிருஷ்ண ஆட்டோ மொபைல்ஸ்) தலைமை வகித்தார். காலஞ் சென்ற இருவரின் குணதிசயங்களை அவர் பாராட்டிப் பேசினர்.

திருவாளர்கள் பூச்சி நாடார் (A. R. A. S. & P. V. P. V. நாடார் & கோ.), சொக்கையா (இம்பீரியல் ஆட்டோமொபைல்ஸ்), கே. ராமா மிருதம் (சங்கக் காரியதரிசி) ஆகியோரும் ஆழ்ந்த துக்கம் தெரிவித்துப் பேசினர். 2 நிமிஷம் மௌனம் அனுசரிக்கப்பட்டது. அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து துக்க தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கம்

திரு எம். எம். சுந்தரம் காரியதரிசியாக தேர்வு

தமிழ்நாடு மோட்டார் பார்ட்ஸ் டீலர்கள் சங்கத்தின் விசேஷ மகாசபைக்கூட்டம் 20-8-68 அன்று, மதுரையிலுள்ள அச்சங்கத்தின் கட்டிடத்தில் நடைபெற்றது. கௌரவகாரியதரிசி திரு கே. பிரான்ஸிஸ், கூட்டு காரியதரிசி திரு கே. எஸ். காளிதாஸ், பொக்கிஷதார் திரு எம். எம். சுந்தரம் ஆகியோரின் ராஜினமாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



திரு எம். எம். சுந்தரம் புதிய காரியதரிசி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பெயரைப் பிரேரித்தவர் திரு வி. ஷண்முகவேல் (பூச்சி ஆட்டோ ஸ்டோர்ஸ்); ஆமோதித்தவர் திரு மெய்யப்பன் (கண்ணப்ப மோட்டார்ஸ்.)

திரு ஸி. எஸ் முத்துகிருஷ்ணன் (காலிக் ஆட்டோமொபைல்ஸ்), புதிய கூட்டுக் காரிய தரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரேரித்தவர் திரு எம். எம். சுந்தரம் (முத்து ஆட்டோமொ பைல்ஸ்) ; ஆமோதித்தவர் திரு P. மகாலிங்கம் (பாபு ஆட்டோமொபைல்ஸ்.)

திரு என். தங்கராஜ் (ஸ்ரீனிவாசா ஆட்டோ ஸ்டோர்ஸ்), புதிய பொக்கிஷதாராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். பிரேரித்தவர் திரு ஸி. எஸ். முத்துகிருஷ்ணன் ; ஆமோதித்தவர் திரு வி. ஷண்முகவேல்.

நிர்வாகக் கமிட்டியில் ஒரு மெம்பராக ஜார்ஜ் ஒக்ஸ் லிமிடெட் தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு ஸி. என். முத்தளகு செட்டியாரும் (மீனுக்ஷி டிரேடிங் கோ.) நிர்வாக கமிட்டி மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமை யாக இருந்து, தொழிலில் முன்னேறுவதற்கான முயற்சிகளை எடுக்க ஒத்துழைக்கும்படி தலைவர் திரு RM. A. RM. ராமநாதன் செட்டியார் கேட்டுக்கொண்டார்.

மதுரை-ராமநாதபுரம் பஸ் உரிமையாளர்கள் சங்கக் கூட்டம்

மதுரை—ராமநாதபுரம் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் (153, வடக்கு வெளி வீதி, மதுரை-1) கூட்டம் 18-7-1968 அன்று மணலூரிலுள்ள கே. என். நன்னு அய்யர் பங்களாவில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

“அரசு பஸ்களில் கிலோ மீட்டருக்கு $2\frac{1}{2}$ பைசா வீதம் கட்டணம் வசூலிப்பது, தனியார் பஸ்களை பாதிப்பதால், தனியார்துறை பஸ்களில் வாங்கும் அதே 3 பைசா கட்டணத்தை அரசாங்கத் துறையிலும் வாங்கவேண்டும் என்று இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது. இது விஷயமாக அரசுக்கு ஒரு மகஜரை அனுப்பவும், இதன் நகல்களை இதர ஜில்லா பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் மோட்டார் வாகன வரி அதிகமாக இருப்பதால், வரிகளை கணிசமாக குறைக்கும்படி அரசிடம் கேட்க தீர்மானிக்கப்பட்டது. குறைந்தது 5 பஸ்கள் வரை மோட்டார் தொழிலாளர் சட்டத்திலிருந்து விதிவிலக்களிக்கவேண்டும். **A. S. T. A. T.** கோர்ட்டை மதுரைக்கு மாற்றும்படி அரசை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. மெட்ரிக் முறையில் மாறுதல் செய்வதற்கு ஒரு பஸ்ஸுக்கு ஒரு ரூபாய் வீதம் கோர்ட் பீஸ் ஸ்டாம்பு தேவை இல்லை என்று சர்க்காரிடமிருந்து சங்கம் வாங்கியிருக்கும் உத்திரவின் நகலை எல்லா மெம்பர்களுக்கும் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. புது ரூட்டுகள் விஷயமாக சங்கம் தலையிடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

டாக்ஸி ஓனர்கள் சங்கம் முறையீடு

சென்னை கான்டிராக்ட் காரேஜ் ஓனர்கள் சங்கத்தின் கூட்டம் 6-9-68 அன்று நடைபெற்றது. எல்லா பேபி டாக்ஸிகளிலும் ஒரே மாதிரி எண்ணிக்கையில் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல அனுமதிக்கும்படி அரசை கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. பியட் கார்களில் பின்சீட்டில் மூன்று பிரயாணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என்றால், ஸ்டாண்டர்டு, மாரிஸ், பேபி ஹிந்துஸ்தான் கார்களிலும் இதேபோல ஏற்றிச்செல்ல முடியும் என்றும், இந்தக் கார்களில் எல்லாம் பின்சீட் இடவசதியில் அதிக வித்தியாசம் கிடையாது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஆனால், பின்னால் மூன்று பேர் உட்கார்ந்தால், ஒரே நெருக்கமாக இருக்கும் என்றும், அதோடன்றி இந்த நெருக்கம் காரணமாக கதவுகள் திடீரென்று திறந்து விபத்துகள் மூளக்கூடும் என்றும் சங்கம் அபிப்பிராயப்படுகிறது.



மெக்கானிக்குகளுக்கு குறிப்புகள்

காண்டாக்ட் பாயிண்டே தேவையில்லை !

"டிரான்ஸிஸ்டர் இக்னிஷன் சிஸ்டம்"

மோட்டார் வாகனங்களுக்கு இப்போது **"டிரான்ஸிஸ்டர் இக்னிஷன் சிஸ்டம்"** கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதில் காண்டாக்ட் பாயிண்ட்டுகள் கிடையாதாகையால் அடிக்கடி பாயிண்ட்டுகளை அட்ஜெஸ்ட் செய்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இப்போது மாமூல் பழக்கத்தில் இருந்து வரும் பாயிண்ட்டுகள்–காயில்–கண்டன்சர் ஆகியவைகளைக்கொண்ட இக்னிஷன் சிஸ்டம் இன்னமும் திருப்திகரமாகவே சேவை செய்து வருகிறது என்றாலும் (இந்த சிஸ்டம் இன்னும் நெடுங்காலத்திற்கு பழக்கத்தில் இருந்து வரும் என்றாலும்), அவ்வப்போது பாயிண்ட்டுகளும், மற்ற முக்கிய உறுப்புகளும் தேய்ந்து விடுவதால் இவைகளை அடிக்கடி மாற்றிப் போடவேண்டி யிருக்கிறது. உதாரணமாக ஸ்பார்க் பிளக்குகள், பாயிண்ட்டுகள், கண்டன்சரை 8000 மைல் களுக்கு ஒரு தடவை அட்ஜஸ்ட் செய்தோ அல்லது புதிப்பித்துப் போட்டோ தீரவேண்டும். குளிர் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் அடிக்கடி (நகரப் பிரதேசங்களில்) வண்டியை நிறுத்தி நிறுத்தி ஓட்டவேண்டியிருப்பதால், நிற்கும்போதுகூட இன்ஜின் (ஐட்லிங்கில்) ஓடிக் கொண்டே இருந்து, பராமரிப்பு செலவு அதிகரிக்கிறது.

எப்படி லாபம் ?

டிரான்ஸிஸ்டர் இக்னிஷன் சிஸ்டத்தில் கிடைக்கும் நன்மைகள் என்ன ? (1) காண்டாக்ட் பாயிண்ட்டுகளை மாற்றிப் போடவேண்டிய அவசியமில்லை. (2) அப்படி காண்டாக்ட் பாயிண்ட்டு களை உபயோகித்தால், மாற்றிப்போடும் காலம் நீடிக்கப்படுகிறது. அதிக ஸ்பீடில் போகும்போது இன்ஜின் மேலும் நன்றாக வேலை செய்கிறது.

2 ரகம்

டிரான்ஸிஸ்டர் இக்னிஷன் சிஸ்டத்தில் 2 ரகங்கள் உண்டு.

(1) கெபாசிடி டிஸ்சார்ஜ் சிஸ்டம்—இதில் காண்டாக்ட் பாயிண்ட் கிடையாது.

(2) காண்டாக்ட் கண்ட்ரோல்டு டிரான்ஸிஸ் டர் இக்னிஷன் சிஸ்டம்—இதில் காண்டாக்ட் பாயின்ட் உண்டு.

முதல் ஸ்டத்தில், ஸ்பார்க் பிளக்குகளின் ஆயுசு, நான்கு மடங்கு அதிகரித்திருப்பதாக அனுபவத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. கடும் குளிருள்ள பருவநிலையில்கூட இன்ஜினை உடனே ஸ்டார்ட் செய்ய முடிகிறது. இக்னிஷன் வோல் டேஜ் (மின்பொறி) பன்மடங்கு அதிகமாக கிடைத் திருப்பதால், பிளக்குகள் பயர் ஆவது நிச்சயம்.

பெட்ரோல் "பிளட்" ஆகியிருந்தால்கூட, இக்னிஷன் வோல்டேஜ் சக்தி அதிகமாக இருப்ப தால், இன்ஜின் வெகு சுலபமாக ஸ்டார்ட் ஆகி றது.

அடிக்கடி மெயிண்டெனெஸ் தேவையில்லை. பிளீட் ஓனர்களுக்கு செலவு ரொம்ப மிச்சம். கடைசியாக, ஒயரிங் சர்க்யூட் பிழையற்ற தாக, முழு பாதுகாப்பு உத்திரவாதம் அளிக்கிறது. அதாவது அஜாக்கிரதையினால் ஒரு மெக்கானிக் ஒயர்களை தாறுமாறாக இணைத்து "ஷார்ட்" செய்தாலோ அல்லது மின் ஓட்ட திசையை (போலாரிடியை) மாற்றி போட்டுவிட்டாலோ ஒரு சேதமும் ஏற்படாதபடி அவ்வளவு பாது காப்பாக அமைந்திருக்கிறது இந்த சிஸ்டம்.

இந்த கெபாஸிடர் டிஸ்சார்ஜ் சிஸ்டத்திற்கு "டெல்கோ–ரெமி (C–D)" சிஸ்டம் என்று பெயர். இந்த சிஸ்டத்திற்கும், ஆட்டோமொ பைல் இக்னிஷனுக்குள்ள மற்ற சிஸ்டம்களுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் என்னவென்றால், ஸ்பார்க் பிளக்குகளை "பயர்" செய்யவைக்க, மின்சக்தியை சேமித்துவைத்து, வெளியிடும் பிரமாத சக்திதானாகும். மற்ற எல்லா சிஸ்டங் களிலும், இந்த பூராவேலையும் நடைபெற இக்னிஷன் காயில் ஒன்றையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

சக்தி பெருக்கி

ஆனால் C–D சிஸ்டத்தில் (சக்தியை பெருக் கிக் கொடுக்கும்) ஒரு பவர் கன்வர்ட்டரும், ஒரு கண்டன்சரும், மின்சக்தியை சேமித்து வெளியிட

அதிகப்படியாக பொருத்தப்படுகின்றன. தேவையான சமயம் வரை மின்சக்தியை சேமித்துவைக்கும் இந்த கண்டன்சர் மூலம், 30,000 வோல்ட் சக்திக்கு அந்தக்ஷணத்தில் மின்பொறிதெறிக்கச் செய்ய முடிகிறது. ஒரு ஸ்பார்க் பிளக் எவ்வளவு மோசமாக எண்ணெய் தோய்ந்திருந்தாலும், எரிந்து கரிபடிந்திருந்தாலும், ஈரமாகியிருந்தாலும் அலறிக்கொண்டு "பயர்" ஆகும். சாதாரண சிஸ்டத்தில் பயராகும் நேரத்தைவிட 1/5 நேரத்தில் அவ்வளவு துரிதமாக பயர் ஆகிறது.

எலக்டிரானிக் உறுப்புகள்

C-D சிஸ்டத்திலுள்ள சில பார்ட்டுகள், எலக்டிரானிக் உறுப்புகளாகும். இவைகளுக்கு கவனிப்பே தேவையில்லே. மாக்னெடிக் பல்ஸ் டிஸ்ட்ரிபியூட்டர், ஸ்பெஷல் காயில், எலக்டிரானிக் ஆம்பிளிபையர் யூனிட் ஆகியவை இந்த சிஸ்டத்தின் பிரதான பார்ட்டுகளாகும்.

இந்த டிரான்ஸிஸ்டர் இக்னிஷன் சிஸ்டம் அமெரிக்க கார்களில் புகுத்தப்பட்டிருக்கின்றன.

(ஆதாரம்: "ஆட்டோமொமைல் வர்ல்டு")

ரி-ரெஜிஸ்டிரேஷன்

மோட்டாரிஸ்ட்டுகள் கவனிக்கவும்

தென்னிந்திய ஆட்டோமொபைல் சங்கக் (A. A. S. I.) காரியதரிசி தெரிவிப்பதாவது:—

"மெம்பர்கள், தாங்கள் இருக்கும் ராஜ்யங்களே அல்லாத, வேறு ராஜ்யங்களில் ரிஜிஸ்டர் செய்த மோட்டார் வாகனங்களே வைத்திருந்தால், 13 மாதங்களுக்குள், தாயக ராஜ்யத்தில் (எங்கு வண்டியை வைத்து ஓட்டிவருகிறுர்களோ அந்த ராஜ்யத்தில்) ரி-ரெஜிஸ்டிரேஷன் செய்துக் கொள்ளவேண்டும். இதற்கான மனுவை, ரூ 1-50 கோர்ட் பீஸ் ஸ்டாம்பு ஒட்டி கொடுக்க வேண்டும்.

இதைச் செய்யத் தவறினல் காராக இருந்தால் ரூ 35-ம், மோட்டார் சைக்கிளாக இருந்தால் ரூ 10-ம் பெனல்டி அபராதத்தை இவர்கள் தரவேண்டியிருக்கும்.

ரப்பர் உற்பத்தியாளர் கோரிக்கை

காப்பு வரி கமிஷன் சிபாரிசு அடிப்படையில் ரப்பருக்கு நிர்ணயித்துள்ள அதிகபக்ஷ விலேக் கட்டுபாட்டை அகற்றும்படி இந்திய ரப்பர் உற்பத்தியாளர்கள் சங்கம் கேட்டிருக்கிறது. இந்த விலே நிர்ணயம் நியாயமற்றது என சங்கம் தெரிவித்திருக்கிறது. இறக்குமதியை இச் சங்கமும் எதிர்த்திருக்கிறது.

உங்கள் வாகனங்களுக்கு
ஏற்ற தரமான தயாரிப்புகள்

▶ நன்கு டெம்பர் செய்து சோதித்தது
▶ உத்திரவாதமானது
▶ ஸ்பிரிங் ஸ்டீல் சிலிகான்-மாங்கனீஸ் En.45 யினுல் தயாரிக்கப்படுகிறது

தொந்தரவற்ற நீடித்த உழைப்பிற்கு பிரபாத் லீப் ஸ்பிரிங்குகளையே தேர்ந்து எடுங்கள்

பிரபாத் இண்டஸ்ட்ரீஸ்
நவ்ரங் பில்டிங் 330 நார்ஷி நதா தெரு, கதா பஜார் பம்பாய்-9
தொழிற்சாலே
நிட்டிங்ஹவுஸ் பம்பாய்-ஆக்ரா ரோடு விக்ரோலி-பம்பாய்-79
போன் ஆபீஸ்: 326018-326375 • தொழிற்சாலே: 582843 • தந்தி: INFOWEAR

Prabhat INDUSTRIES
330, NARSHI NATHA STREET,
KATHA BAZAR, BOMBAY-9.
Phone : Office : 326018, 326375
Factory : 582843,
Gram: INFOWEAR

செய்திக் கதம்பம்

ரஹீம் ஆட்டோமொபைல்ஸ்

"ரஹீம் ஆட்டோமொபைல்ஸ்" என்ற பெயரில், பெரியகுளம், தென்கரை கம்பம் ரோட்டிலுள்ள 66-ம் நம்பர் கட்டிடத்தில் ஒரு புதிய ஸ்பேர் பார்ட்ஸ் கடை 22-5-68 முதல் திறக்கப்பட்டு நடந்துவருகிறது. டயர், ஆயில், கிரீஸ், மோட்டார் சாமான்கள் முதலியவற்றை இவர்கள் விற்கின்றனர். ஜனப் யு. ஏ. ரஹீம், இதன் உரிமையாளராவார்.

அ. இ. ஆபரேட்டர்கள் மகாநாடு

அகில இந்திய ரோடு டிரான்ஸ்போர்ட் ஆபரேட்டர்களின் மகாநாடு நவம்பர் 16, 17 தேதிகளன்று புது டில்லியில் நடைபெறும். லாரி-பஸ் தொழிலின் பிரச்னைகள் பற்றி ஒரு கருத்தரங்கும் நடைபெறும். அக்கறையுள்ளவர் இம் மகாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப் படுகிறார்கள். மேற்கொண்டு விவரங்களுக்கு பின் கண்ட விலாசத்திற்கு எழுதவும்:— அகில இந்திய மோட்டார் யூனியன் காங்கிரஸ், 16-A ஆஸப் அலி ரோடு, புதுடில்லி-1.

டாக்ஸி ஹயர்-பர்சேஸ் திட்டம்

சென்னை டாக்ஸி டிரைவர்கள் கூட்டுறவு சங்கத்தின் டாக்ஸி ஹயர்-பர்சேஸ் திட்டத்தை தமிழக சட்ட மந்திரி திரு மாதவன் ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தின்கீழ், இந்த கூட்டுறவு சங்கத்தில் மெம்பராக இருக்கும் டிரைவர்களுக்கு, அவர்கள் தினம் ரூ 15 வீதம் 5 வருஷங்களுக்கு கொடுத்து வந்தால், ஹயர்-பர்சேஸ் முறையில் இவர்களுக்கு டாக்ஸிகள் தரப்படும். இதற்கு அரசு நிதி உதவி அளிக்கும்.

உடனடியாக 15 டாக்ஸிகள் வழங்கப்படும். பிற்பாடு 100 டிரைவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில் இத்திட்டம் போடப்பட்டிருக்கிறது. விழாவுக்கு தலைமைவகித்து போக்குவரத்து அமைச்சர் திரு கருணாநிதி பேசுகையில், இன்னும் சில வருஷங்களுக்குள் எல்லா டாக்ஸிகளுமே இந்த கூட்டுறவு சங்கத்தால் நடத்தப் படும் என்று நம்புவதாகக் கூறினார். இந்த சங்கத்திற்கு திரு என். வி. நடராசன்தான் தலைவர்.

ஓனர்கள் சங்கத் தலைவர் கருத்து

சென்னை கான்டிராக்ட் காரேஜ் (டாக்ஸி) ஓனர்கள் சங்கத் தலைவர் திரு வி. குருமூர்த்தி, வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில், வண்டியின் ஓனர்ஷிப்பை டிரைவர்களுக்கே மாற்றிக் கொடுக்கும் இந்த ரக கூட்டுறவுத் திட்டம், தனியார் ஓனர்ஷிப்புக்கு ஊக்கமளிக்கும் என்று வரவேற்கிறார். கூட்டுறவு சங்கங்களில் வருஷா வருஷம் பணம் போட்டு கண்டபலன் நஷ்டம் தான். ஓனர்ஷிப்பை கூட்டுறவு சங்கத்திடமிருந்து, தனிப்பட்ட டிரைவர்களுக்கு மாற்றியிருப்பதற்கு சர்க்காரைப் பாராட்ட வேண்டும். இதன்மூலம் டிரைவர்களுக்கு உண்மையான ஊக்கம் ஏற்படும். ஐந்தாண்டுகளில் வண்டி அவர்களுக்கு சொந்தமாகிவிடுமாதலால் டிரைவர்கள் கஷ்டப் பட்டு வேலை செய்யவும், பத்திரமாக வண்டியை பாதுகாக்கவும் தூண்டுதல் ஏற்படும். தனியார் தொழில் நடத்துவதற்கு கடன் தந்து சர்வீஸ் கூட்டுறவுகளை வளர்க்க சுதந்திர கட்சி ஆதரிக்கும் கொள்கைக்கு இது ஒரு வெற்றி" என்று திரு குருமூர்த்தி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"இந்தகொள்கையை மற்ற எல்லா துறைகளிலும் அரசு பின்பற்றவேண்டும். சர்விஸ் கூட்டுறவுகளாக இல்லாத கூட்டுறவு சங்கங்களில் இனியும் சர்க்கார் பணத்தைக்கொண்டு கொட்டக் கூடாது. டிரைவர்களாயிருந்தாலும் சரி, ஓனர்களாக இருந்தாலும் சரி, குறைந்த வட்டியில், சுலப தவணைகளில் தனிப்பட்டவர்களுக்கு ஹயர்-பர்சேஸ் முறையில் கடன் கொடுக்க நிறுவப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு ஊக்கமளிக்கவேண்டும்" என்று திரு குருமூர்த்தி, தெரிவித்திருக்கிறார்.

ஆட்டோ ரிக்ஷாக்கள் ஒழியாது

சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷாக்களை ஒழிக்க திட்டம் ஏதும் கிடையாதென போக்கு வரத்து மந்திரி திரு மு. கருணாநிதி, தமிழக சட்ட சபையில் அறிவித்தார். போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று போலீசார் சுட்டிக்காட்டியிருப்பதால், ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்று அவர் விளக்கினார்.

திருச்சியில் ஆட்டோ ஸ்டிரைக்!

திருச்சி டவுனில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஸ்டிரைக் நடைபெற்றிருக்கிறது. ஆட்டோ

DUKE

மிகச் சிறந்த

ஆயில் சீல்-ஆயிலை தக்கவைத்து தூசியை விரட்டுகிறது

DUKE



டியூக் ஆயில் சீல்களையே நீங்கள் எப்போதும் வாங்குவதன் மூலம், மிகச் சிறந்ததை தேர்ந்தெடுத்தவர்களாவீர்கள். ஏனெனில் ஒவ்வொரு டியூக் ஆயில் சீலும் ஒரு குறிப்பிட்ட வேலையை பூர்த்தி செய்வதற்காகவே தயாரிக்கப்படுகின்றன.

நிகரற்ற செயற்கை ரப்பர், பக்குவப்படுத்தப்பட்ட தோல் ஆகியவற்றைக்கொண்டு முதல் தரமான சீலிங் வஸ்துக்களால் நவீன முறையில் அற்புதமாக தயாரிக்கப்படும் டியூக் ஆயில் சீல்கள், ஆயில், கிரீஸ் ஒழுகாமல் மிக சிறந்த பாதுகாப்பளிக்கிறது, தூசியை உள்ளே அண்டவிடாமல் தடுக்கிறது.

எல்லா ரக வண்டிகளுக்கும் கிடைக்கும்.

Manufactured by

RAWEL INDUSTRIES,

517, Katra Ishwar Bhawan, Delhi-6.

Factory:

Jhajjar Road, Bahadurgarh (Pb.)
Near Delhi.

Distributors for Southern Zone

V. T. C. Automobiles

41, General Patters Road, Madras-2.

ரிக்ஷாக்களில் மீட்டர்களைப் பொருத்தவேண்டும் என திருச்சி ஆர். டி. ஏ. உத்திரவு பிறப்பித்திருந்தார். ஆட்டோ ஓனர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் இதற்கு 2 மாத அவகாசம் தரப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் இன்னும் மீட்டர்களை இவர்கள் பொருத்தாமல் இருக்கின்றனர்.

மீட்டர்கள் கிடைக்கவில்லை என்பது ஆட்டோ ஓனர்களின் வாதம்; மார்கெட்டில் வேண்டிய மீட்டர்கள் கிடைப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். திருச்சி டவுனில் கிட்டத்தட்ட 25 ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன.

ஆட்டோ ரிக்ஷா ஓனர்கள் சார்பில் ஒரு தூதுகோஷ்டி ஜில்லா கலெக்டர் திரு என். ஹரி பாஸ்கரை பேட்டி கண்டது. ஆனல் ஆர். டி. ஏ. வின் உத்திரவில்தான் தலையிட முடியாதென கலெக்டர் தெரிவித்துவிட்டார்.

இரும்பு தொப்பி இப்போது இல்லை

ஸ்கூட்டர்-மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் கட்டாயமாக இரும்பு தொப்பி (ஹெல்மெட்) அணியவேண்டும் என்ற திட்டம் இப்போதைக்கு ஒத்திப்போடப்பட்டிருப்பதாக போக்குவரத்து மந்திரி திரு மு. கருணநிதி, தமிழக சட்டசபையில் அறிவித்தார். ஸ்கூட்டர்களின் பின் சீட்டில் (பில்லியானில்) யாரும் ஏறிச்செல்லக்கூடாது என்று தடை விதிக்கவும் உத்தேசம் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினர்.

" செக்போஸ்ட் " இம்சை நீங்கும்?

செக்போஸ்ட்களில் அனுவசியமாக ஏற்படும் எல்லா இம்சைகளும் ஒழிக்கப்படும் என்று தமிழக டிரான்ஸ்போர்ட் கமிஷனர் திரு எஸ். ஆர். கெய்வார், டிரான்ஸ்போர்ட் ஆபரேட்டர்களுக்கு உறுதியளித்திருக்கிருர். இந்திய சாலை, டிரான்ஸ்போர்ட் அபிவிருத்தி கழகத்தின் **(IRTDA)** சென்னை கிளை ஆண்டு கூட்டத்தில் திரு கெய்வார் பேசுகையில், இந்த அறிவிப்பை வெளியிட்டார். வர்த்தகவரி இலாகாவும், டிரான்ஸ்போர்ட் இலாகாவும் ஒன்ருக சேர்ந்து, உபயோகிக்கும் வகையில் வே-பிரிட்ஜ்களுடன் எல்லா செக்போஸ்ட்டுகளேயும், ஒரே கூட்டு செக்போஸ்ட்டாக இணைக்கும் யோசனை மிகப் பிரமாத யோசனையாகும் என்று திரு கெய்வார் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு ஆர். என். பிள்ளை பேசுகையில், ஜோனல் பெர்மிட் திட்டத்தின் கீழ் ஓடும் லாரிகளுக்கு **PLW** எடையை 16,000 கிலோ கிராமுக்கு உயர்த்தி அரசு அண்மையில் பிறப்பித்துள்ள உத்திரவை பாராட்டினர். ஜோனல் பெர்மிட் பெற்றிருந்தாலும், பெற்றிரா விட்டாலும் தமிழகத்திலுள்ள எல்லா லாரிகளுக்கும் இந்த உயர்வை அனுமதிக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். துணைத் தலைவர் திரு **T. K.** சேஷாத்திரி வந்தனோபசாரம் கூறினர்.

சென்னை ரிபைனரி

சென்னை அருகில் மணலியில் அமைக்கப்பட்டுவரும் ரிபைனரி (எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை) அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். கிட்டத்தட்ட முக்கால் பங்கு வேலை முடிவடைந்துவிட்டது.

டயர் பஞ்சம் எப்போது தீரும்?

ஸ்கூட்டர் டயர்-டியூப் பஞ்சம் விரைவில் தீரும் என்று மத்திய தொழிலபிவிருத்தி மந்திரி திரு பகுருதீன் அலி அகமது பார்லிமெண்டில் நம்பிக்கை தெரிவித்தார். இந்த ஆண்டு 1,59,000க்கு இந்த டயர்-டியூப்கள் தேவைபடும் என்றும், கிட்டத்தட்ட 2,52,500 தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் திரு அலி கூறினர்.

ஆந்திராவில் புதிய ரஸ்தாக்கள் இருக்காது

4-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஆந்திராவில் புதிய ரஸ்தாக்கள் எதுவும் இருக்காது. ஏற்கெனவே இப்போதிருக்கும் ரஸ்தாக்கள், பாலங்களைப் பலப்படுத்துவதில்தான் கவனம் செலுத்தப்படும். கோதாவரி மீது ரயிலும், மோட்டார் வாகனங்களும் போவதற்கு போடப்படும் புதிய பாலம் ஒன்று மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

டில்லி-சென்னை நெடுஞ்சாலையில் ' மோட்டல்கள் '

இந்திய ஆட்டோமொபைல் சங்கங்கள் சம்மேளனத்தின் ஒன்பதாவது ஆண்டு மகா சபைக் கூட்டம், 27-7-1968 அன்று பம்பாயில் நடைபெற்றது. தென்னிந்திய ஆட்டோமொபைல் சங்கத்தின் சார்பில் அதன் சேர்மன் திரு **S. V. B.** ராவ், கலந்து கொண்டார்.

டூரிஸ்ட் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு, தேசிய நெடுஞ்சாலைகளில் மோட்டல்களைக் கட்ட இந்திய டூரிஸ்ட் அபிவிருத்தி கார்பரேஷனுக்கு சம்மேளனம் ஆலோசனை கூறியிருக்கிறது. நெடுஞ்சாலைகளில் தன்னந்தியாக நடைபெறும் ஓட்டல்களுக்குத்தான் "மோட்டல்கள்" என்று பெயர்.

இந்த ஆலோசனையை இக் கார்பரேஷன் ஏற்றுக் கொண்டிருக்கிறது. பரிட்சார்த்தமாக (1) டில்லி—சென்னை (2) டில்லி—பம்பாய் (3) டில்லி—கல்கத்தா (4) டில்லி—ஸ்ரீ நகர் ஆகிய 4 முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளில், தகுதியான இடத்தை தேர்ந்தெடுத்தபின் இந்த ' மோட்டல்கள் ' கட்டப்படும்.



ஜாம்பஜார் ஜக்கு, சைதாப்பேட்டை கொக்குன்னும்! மொரார்ஜி தேசாயா, கொக்கா? நரசிம்ம அவதாரமே எடுத்து விட்டார்! எத்தனையோ செய்யவேண்டியது கிடக்க, நம்ம முகரக்கட்டைக்கு குட்டிக்கார் என்ன வேண்டி கிடக்கு, குட்டி கார் என்று எள்ளும் கொள்ளுமாக வெடித்து தள்ளியிருக்கிறார்!!

உங்களுக்கு முதலில் எது தேவை? சாப்பாடா, வீடா அல்லது காரா?'' என்று சவால் விட்டிருக்கிறார். ஆகா! என்ன தாராளம்! என்ன கருணை!! முதலில் சாப்பாடு வேண்டுமா என்று 21 வருஷ சுதந்திரத்திற்குப் பின் கேட்கிறாரே! இன்னும் ரேஷன் அரிசியைத்தானே தின்று கொண்டிருக்கிறோம்!

இந்த குட்டி கார் மோகம் நமக்கு வேண்டாம். இப்போதுள்ள வேதாள வரிகளை குறைத்தாலொழிய மலிவு விலைக்கு கார்களை தயாரித்து கொடுக்கவே முடியாது. மூர்மார்கெட்டில் பொம்மை கார்களை வாங்கித்தான் தர முடியும் என்று எத்தனையோ பேர் சொல்லியும் கூட, டில்லி ஒரே பித்து பிடித்து அலைந்து கொண்டிருந்தது.

''நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு ராஜ்யமும் தலை கால் தெரியாமல் குட்டிகாரை தயாரிக்க குதிகுதி என்று குதிக்கின்றன. அப்பப்பா......எதற்காக இவ்வளவு அவசரமோ! தங்கள் ஒருவரால்தான் குட்டி காரை தயாரிக்க முடியும் என்று மைசூர் மார் தட்டுகிறது. மைசூருக்கு என்ன விசேஷ தகுதி இருக்கிறது? உங்கள் எல்லோரையும்விட எனக்கு இது பற்றி நன்றாக தெரியும். டில்லி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னாலேயே இப்படியா பரக்கை மாதிரி பறப்பது. சீசி! பெரிய ரோதனையாக வல்லவா போய் விட்டது! பணத்திற்கு எங்கே போவது என்று யாராவது கொஞ்சமாவது யோசனை பண்ணிப் பார்க்கிறார்களா? எதற்காக ஏகப்பட்ட கார்கள் தெருவில் ஓடிக் கொண்டிருக்க வேண்டும்? எதற்காக என்று நான் கேட்கிறேன்? பஸ்கள் நன்றாக இல்லையா? பஸ்ஸில் எல்லோரும் ஏறிப் போனால் என்னவாம்! இனி யாராவது குட்டி காரைப் பற்றி பேச்சு எடுங்கள் சொல்கிறேன். வாலை ஒட்ட அறுத்து விடுகிறேன்பார்'' என்று மொரார்ஜி, பேயோட்டி விட்டார்.

இந்த மனுஷன் பாருங்கோ. இவ்வளவு பேசியிருக்கிறாரே. மோட்டார் வாகனங்கள் மீது வரிகளை குறைப்பதாக ஒரு வார்த்தை......ஒரே ஒரு வார்த்தை சொன்னாரா பார்த்தீர்களா! ஆள் ரொம்ப அமுக்கு. அதுதான் சொன்னேன்! மொரார்ஜியா கொக்கா என்று!!

'' வாயாடி ''

APSA
AUTO PRODUCTS
Gear Knobs &
Accessories
APSA
அப்ஸா கியர் நாப்கள் (எல்லா வண்டிகளுக்கும்)
மற்றும் இதர ஆக்ஸஸரீஸ்கள்
உங்கள் தேவைக்கு அணுகவும்
ஆட்டோ பிராடக்ட்ஸ் &
சேல்ஸ் ஏஜென்ஸீஸ்
5/6, ஸ்டேட் பாங்க் தெரு, முதல் சந்து, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 85621

5 ராஜ்ய
ஜோனல் பெர்மிட்

★

மகிழ்ச்சி தரும்
செய்தி

தமிழக லாரிகளுக்கும் PLW 16000 kgs. ஆக உயர்த்தப்படுகிறது

அரசு உத்திரவு விவரம்

ஜோனல் பெர்மிட் திட்டத்தின் கீழ் (தமிழகம், ஆந்திரம், கேரளம், மைசூர், மகாராஷ்டிர 5 ராஜ்ய கூட்டு பெர்மிட்டின் கீழ்) ஓடும் தமிழகத்தைச் சேர்ந்த லாரிகளுக்குப் பெர்மிட் லேடன் எடையை (PLW) 16,000 கிலோகிராமாக உயர்த்த தமிழக அரசு இப்போது அனுமதியளித்திருக்கிறது.

ஜோனல் பெர்மிட்டின் கீழ் ஓடும் மற்ற 4 ராஜ்யங்களைச் சேர்ந்த லாரிகள் இந்த அளவுக்கு அதிக எடைக்கு சரக்குகளை கொண்டு வந்தும், ஏற்றிச் சென்றும் போவதால், தமிழக லாரிகளுக்கு இந்த அளவுக்கு PLW அனுமதிக்கப்படாமல் இருந்ததை அடுத்த, தமிழக லாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன மற்ற ராஜ்யங்களைப் போலவே, தமிழக லாரிகளுக்கு PLW ஐ அதிகரிக்க வேண்டுமென தமிழ் நாட்டிலுள்ள லாரி உரிமையாளர் சங்கங்கள் இடைவிடாது போராடி வந்தன. இதன் பேரில்தான் இப்போது தமிழக லாரிகளுக்கும் இந்த PLW அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அரசு உத்திரவு விவரம்

இது சம்பந்தமாக தமிழக அரசின் உள்துறை இலாகா பிறப்பித்துள்ள உத்திரவு கூறுவதாவது (G. O. Ms. No. 2196 dt. 31-7-1968):-

"உள்துறை இலாகா 24-8-62 அன்று பிறப்பித்த G. O. Ms. No. 2912 உத்திரவில், 12 டன் அல்லது இதற்கு அதிகத்திற்கு ரிஜிஸ்டர்டு லேடன் எடை உடைய வண்டிகளுக்கு, PLW ஐ 12 டன்னுக்கு அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 12 டன்னுக்கு அதிகமாக இதை உயர்த்தும்படி கேட்டு, லாரி ஆபரேட்டர்களிடமிருந்தும், ஆட்டோமொபைல் — ரஸ்தா அபிவிருத்தி சங்கங்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வந்தன. இதை அரசு ஆராய்ந்திருக்கிறது.

"தமிழக நெடுஞ்சாலை பிரதம இன்ஜினீரை, இது விஷயமாக அரசு கலந்தாலோசித்தது. எல்லா லாரிகளுக்கும் PLW-ஐ அதிகரிப்பது என்பது சாத்தியமில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். ஜோனல் பெர்மிட் திட்டம் பொறுத்தவரை, ஆந்திர பிரதேசம், கேரளம், தமிழகம், மகாராஷ்டிரம், மைசூர் ராஜ்யங்கள் பரஸ்பரம் 16000 கி.கி. முக்கு PLW-ஐ அனுமதிக்க கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. மற்ற ராஜ்யங்களைச் சேர்ந்த லாரிகள், இந்த அதிகபக்ஷ எடைக்கு லோடு ஏற்றி, தமிழகத்துக்கு வந்து போகும்போது, ஷை 24-8-62 தேதிய G.O. Ms. 2912 படி விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடு காரணமாக, தமிழகத்தைச் சேர்ந்த லாரிகளுக்கு இந்த வசதி மறுக்கப்பட்டிருந்தது.

"12 டன்களுக்கு அதிகமான எடையில் வண்டிகள் அடிக்கடி போய் வந்தால், பலஹீனமாக இருக்கும் கட்டுமானங்கள், சுமைதாங்க முடியாமல் பல பாலங்களும், வாராவதிகளும் திடீரென்று முறிந்துபோகக்கூடும் என்று பிரதம இன்ஜினீர் தெரிவித்திருக்கிறார். ஆகையால், பிரதம இன்ஜினீர் என்ன சிபாரிசு செய்திருக்கிறார் என்றால், இந்த ஜோனல் பெர்மிட் திட்டத்திற்கு அரசு ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருப்பதால், 16,000 கி.கி. எடையுடன் ஓட்ட அனுமதிக்கும் லாரிகளை இந்த 5 ராஜ்யங்களுக்குமாக சேர்த்து 1000 லாரிகள் எண்ணிக்கைக்கு மட்டுமே கட்டுப்படுத்த வேண்டும் என்றும், இந்த எண்ணிக்கையை மேலும் உயர்த்தக்கூடாது என்றும் தெரிவித்திருக்கிறார். பிரதம இன்ஜினீரின இந்த யோசனையை டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அங்கீகரித்திருக்கிறார்.

"நெடுஞ்சாலை பிரதம இன்ஜினீருடையவும், டிரான்ஸ்போர்ட் கமிஷனருடையவும் இந்த சிபாரிசை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, ஜோனல் பெர்மிட் உள்ள, தமிழகத்தைச் சேர்ந்த லாரிகளின் பெர்மிட் லேடன் எடையை 16,000 கிலோகிராமுக்கு அதிகரிக்க அனுமதித்து உத்திரவு பிறப்பிக்கிறது."

★

டிவிஎஸ்
வினியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை

டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்புகளை
உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர்
தங்கள் தங்கள் துறைகளில்
தலைசிறந்தவர். அவை நீண்டநாள்
உழைக்கும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்

சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-
பெங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்

மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

TVS

TVS/4695

"மதுரை நகரில் டாக்ஸிகளுக்கு மீட்டர் தேவையில்லை"

உள்ளூரில் டாக்ஸியில் யாரும் போவதில்லை : வெளியூர்களுக்குத்தான் ஓடுகின்றன

மதுரையைச் சேர்ந்த (76–ஏ, வக்கில் புது தெரு) ஜனுப் எம். காஜா மொகிதீன், எழுதுவ தாவது :—

''மதுரையிலுள்ள வாடகைக் கார்களுக்கு (டாக்ஸிகளுக்கு) மீட்டர் தேவைதானு என்பதை தமிழக அரசு சிந்தித்துப்பார்க்கவேண்டும். மதுரை நகரமானது, சுமார் 2 முதல் 3 மைல் சுற்றளவு மட்டுமே உள்ளது.

உதாரணமாக ஒருவர் செண்டிரல் பஸ் ஸ்டாண்டிலிருந்து, கலெக்டர் ஆபீசுக்குப் போக விரும்பினுல் இதற்கு பஸ் கட்டணம் 14 பைசா தான். அதுவே டாக்ஸியில் போவதாக இருந்தால் ரூ 2–25 செலவாகும். ஆகவே 14 பைசா செலவில் போவதை மக்கள் விரும்பு வார்களா அல்லது ரூ 2–25 கொடுக்கவிரும்பு வார்களா? இதை முக்கியமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மதுரை நகரிலுள்ள பெரும்பகுதி டாக்ஸிகள், மதுரைக்குள் அதிகம் ஓடுவதில்லை. எல்லாமே அநேகமாக வெளியூர்களுக்கு போகும் டாக்ஸி கள்தான். அதாவது மதுரையிலிருந்து சுமார் 20 மைல், இதற்கு அதிகமான தூரங்களுக்கு போய்வரும் டாக்ஸிகளாகத்தான் இருக்கின்றன. ஒப்பந்தத்தின் பேரில் இப்படி வெளியூர்களுக்கு செல்கின்றன.

ஆகவே மதுரைக்கு டாக்ஸி மீட்டர்கள் தேவையில்லையென தமிழக அரசு அறிவிக்க வேண்டும்.

சென்னை நகரத்தில் உள்ளது போல, மதுரையில் ஒவ்வொரு காரியாலயங்களும் அதிக தோலைவில் இருக்கவில்லை. எல்லா காரி யாலயங்களுமே அடுத்து அடுத்து மிக அருகா மையிலேயே இருக்கின்றன. ஆகவே தமிழக அரசு இது விஷயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.''

(இந்த மீட்டர் விஷயமாக மதுரை நகர டாக்ஸி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் திருவாளர்கள் எஸ். காமராஜ், எஸ். முத்து (எம். எல். ஸி.), T. S. பாஸ்கரன் ஆகியோரடங்கிய ஒரு தூது குழு 27–6–1967–ல் சென்னைக்கு நேரில் வந்து போக்குவரத்து அமைச்சரை பேட்டி கண்டு பேசியதில், டவுனில் ஓட்டுபவர்கள் மட்டும் மீட்டர் போட்டால் போதும்; வெளியூரில் மட்டும் ஓட்டிக் கொள்கிருேம் என்பவர்களுக்கு தேவை யில்லை என்று உத்திரவுபோடுவதாக அமைச்சர் உறுதியளித்தாக இத்தூது கோஷ்டியினர் தெரிவித்தனர். இச் செய்தி ஏற்கெனவே ''மோட்டாரின்'' 1967 ஜூலை இதழில் பக்கம் 30–ல் பிரசுரிக்கப்பட்டிருக் கிறது—ஆ–ர்.)

ஹயர்-பர்சேஸ் பேரம் : அரசே நடத்தவேண்டும்

தனிப்பட்ட லேவாதேவிக்காரர்கள் ஏக வட்டி வாங்குவதோடு, பைனன்ஸ் கமிஷன், எழுத்துக்கூலி என்றெல்லாம் வேறு பிடுங்கித் தின்பதால், ஹயர்–பர்சேஸ் முறையில் கடன் வழங்குவதை மத்திய–ராஜ்ய அரசுகளே எடுத்து நடத்த வேண்டுமென ஜனுப் காஜா மொகிதீன் தெரிவித்திருக்கிருர்.

மோட்டாருக்கு நீங்கள் சந்தாதாரராக ஆகிவிட்டீர்களா? இல்லையேல் உடனே சந்தாகட்டி சேருங்கள்

தமிழகத்தில் மோட்டார் வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது

தமிழகத்தில் ஓடும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 1967-ம் ஆண்டில் கணிசமாக அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பின் விவரம் பின்வருமாறு. (முந்தய ஆண்டில் இருந்த எண்ணிக்கை, அடைப்புகளுக்குள் தரப்பட்டிருக்கிறது):—

பஸ்கள்	7,319	(6,824)
லாரிகள்	13,833	(13,782)
டாக்ஸிகள்	6,129	(5,811)
மோட்டார்-சைகிள்கள்	22,624	(18,829)
கார்களும், மற்றவகை வாகனங்களும்	43,320	(37,451)

ஆக மொத்தம் 93,225 மோட்டார் வாகனங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

இந்த புள்ளி விவரங்களை அலசிப்பார்க்கையில், தமிழகத்தில் 1967-ம் ஆண்டில் பஸ்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 500 அதிகரித்திருக்கிறது. லாரிகளின எண்ணிக்கை 100க்கு சிறிது குறைவாக உயர்ந்திருக்கிறது. சரக்குகளை ஓரிடத்திலிருந்து மறற இடங்களுக்கு துரிதமாக எடுத்துப் போக கிராக்கி அதிகமாக இருப்பதால், பெர்மிட்டுகள் தாராளமாக வழங்கப்பட்டதை அடுத்து இந்த வண்டிகளின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதாக தமிழக அரசின் ஒரு அறிக்கை கூறுகிறது.

மோட்டார் சைக்கிள்கள்தான் ரொம்ப அதிகரித்திருக்கின்றன. 3,795 புதிய மோட்டார் சைக்கிள்கள் ஓட ஆரம்பித்திருக்கின்றன.

புது வண்டிகள் கிடைப்பதைப் பொறுத்து இந்த பல்வேறு வண்டிகளின் உயர்வு விகிதம் காணப்படுகிறது.

மோட்டார் வாகனங்களிடமிருந்து வரியாகவும், பீஸாகவும் தமிழக அரசுக்கு சென்ற ஆண்டு ரூ. 2 கோடிக்கு மேல் கிடைத்திருக்கிறது.

ரப்பர் இறக்குமதிக்கு எதிர்ப்பு

3000 டன் ரப்பர் இறக்குமதிக்கு மத்திய சர்க்கார் லைசென்ஸ் தந்திருப்பது நியாயமே இல்லை என்று கேரள விவசாய மந்திரி திரு எம். என். கோவிந்தன் நாயர் எதிர்த்திருக்கிறார். இது விஷயமாக ரப்பர் போர்டும் எதிர்ப்பு தெரிவித்திருப்பதை மத்திய சர்க்கார் மதிக்கவேண்டும் என்றார். ★

PRECISION AUTOMOTIVE COMPONENTS

BON

"பான்" பிராடக்ட்டுகள் பற்பல ரகங்களில் டாட்டா-மெர்சிடஸ்-பென்ஸ் வண்டிகளுக்கு தயாரிக்கப்படுகின்றன

இச் சின்னமே எங்கள் [BON PRECISION AUTOMOTIVE COMPONENTS] பார்ட்டுகளின் உத்திரவாதமாகும்

தயாரிப்பாளர்கள்:

பான்-இண்டர்நேஷனல்

8/13A, பென்ஹாம் ஹால் லேன், பம்பாய்-4 BR. தந்தி: RIGHTPART

தென்னிந்திய வினியோகஸ்தர்கள்: அசோசியேடட் ஆட்டோ செண்டர்

48, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

ஆன்ஸிலரி தொழில்களுக்கு விசேஷ சலுகைகள்

முக்கிய தொழில்கள் ஜாபிதாவில் சேர்க்கப்படும்

ஆட்டோமொபைல் ஆன்ஸிலரி தொழிலை, அதாவது ஸ்பேர்-பார்ட்டுகளைத் தயாரிக்கும் தொழிலை, முக்கிய தொழில்களின் ஜாபிதாவில் சேர்க்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. எதிர்கால வளர்ச்சிக்கு நிதி உதவி போன்ற சலுகைகளைப் பெறுவதற்கு இதன் மூலம் இத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும்.

ஆட்டோமொபைல் ஆன்ஸிலரி சிறுதொழில்களின் கருத்தரங்கொன்றை புதுடெல்லியில் துவக்கி வைக்கையில், மத்திய தொழிலபிவிருத்தி இலாகா துணை மந்திரி திரு பானு பிரகாஷ் சிங் இத் தகவலை அறிவித்தார்.

ஒரே மேடையில் முதல் சந்திப்பு!

ஆட்டோமொபைல் ஆன்ஸிலரி சிறுதொழில்களின் பிரதிநிதிகளும், ஆட்டோமொபைல் (பெரிய) தொழில் பிரதிநிதிகளும், முதல் முறையாக ஒரே மேடையில், இந்த கருத்தரங்கில் சந்தித்தனர். இத்தொழிலின் எதிர்கால தேவைகளை இந்த சிறிய ஆன்ஸிலரி தொழில்களால் நிறைவேற்றி கொடுக்கமுடியமா என்பதை நேரில் பரஸ்பரம் கருத்து பரிமாறிக் கொள்ள நடைபெற்ற இந்த சந்திப்பு விசேஷ முக்கியத்வம் பெற்றதாகும்.

இந்த ஆன்ஸிலரி தொழில்கள், வாகன தயாரிப்பாளர்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் நல்ல உயர்தரமான பாராட்டுகளைத் தயாரிப்பதோடு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருவதை மந்திரி திரு சிங் பாராட்டினர். சுலபமாக கிடைக்காத மூலப்பொருள்களைப் பெறுவதிலும், இறக்குமதி செய்துக் கொள்வதற்கும் தற்சமயம் இவர்களுக்கு விசேஷ சலுகை எதுவும் கிடைப்பதில்லை. ஒரு மோட்டார் வாகனத்தில் உபயோகிக்கப்படும் மொத்த பார்ட்டுகளில் 90 சதவிகித பார்ட்டுகளை இவர்கள் தயாரித்து கொடுத்தும் இந்த நிலை! பெரியளவில் பார்ட்டுகளை வாங்குபவர்கள் கோரும் கடன் நிபந்தனைகளும் இவர்கள் சக்திக்கு மீறியதாக இருக்கிறது. பாங்குகள் போன்ற நிதி ஸ்தாபனங்கள் கூட, இவர்களுக்கு விசேஷ சலுகைகள் எதுவும் அளிப்பதில்லை.

இதனல் இவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் என்று திரு சிங் சுட்டிக் காட்டினர்.

வீண் அபாண்டம்!

மோட்டார் வாகனங்களின் தரம் பற்றிய புகார்களுக்கு இந்த ஆன்ஸிலரி தொழில்கள்தான் பொறுப்பு என்று வாகன தயாரிப்பாளர்கள் குற்றம் சாட்டியிருப்பது வீண் அபாண்டமாகும். பாண்டே கமிட்டிகூட இக் கூற்றை ஒப்புக் கொள்ளவில்லை என்று திரு சிங் கூறினர்.

பேப்பர் பாட்டரி!

இப்போது பேப்பர் (காகித) பாட்டரி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது!

''எனர்ஜி பேப்பர்'' என்று அழைக்கப்படும் இந்த புதிய (வேப்பர்) காகிதம் மிக மிக மெல்லியதாக இருக்கிறது. இதைக் கொண்டு தயாரிக்கப்படும் பாட்டரியானது ஒரு அவுன்ஸில் பத்தில் ஒரு பங்கு எடைக்கும் கம்மியாக இருக்கிறது!

ஷவரக் கருவிகளில் இது வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. ஒரு சுக ஷவரத்திற்கு வேண்டிய கரெண்ட், ஐந்து நிமிஷங்களுக்கு தாராளமாகக் கிடைக்கிறது. மற்ற மின்சாரக் கருவிகளுக்கும், பாட்டரி இறங்கிப்போன மோட்டார் வாகனங்களை ஸ்டார்ட் செய்வதற்கும்கூட இதை பயன்படுத்த முடியுமாம்.

இந்த பேப்பர் பாட்டரி எங்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? ஹாலந்தில்.

கந்தளி - ஜோலார்பேட்டை பஸ் ரூட் வழக்கு

ஹைக்கோர்ட்டில் ரிட் மனுக்கள் தோல்வி

கந்தளி—ஜோலார்பேட்டை இடையே பஸ் சர்வீஸ் நடத்துவதற்கு திரு. ஆர். கோவிந்தசாமிக்கு ஒரு பெர்மிட்டை ஆர். டி. ஏ. வழங்கினர். ஆனல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அப்பீல் டிரிபூனல் (STAT), மனுதாரின் தகுதிகளை ஆராய்ந்து பார்த்தபின், இந்த பெர்மிட்டை திரு சாரங்க செட்டியாருக்கு கொடுத்தது.

இதை எதிர்த்து திரு. ஆர். கோவிந்தசாமி, சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு ரிட் வழக்கு போட்டார். இதே உத்திரவால் பாதிக்கப்பட்ட வேறு இரு கட்சிக்காரர்களும் இதேபோல ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டனர். டிரிபூனலின் தீர்ப்பை ரத்துச் செய்யும்படி கேட்டு இந்த ரிட் வழக்குகளை இவர்கள் போட்டிருந்தனர்.

இம் மூன்று ரிட்டுகளையும் ஒன்ருக விசாரித்த ஹைக்கோர்ட் நீதிபதி திரு T. வெங்கடாத்திரி, மூன்றையும் தள்ளுபடி செய்திருக்கிருர். திரு சாரங்க செட்டியாரின் ஒர்க்ஷாப்பானது ஒரு பெரிய கட்டிடத்தில் இருக்கிறது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேர்ச்சி பெற்ற சிப்பந்திகளையும், தேவையான எல்லா டூல்ஸ்களையும் இவரது ஒர்க்ஷாப் கொண்டிருக்கிறது. திரு கோவிந்தசாமியின் ஒர்க்ஷாப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், எல்லாவகையிலும் திரு சாரங்க செட்டியாரின் ஒர்க்ஷாப் மேலானதாகவே இருக்கிறது. ஆகையால் டிரிபூனல் அளித்த தீர்ப்பு தவருனது என்று சொல்ல முடியாது என்று ஹைக்கோர்ட் நீதிபதி தீர்ப்பளித்திருக்கிருர்.

எகிப்துக்கு TMB வண்டிகள்

'டெல்க்கோ'வுக்கு மிகப் பெரிய ஏற்றுமதி ஆர்டர்

ஐக்கிய அரபு குடியரசுக்கு, ரூ. 75 லக்ஷத்திற்குமேல் மதிப்பு கொண்ட, பல்வேறு ரக டாட்டா—மெர்ஸிடெஸ்—பென்ஸ் வண்டிகளையும், ஸ்பேர் பார்ட்டுகளையும் சப்ளை செய்ய 'டெல்கோ,' ஒரு மிகப்பெரிய ஆர்டரைப் பெற்றிருக்கிறது.

இதில் முதல் தவணையாக 40 டம்பர்கள், செப்டம்பர் 7ந்தேதி கல்கத்தாவிலிருந்து எகிப்துக்கு கப்பலேறின.

அறிவிப்பு

ஷாமா பிஸ்டன்
ஷாமா ரிங்குகள்



எல்லாவித வாகனங்களுக்கும் இண்டஸ்டிரியல் என்ஜின்களுக்கும் ஏற்ப இப்பொழுது இந்தியாவில் மிக நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது

தென்னிந்திய விநியோகஸ்தர்கள் :

திலீப்குமார் அண்டு கம்பெனி

32/33, லிங்கி செட்டித் தெரு,
சென்னை-1
போன் : 22278—27239

சேல் பில்கள் பற்றி சென்னை ஹைக்கோர்ட் முக்கிய தீர்ப்பு

சரியாக இல்லாவிடில் லாரி ஓனர்களை தண்டிக்க முடியாது

ஸ்ரீ பழனியப்பா டிரான்ஸ்போர்ட்ஸ் 'ரிட்' வழக்கு வெற்றி

ஒரு லாரி கம்பெனியானது, அது அதன் லாரியில் ஏற்றிச் செல்லும் சரக்குகளுக்கு சரியான "சேல் பில்"லை எடுத்துச் செல்ல தவறும் பட்சத்தில், விற்பனைவரி சட்டத்தின 45வது பிரிவுப்படி, லாரி கம்பெனிமீது நடவடிக்கை எடுக்க முடியுமா?

முடியாது என்று சென்னை ஹைகோர்ட் ஒரு முக்கிய தீர்ப்பளித்திருக்கிறது.

ஸ்ரீ பழனியப்பா டிரான்ஸ்போர்ட்ஸ்க்கும், புழல் செக்போஸ்ட் வணிகவரி அதிகாரிக்கும் இடையே மூண்ட வழக்கு இது. **(W. P. 626/67 dt. 27-11-67).**

இந்த செக் போஸ்டில் இருந்த அதிகாரி, லாரி டிரைவர் வைத்திருந்த தஸ்தாவேஜுகளை சோதனை செய்தபோது, லாரியில் ஏற்றப்பட்டிருந்த சரக்குகளுக்கு, சேல்ஸ் பில்கள், வரிசைக்கிரமமாக நம்பர் குத்தப்படாமல் இருந்ததை கண்டு பிடித்தார். உடனே லாரி டிரைவருக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்தார். சரக்கு சொந்தக்காரர் கட்டவேண்டிய ரூ. 120 வரியை உடனே கட்டும்படியும், லாரி கம்பெனிக்கு மற்றொரு நோட்டீசையும் கொடுத்தார். சரக்கு சொந்தக்காரர், லாரி ஓனர் இருவருமாக சேர்ந்து இஷ்டப்பட்டால் ரூ. 500 கட்டி குற்றத்தை இலாகா ரீதியாக் 'கம்பௌண்டு' செய்துக் கொள்ளலாம் என அதிகாரி தெரிவித்திருந்தார்.

சரக்கு சொந்தக்காரருக்கு பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸானது, பிற்பாடு ரத்து செய்யப்பட்டு விட்டது; ஆனால் லாரி கம்பெனிக்கு பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸானது, ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இதை ஆட்சேபித்தே ஸ்ரீ பழனியப்பா டிரான்ஸ்போர்ட்ஸ், சென்னை ஹைக்கோர்ட்டில் "ரிட்" வழக்கு போட்டது.

ஸ்ரீ பழனியப்பா டிரான்ஸ்போர்ட்ஸின வாதத்தை ஹைக்கோர்ட் ஏற்றுக் கொண்டது. "லாரி ஓனரானப்பட்டவர், ஒரு டீலர் அல்ல; இவர் ஒரு குற்றமும் புரியவில்லை. சரக்கு அனுப்பியவர் ஏதோ ஒரு தவறு இழைத்திருந்ததாக வைத்துக் கொண்டால்கூட, வணிகவரி இலாகாவே இதற்கு அவரிடமிருந்து வரி எதையும் வசூலிக்கவில்லை. ஆகவே, சரக்கை அனுப்பியவரே தப்பித்திருக்கும்போது அல்லது சட்டப்பூர்வமான முறையில் சரக்கை ஏற்றி அனுப்பியிருப்பதாக கருதப்படும்போது, லாரி ஓனருக்கு தரப்பட்ட நோட்டீஸ் நியாயமற்றது. லாரி ஓனர் மீது விதிக்கப்பட்ட கம்பௌண்டிங் அபராத தொகை உத்திரவை ரத்துச் செய்கிறேன்" என்று ஹைக் கோர்ட் நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்.

ஹோவர்கிராப்ட்டுகளை இந்தியா வாங்கும்

கள்ளக் கடத்தல்களைத் தடுப்பதற்கு ஹோவர் கிராப்ட்டுகளையும், அதிவேகமாகப் போகும் மோட்டார் படகுகளையும் இந்திய சர்க்கார் வாங்கும என்று மததிய துணை நிதி மந்திரி திரு கே. ஸி. பந்த், சென்னையில் ஒரு விழாவில் அறிவித்தார்.



தயாரிப்பாளர்கள் : **ஏ. ஆர். இண்டஸ்ட்ரீஸ்,** ஜலந்தர் நகரம்.

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள் :

பிரிட்டிஷ் மோட்டார் கார் கம்பெனி (1934) பிரைவேட் லிமிடெட்,

ஜி. டி. ரோடு, ஜலந்தர் நகரம்.

ரிங்குகளுக்கு விற்பனையாளர்கள் : **தி பயனீர் (மதருஸ்) பிரைவேட் லிட்.,** 23, மவுண்ட் ரோடு, சென்னை-2. ● ஆக்சில்களுக்கான விற்பனையாளர்கள் : **தி ஆட்டோ சேல்ஸ் கம்பெனி,** 42, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2. ● **ஜெனுயின் ஆட்டோமொபைல்ஸ்,** பாரத் டாக்கீஸ் எதிரில், பெங்களூர்-2.

இக்கரைக்கு அப்பால்

புதுவகை தெரு விளக்கு

டிரான்ஸிஸ்டர் ரேடியோக்களில் இருக்கும் ஏரியல்களை பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? இதைப்போலவே இஷ்டப்படி இழுத்து நீட்டாக உயர்த்தவும், மடக்குவதற்கும் ஒரு புது மாதிரி தெரு விளக்கு கம்பங்களை ஒரு பிரிட்டிஷ் கம்பெனி தயாரித்திருக்கிறது.

இப்போதுள்ள தெரு விளக்குகளில் பல்புகளை மாற்றுவதிலிருந்து பழுது பார்ப்பதுவரை எல்லா வேலைகளுக்கும் ஏணியின் உதவி தேவைப்படுகிறது. ஏணியை பிடித்துக்கொள்ள ஒருவர், ஏறி வேலை செய்ய ஒருவர் தேவை.

புது மாதிரி தயாரிக்கப்பட்டிருக்கும் கம்பத்தை தரையில் நின்றபடியே விளக்கின் உயரத்தை கூட்டவோ, குறைக்கவோ முடியும். தனி ஆள் சென்றால்கூட, தரையில் நின்றபடியே விளக்கு கம்பத்தின் உயரத்தைக் குறைத்து, வேலைகளை முடித்து, பிறகு மீண்டும் அதை உயரே ஏற்றிவிடக் கூடிய வசதி உள்ளது இந்த வகை விளக்கு.

மோட்டார் பந்தயத்தில் 'செஞ்சுரி' போட்டவர்

பிரிட்டனைச் சேர்ந்த கிரஹாம் ஹில் என்ற 39 வயது இளைஞர் மோட்டார் பந்தயத்தில் 'செஞ்சுரி' போட்டிருக்கிறார். ஆம்; இதுவரை நூறு மோட்டார் பந்தயங்களில் கலந்து கொண்ட இவரின் நூறாவது பந்தயம் 8-9-68 அன்று நடைபெற்றது.

இதனைக் கொண்டாடுவதற்காக விசேஷ விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் இந்த இளைஞர் பாராட்டப்பட்டார். நிகழ்ச்சியில் இவருக்கு சிறப்பான ஓவியம் ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது. பந்தயங்களில் இவர் பயன்படுத்திய 'கார்' மாடல்கள் இந்த ஓவியத்தில் வரையப்பட்டிருந்தன.

கார் திருடர்களை பிடிக்க புதிய கருவி

கார் திருடர்களைப் பிடிக்க ஒரு புதிய கருவியை "ஹார்ட்லார்ம் லிமிடெட்" (50, பால்ஸ் பாண்டு ரோடு, லண்டன் N. I.) என்ற பிரிட்டிஷ் கம்பெனி கண்டு பிடித்திருக்கிறது. டிரைவர் அமரும் இடத்திற்கு கீழே இந்த கருவி பொருத்தப்படுகிறது. காரிலுள்ள ஹாரனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. கடிகாரத்துக்கு சாவி கொடுப்பது போல ஒரு சாவி இருக்கிறது. சாவி கொடுத்துவிட்டு, கதவை மூடி நாம் வெளியே போய்விடலாம். யாரவது கார் கதவை திறந்தால் போதும். உடனே ஹாரன் அலறுகிறது!

அரிப்பை தடுக்க புதுவகை பெயிண்ட்

கர்ரோடெக் லிமிடெட் என்ற பிரிட்டிஷ் நிறுவனம் ஐந்தாண்டு தீவிர ஆராய்ச்சிக்குப்பின் ஒரு புதுவகை பெயிண்டை கண்டு பிடித்திருக்கிறது. ஒரு பொருள் மீது இருமுறை இந்த பெயிண்டை அடித்தால் ஐந்தாண்டுகளுக்கு அரிப்பைத் தடுக்கலாம். வெப்பத்தை தாங்கும்; அமிலங்கள் சிந்தினால் பாதிக்காது.

ஜீப்பில் உலகப் பிரதட்சணம்!

22 முதல் 25 வயதுக்குட்பட்ட 5 பிரிட்டிஷ் இளைஞர்கள் (3 இன்ஜினீர்கள், 1 பயர்மென், 1 எலக்ட்ரீஷியன்), பிரத்யேக வசதிகள் கொண்ட ஒரு பெரிய "ஜீப்"பில் உலகப் பிரதட்சணம் செய்ய புறப்படவிருக்கின்றனர். தரைப்பயண

தந்தி: "UTILUX"
போன்: 39243

டயமண்டு மோட்டார்ஸ் (இந்தியா)

ஆபரா ஹவுஸ், 24-A, 2-வது பாட்வாடி, பம்பாய்- 4



கோரியபடி சரியாகச் சப்ளை செய்வது
எங்கள் சிறந்த குணமாகும்.

ஆர்மேசர் வயர்ஸ் (டி.ஸி.ஸி.யில் எல்லா கேஜுகள், காப்பர்—எஸ்.ஸி.ஸி.—சூபர் எனமல் பூசப்பட்டது)

இன்சுலேடிங் மெடீரியல்ஸ் (லெதராயிட்-ஆயில் பேபர்—மைகா—சோல்டர் வார்னிஷ்)

ஜெனரல் & ஸ்டார்டர் பார்ட்ஸ் (புஷ்கள்—கார்பன் பிரஷ்—ஸ்பிரிங்குகள்—பீல்டு காயில்கள்)
பாட்டரி பிளேட்ஸ் (மரம், பைபர் கிளாஸ் ஸெபரேட்டர்கள் முதலியவை)

எல்லாவித எலெக்டிரிகல் பகுதிகளின் விலை ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லாகார், டிரக்குகளுக்கும் தேவையான ஜெனரேட்டர் மற்றும் ஸ்டார்டர் புஷ்ஷிங்குகளுக்கு ஸ்டாக்கிஸ்டுகள்

மாக 60 ஆயிரம் மைல்கள் ஜீப்பை ஓட்டி பூமியை ஒருமுறை வலம் வருவார்கள். இந்தியாவில் பல இடங்களை சுற்றிப் பார்ப்பார்கள். 400 ராத்தல் உணவுப் பொருள்களும், சர்க்கரை, காப்பி தேயிலை முதலியவைகளையும் எடுத்துக் கொண்டு புறப்படுகிறார்கள். அந்தந்த இடத்தில் தங்கியிருக்கும்போது தற்காலிக வேலைகளை செய்து சம்பாதித்து பிரயாண செலவுக்கு பணம் சேர்த்துக் கொள்ளலாம் என்று இவர்கள் நினைக்கின்றனர்.

கண்ணாடி ஒயர்கள்!

எலக்டிரானிக் கருவிகள் போன்ற அதிக மின் சக்தி பாயவேண்டிய ஒயர்கள் ரப்பர் இன்சுலேஷனைக் கொண்டிருந்தால், மிகுந்த வெப்பத்தில் இது உருகிவிடுமாதலால், மெல்லிய கண்ணாடி இன்சுலேஷன் கொண்ட ஒயர்களை இங்கிலீஷ் எலக்டிரிக் கம்பெனி இப்போது தயாரித்து வழங்குகிறது.

ஹோவர் நிலையங்கள்

ஹோவர் கிராப்ட் சர்வீஸ் பிரபல மடைந்து வருவதையொட்டி பிரிட்டனில் மேலும் 2 ஹோவர் நிலையங்கள் அமைக்கப்படும். ஏற்கெனவே லண்டன்-பிரான்ஸ் இடையே நடைபெறும் தினசரி சர்வீசுக்கு ஒரு ஹோவர் நிலையம் அமைக்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.

பிரபல திருமணங்கள்

சாந்தா—சுகுமாரன்

சென்னை, ஜார்ஜ் ஓக்ஸ் லிட்., டிபுடி ஜெனரல் மானேஜர் திரு எம். கே. பிள்ளையின் புதல்வி சௌ. சாந்தாவுக்கும், சிர. சுகுமாரனுக்கும் 6-9-1968 அன்று பம்பாய் மகாலக்ஷ்மி கோவிலில் விமரிசையாக திருமணம் நடந்தது.

மகாலக்ஷ்மி—வெங்கட்ராம்

திரு என். பாலகிருஷ்ணாவின் (J. P.) புதல்வி சௌ. மகாலக்ஷ்மிக்கும், சிர. பாபு என். வெங்கட்ராமுக்கும் 8-9-68 அன்று பம்பாயில் விமரிசையாக திருமணம் நடந்தது.

சக்தி!

MRF-ன் புது டயர்

மதராஸ் ரப்பர் பாக்டரி தயாரிக்கும் புது டயருக்கு "சக்தி" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த டயரைக் காட்டிலும், வலுவானதாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாகவும், அதிக பாரம் தாங்கும் சக்தி கொண்டதாகவும் இருப்பதால் இதற்கு "சக்தி" என்ற பெயரை தேர்ந்தெடுத்ததாக MRF-ஸ்தாபனத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் இந்த "சக்தி" விற்பனைக்கு விடுவிக்கப்பட்டிருக்கிறது.

ஆதாரம்: "மஸில்மேன்"

ரோல்ஸ்-ராய்ஸின் புது இன்ஜின்

புது வகை சிறு விமானமான "ஏர் பஸ்"களுக்கு (ஆகாய பஸ்கள்) தகுதியான ஒரு புதிய இன்ஜினை ரோல்ஸ்-ராய்ஸ் ஸ்தாபனம் தயாரித்திருக்கிறது. அமெரிக்கா உள்பட பல நாடுகளிலிருந்து இதற்கு 18 கோடி பவுன்களுக்கு ஆர்டர் குவிந்திருக்கிறது. ★

டன்லப் ஊழியரின் படைப்புதான் 'வியட்நாம் வீடு'

சிவாஜி கணேசன் நடிக்கும் "வியட்நாம் வீடு" நாடகத்தை எழுதியிருக்கும் திரு. எஸ். கல்யாணசுந்தரம் யார் தெரியுமா? அம்பத்தூர் டன்லப் தொழிற்சாலையில், சைக்கிள் கவர் செக்ஷனில் இன்ஸ்பெக்டராக வேலை பார்ப்பவர்தான் இவர். "சுந்தரம்" என்று பிரியமாக அழைக்கப்படும் இவர், சென்ற வருஷம் தொழிற்சாலை பாதுகாப்பு வாரத்துக்கு எழுதிய ஒரு நாடகத்தை இவரது சகாக்கள் நடித்துக் காட்டினர். இதே நாடகம் பிறகு ரேடியோவிலும் ஒலிபரப்பப்பட்டது.

"வியட்நாம் வீடு" நாடகத்தின் வெற்றி, இந்த இளம் எழுத்தாளரையே சாரும் என்று சிவாஜி கணேசன் பாராட்டியிருக்கிறார்.

—டன்லப் கெஜெட்டிலிருந்து

எல்லா
ஆயில் சீல்களும்
ஒன்றே என நினைத்தால்
நீங்கள்
நோஷனல்
ஆயில்சீலை
உபயோகித்திருக்க
மாட்டீர்கள்.



இந்தியாவில் கிடைக்கும்
முதல்தரமான ஆயில்சீல்

கார், டிரக், டிராக்டர் மற்றும்
ஸ்டேஷனரி என்ஜின்களுக்கு ஏற்றது

தயாரிப்பாளர்கள்:
இந்தியா ஆட்டோ இண்டஸ்டிரீஸ்
(ரிஜிஸ்டர்டு)
பட்டேல் மோட்டார் மார்க்கெட்,
காஷ்மிரி கேட், டில்லி-6.
போன்: 223213
விநியோகஸ்தர்கள் தேவை

ஓவர்ஹெட் கேம்ஷாப்ட்

புதுரக

ஒரே வார்ப்பில் சிலிண்டர் ஹெட்-பிளாக்

லேலண்டு இன்ஜின்

★ ஹெட்-காஸ்கெட்டே தேவையில்லை ! ★

அடியோடு ஒரு புது மாதிரியான டிசைனில், ஒரு புதிய டீஸல் இன்ஜினை பிரிட்டிஷ் லேலண்டு மோட்டார் கார்பரேஷன் தயாரித்திருக்கிறது. செப்டம்பர் 20 முதல் 29ந் தேதிவரை லண்டன், எர்ல்ஸ் கோர்ட்டில் நடைபெறவிருக்கும் உலக மோட்டார் கண்காட்சியில், முதல் தடவையாக இந்த புது இன்ஜின், பொதுமக்கள் பார்வையிட வைக்கப்படும்.

லங்காஷைரிலுள்ள புதிய லேலணடு தொழிற்சாலையில் இந்த இன்ஜின் தயாரிக்கப் படும். இந்த தொழிற்சாலையில்தான் இதற்கான டிசைன் உருவாகியது.

500 கன அங்குலம் கொண்ட, 6 சிலிண்டர் நேர்முக இன்ஜெக்ஷன் இன்ஜின் இது ஓவர் ஹெட் கேம் ஷாப்ட் வால்வ் கியர் ஏற்பாட்டைக் கொண்டது. மிகவும் சக்தி வாய்ந்த ஹை-பிரஷர் டார்போ இயக்க இன்ஜின். வேறு எந்த 4 ஸ்டி ரோக் டீஸல் இன்ஜினைக் காட்டிலும் ராக்ஷச சக்தி படைத்தது. டீஸல் இன்ஜின் சரித்திரத்திலேயே இதற்குமுன் வேறு எவரும் தயாரிக்காத புதுவகை இன்ஜின் இது.

விசேஷ அம்சங்கள்

இந்த புதிய "500" சீரிஸ் இன்ஜின், லேலண்டு நிலை நாட்டியிருக்கும் பரம்பரை புகழ் வரிசையில் உறுதிக்கும், உத்திரவாதத்துக்கும் பெயர் பெற்று விளங்கும். ஏற்கெனவே லேலண்டு இன்ஜின்கள் மேன்மேலும் புதுபுது முறையில் அபிவிருத்தியடைந்து வந்திருக் கின்றன அண்மையில் ஸ்பிராய்டல் கம்பஸ்சன் சேம்பரும், புதுவகை பிஸ்டன்களும் லேலண்ட் இன்ஜின்களில் புகுத்தப்பட்டது இந்த அபி விருத்திகளில் முக்கியமானதாகும்.

மேற்படி புதிய இன்ஜினில் உள்ள விசேஷ அம்சங்களில், ஓவர்ஹெட் கேம் ஷாப்ட் முக்கிய மாக குறிப்பிடத்தக்கது. வால்வ்களை இயக்கும் உறுப்புகளின் எண்ணிக்கையை இது குறைத்து, வால்வ்கள் கனகச்சிதமாக வேலை செய்ய வகை செய்கிறது. இன்ஜின் ஸ்பீடையும் அதிகரித்து கொள்ளக்கூடிய வகையில் இந்த ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஹெட்-காஸ்கெட்டே தேவையில்லை !

மற்றொரு விசேஷம் என்ன வென்றால், சிலிண்டர் பிளாக்கும், சிலிண்டர் ஹெட்டும் ஒன்றாக இருக்கிறது. ஆரம்பகாலத்தில் இந்த இரண்டும் ஒன்றாகத்தான் இருந்தன. லேலண்டு ஸ்தாபனத்தினரும், மற்ற இன்ஜின் தயாரிப் பாளர்களும் 40 ஆண்டுகளுக்கு முன்பு இதை நிராகரித்து, பிளாக்கையும், ஹெட்டையும் தனித் தனியாக தயாரிக்க ஆரம்பித்தனர். இப்போது திரும்ப இதை லேலண்டு ஒரே யூனிட்டாக தயாரித்து புகுத்தியிருக்கிறது. நவீன யுக்திகளைப் புகுத்தி இதை ஒரே யூனிட்டாக லேலண்டு அபி விருத்தி செய்திருக்கிறது.

இதற்கு சிலிண்டர் ஹெட்-காஸ்கெட்டே தேவையில்லை !

ஈரானில் புது தொழிற்சாலை

லேலண்டு டீஸல் இன்ஜின்களை ஈரான் நாட் டில் தயாரிக்க அங்கு ஒரு புது தொழிற்சாலையை பிரிட்டிஷ் லேலண்டு மோட்டார் கார்பரேஷன் நிர்மாணிக்கும். ஆண்டொன்றுக்கு இங்கு ஒரு கோடி பவுன் மதிப்புக்கு 15,000 டீஸல் இன்ஜின்கள் தயாராகும்.

டிரக்குகளையும், இன்ஜின்களையும் பூட்டு வதற்கு ஏற்கெனவே டெஹ்ரானில் லேலண்டு ஒரு தொழிற்சாலையை நடத்தி வருகிறது. மேற்கு ஆசியாவிலேயே இதுதான் மிகப் பெரிய ஒப்பந் தம் என்று பிரிட்டிஷ் லேலண்டின் சேர்மன் ஸர் டொனல்டு ஸ்டோக்ஸ் அறிவித்தார்.

Edited & Published by K. Venkataraman and Printed by S. Swaminathan at Manikandan Press, 7/9, State Bank Street, 1st Lane, Mount Road, Madras-2.

எல்லோருடைய நன்மதிப்பையும்

ஒருங்கே பெற்றது

STANDARD

AUTOPARTS

"STANDARD"

"ஸ்டாண்டர்டு" அளிக்கும்
இணையற்ற தரமான
பார்ட்டுகள்



- கிங்பின் செட்டுகள்
- பிஸ்டன் பின்கள்
- ஷாப்ட்டுகள்

STANDARD AUTOPARTS
PVT. LTD.
INDUSTRIAL ESTATE
JODHPUR (INDIA)

Regd. No. M. 7441

THE motor

NOW MORE

MAXIMHO

CABLES

for people who want more and more of Maximho.

ANNOUNCING THE OPENING OF A NEW FACTORY AT AMBATTUR TO MEET THE INCREASING DEMAND FOR

MAXIMHO

CABLES.



Maximho Cables, made with West German equipment under strict quality control, for factories, autos and homes, come in PVC insulation in attractive colours, packed in elegant, economical boxes.

MAXIMHO CABLES FOR MAXIMUM CONDUCTIVITY

Now also made by :

VINYL CABLE INDUSTRIES

F-17, Industrial Estate,
Ambattur, Madras-58.

Associates of

VINYL GENERAL INDUSTRIES,

Industrial Estate, Guindy, Madras-32.

FDSVGI 1619